
புதிய சமுதாயம்

KDN 10657 ஆசிரியர்: முருகு சுப்பிரமணியன் 25-8-1977

11



20 வது ஆண்டு மெர்தேகா சிறப்பிதழ்

PUTHIYA SAMUDHAYAM

50 காசு

20வது ஆண்டு மெர்தேகா சிறப்பிதழ்





விண்ணெலாம் தேவைக் கேற்பத்
    தண்மழை பொழியும், இந்த
மண்ணெலாம் தேவை மிஞ்சும்
    வளந்தர முந்தும், தங்கள்
க்ண்ணிமை யாக வீரர்
    காத்திடும் மலேசி யத்தின்
வண்மை-வன் மைகொள் நெஞ்சோய்;
    மாமன்ன, வாழ்க! வாழ்க!

திருநதி தென்ற லாகத்
    தினந்தவழ்ந் தோடும் நாட்டில்
ஒருகுறை யின்றி மக்கள்
    உயர்கதி ரன்ன பாரில்
பெருமையைப் பெறுவார்; வாழ்வில்
    பேரின்பம் காண்பார்! மக்கள்
பெருமையே தமதாய் எண்ணும்
    பேரர சேரீ வாழ்க!

— பாதாசன்

NA-8

வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனையது உயர்வு — குறள்

புதிய சமுதாயம்

திருவள்ளுவர் ஆண்டு 2008 ஆவணி9
கம்பம் 1 (25-8-1977) குடும்பம் 11

இருபதாண்டுச் சுதந்திரம்

நாம் இந்த ஆண்டு ஆகஸ்டு 31ந் தேதி கொண்டாடுகிற மெர்தேகா விழாவுக்குத் தனி முக்கியத்துவம் உண்டு. நாடு சுதந்திரம் பெற்று 20 ஆண்டுகள் நிறைவு பெறுவதை இந்த ஆண்டு மெர்தேகா கொண்டாட்டங்கள் குறிக்கும்.

கடந்த 20 ஆண்டு காலத்தில் மலேசிய மக்கள் சுதந்திரத்தின் நற்பலன்களை மனநிறைவு அளிக்கத் தக்க விதத்தில் நன்கு அனுபவித்திருப்பதாகவே சொல்லவேண்டும். சுதந்திரம் பெற்ற மற்றும் பல ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளோடு ஒப்பிடும் போது மலேசியாவுக்குக் கடந்த 20 ஆண்டு சுதந்திர வாழ்வு பொருள்மிகுந்ததாக அர்த்தம் நிறைந்ததாக இருந்திருப்பது வெளிப்படை. அனைத்துலக அரசியலில் நாட்டின் அந்தஸ்து மிக உயர்ந்திருப்பது தெளிவு. உள்நாட்டு பிரச்சினைகளைத் தீர்ப்பதிலும், மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதிலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை நாடு கண்டிருக்கிறது. பலஇன சமுதாயமாக திகழுகிற நமது மலேசியத் திருநாட்டின் சுதந்திரச் சகாப்தம், மக்களுக்குப்பொருளாதார ரீதியில் பலன் தந்து வெற்றிகரமாக அமைந்ததற்கு நமக்குக் கிடைத்த பொறுப்புமிக்க, சீரிய தூர நோக்குள்ள, நிதானம் நிறைந்த அரசியல் தலைமைத்துவமே முக்கிய காரணமாகும்.

முதலில் தேசத்தந்தை துங்கு அப்துல் ரஹ்மானும், அதன் பின்னர் நாட்டின் வளர்ச்சித்தந்தை துன்

அப்துல் ரசாக்கும் இப்பொழுது டத்தோ ஹுசேன் ஒன்னும் ஆட்சிப் பீடத்தில் பிரதமர்களாக அமர்ந்து நாட்டை வழிநடத்தி வந்திருப்பது நமக்குக் கிடைத்த பெரும்பேறு என்றுதான் கருதவேண்டும். இத்தகைய அர்ப்பணிப்பு உணர்வுமிக்க விவேகிகளான பெருந்தலைவர்களை அடுத்தடுத்து நாம் பெறமுடிந்தது சுதந்திர வாழ்வு மக்களுக்குச் சுபிட்சமிக்க வாழ்வாக அமைவதற்கு வழிவகுத்துத் தந்திருக்கிறது. எல்லாத் துறைகளிலுமே நாடு, முன்னேற்றத்தைப் படிப்படியாக கண்டுவருவதும் மக்களின் வாழ்க்கைத் தரம் எல்லா மட்டங்களிலும் கணிசமாக உயர்ந்திருப்பதும் நமக்குப் பெருமிதமூட்டும் நிலைமையாகும்.

ஏற்கனவே உள்ள மூலப்பொருட்களோடு எண்ணெய் வளமும் நமக்குப் புதிய தெம்பைக்கொடுத்திருக்கிறது. எதிர்காலத்தில் எண்ணெய்வளம் கொழிக்கும் குபேர நாடுகளில் ஒன்றாக மலேசியா திகழும் என்னும் நம்பிக்கையும் நமக்கு உற்சாகம் தருவதாகும்.

இருபதாவது ஆண்டு மெர்தேகா நிறைவைக் கொண்டாடுகிற இவ்வேளையில் நமது மக்கள் தங்களுக்கு இயல்பாக அமைந்துவிட்ட சகிப்புத் தன்மை, நேசப்பான்மை, நடைமுறை நோக்கு, சலியாத உழைப்பு, முன்னோடி உணர்வு ஆகிய பண்புகளை மேலும் வளர்த்துக்கொள்ள உறுதி பூண்பது முக்கியமாகும். மலேசியா இந்த அளவுக்குச் செல்வம் கொழிக்கும் பூமியாகத் திகழ்வதற்கு நமது பலஇன மக்களிடையே அமைந்திருக்கிற இந்த உயரிய பண்புகளும் முக்கிய காரணம் என்பதைக் குறிப்பிடவேண்டும். தேசிய ஒற்றுமை, மக்களின் ஐக்கியம், சமூக நல்லுறவு முதலியவை மலேசியத் திருநாட்டின் நிலைத் தன்மைக்கு இன்றியமையாத கூறுகளாகும். நமது பலஇன மக்கள் தேசியக் கோட்பாடான ருக்குன் நெகாரா அடிப்படையில் நாட்டின் ஐக்கியத்தைப் பேணிக்காப்பதில் பெரிதும் புரிந்துணர்வோடு, ஆழ்ந்த பொறுப்போடு நெடுகிலும் நடந்து வந்திருக்கின்றனர். அதனால்தான் 20 ஆண்டுகளைச் சுதந்திரத்தில் நாடு விரைந்து தடையற்ற முன்னேற்றத்தைக் காண முடிந்திருக்கிறது.

மலேசிய நாட்டுக்குப் பாதகமாய்ட முக்கியப் பிரச்சினை என்பதை நமது பிரதமர் டத்தோ ஹுசேன் ஒன் தாம் பொறுப்பேற்றது முதல் அழுத்தமாக வலியுறுத்தி வருகிறார். அத்துடன் கிழறுப்புச்சக்திகளை ஒடுக்குவதிலும், எல்லைப் பகுதிகளில் பயங்கரவாதிகளைத் துடைத்தொழிப்பதிலும் தாய்லாந்து அரசாங்கத்தின் கூட்டுறவோடு அண்மைக்காலத்தில் பிரமிப்பூட்டும் பல வெற்றிகளை நாம் அடைந்துவருவது கண்கூடு. அதுபோலவே போதைப்பொருள், சம்சு போன்ற பீடைகளை ஒழிப்பதிலும் மக்களின் ஆதரவோடு அரசாங்கம் நல்ல வெற்றிகளை ஈட்டிவருகிறது.

மலேசியா சின்ன நாடு என்றாலும் உலகமே வியக்கும் வகையில் முறையான வளர்ச்சியினாலும், திறம்பட்ட ஆட்சியாலும், நிதானமான உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கையினாலும் உலகஅரங்கில் தனக்கென்று சிறப்பான இடத்தை தேடிக்கொண்டிருக்கிறது. நமது 20 ஆண்டு சுதந்திரம் பயன்மிக்கதாக அமைந்தது என்பதற்கு இது நல்ல ஆதாரமாகும். வருகின்ற ஆண்டுகளிலும் மலேசியா உலக அரங்கில் பீடு நடைபோட நமது தலைவர்களும், நமது மக்களும் தொடர்ந்து தங்களை அர்ப்பணித்துக்கொள்வர் என்பதிலும் நமக்கு ஐயமில்லை.

வாழ்க மெர்தேகா! வாழ்க மலேசியா!

எல்லோரும் ஓர்குலம்



மலேசியாவிலுள்ள மனிதாபிமானம், அமைதியையும் முன்னேற்றத்தையும் விரும்புகிறது. மலேசியாவிலுள்ள மனிதாபிமானம் பல்வேறு இனங்களாலும் மொழிகளாலும் ஆனது. உணவிலும், மொழியிலும் வேறுபாடுகள் உண்டு. ஆனால் இத்தகைய மனிதாபிமானத்தைப் பலப்படுத்துவதற்கு முக்கியமான சக்தி ஒன்று உண்டு. அது கௌதம புத்தராலும் முகமது நபியாலும், கிருஷ்ண பரமாத்மாவினாலும், கன்பூசியசினாலும், யோகிகளாலும் நமக்கு வழங்கப்பட்ட அசைக்க முடியாத நம்பிக்கையாகும். அதுதான் எல்லோரும் ஓர் குலம். சகோதரத்துவத்திலும் நல்லெண்ணத்திலும், நட்பிலும், புரிந்து கொள்ளும் தன்மையிலும் ஒன்றுபட்டவர்கள் என்பதாகும். இவற்றையே நாம் விரும்புகிறோம்.

சிறந்த வீட்டில் சிறந்த குடும்பம் - இதனை மகிழ்ச்சி மிக்க மலேசியாவில் காண்போம். அதனை அடைய நாம் ஒவ்வொருவரும் இதனை லட்சியமாகக் கொண்டு கடமை உணர்வோடு பணி புரிவோம்.

துன் வீ. தி. சம்பந்தன்

தலைவர், தேசிய ஒற்றுமை வாரியம்

சுதந்திரச் சிற்பியின் சிறப்புச் செய்தி



நமது மெர்தேகாவின் ஆண்டு விழா இந்த ஆண்டு நோன்பு மாதத்தில் வருகிறது. இந்த மாதம் இறைவனின் மாட்சிபற்றி நாம் சிந்திக்கின்ற மாதமாகும். பகல் நேரத்தில் ஆகாரமும் நீரும் துறந்து, இரவில் மட்டும் உண்டு, இறைவன்மீது நமக்குள்ள நம்பிக்கையை இச்சமயத்தில் நாம் புலப்படுத்துகிறோம்.

முஸ்லிம்களுக்கு இந்த நோன்பு கடுமையான சோதனையாகும். எனினும் இஸ்லாத்தின் மாபெரும் கோட்பாடுகளில் ஒன்றைக் கடைப்பிடிக்கும் முறையில் இறைவனுக்குச் செலுத்தும் கடமையாக இதனை நாம் நிறைவேற்றி வருகிறோம். பசி என்றால் என்ன என்பதை அறிந்து கொள்ள, ஒரே வழி ஆகாரம் புசிக்காமல் இருப்பதே ஆகும். இந்தப் புனித மாதத்தின் இறுதியில் ஏழைகளுக்குத் தர்மம் புரியும்படி நாம் அனைவரும் அழைக்கப்படுகிறோம். இதனை "ஃபித்ரா" என்று சொல்கிறார்கள். நாம் இந்தத் தருமத்தை மனமுவந்து ஆர்வத்துடன் வழங்குகிறோம்.

நமது மெர்தேகா இந்த மாதத்தில் வந்திருக்கிறது. உலகத்தின் சுதந்திர மக்கள் என்னும் முறையில் நமக்கு விடுதலையையும், மனுக்குல கௌரவத்தையும் நல்கி இருக்கும் இறைவனின் அருட்கொடையை நினைத்துப் பார்க்கும்போது வழக்கத்தைவிட மேலும் சமயப் பற்றோடு இந்த நோன்பை நாம் நிறைவேற்றுகிறோம். நமது இரட்சகரான இறைவனுக்கு அவனுடைய மகத்துவத்தையும் கருணையையும் நினைத்து நன்றி செலுத்துகிறோம்.

மெர்தேகா நமக்கு மகிழ்ச்சியையும், மனநிறைவையும், நம் நாட்டுக்குச் செல்வ வளத்தையும் நல்கி இருக்கிறது. இதற்காக இறைவனின் பெருங்கருணைக்குப் பாத்திரமானவர்களாக நம்மை நாம் மெய்ப்பித்துக்கொள்ள வேண்டும். இறைவனுக்கு நன்றி செலுத்துவதோடு, நம் அண்டை நாட்டினர், நமது சொந்த மக்கள் அனைவருக்கும் நியாயமானவற்றை நாம் செய்துவரவேண்டும்.

முஸ்லிம்களாயினும், முஸ்லிம் அல்லாதவர்களாயினும் நம்மோடு இந்த நாட்டைப் பகிர்ந்துகொண்டிருக்கும் எல்லா மக்களுக்கும் நான் சொல்வது இதுதான்; இந்த நாட்டை இன்றுள்ள மாதிரி-இன்பமும் சுபிட்சம் நிறைந்த தேசமாக்க ஒரு சமூகத்தைக் காட்டிலும் அதிகமானவர்கள் தேவைப்படுகிறார்கள்.

எனவே மலாய்க்காரர்களாகிய என் சொந்த மக்களுக்கு நான் எப்பொழுதும் கூறுகிற அறிவுரை: மெர்தேகா தினத்தன்று மற்றவர்களை மறக்கக்கூடாது என்பதுதான். ஆகவே இந்த நாட்டைத் தங்கள் தாயகமாக ஆக்கிக்கொண்டிருக்கும் மற்ற அனைவருக்கும் நமது நேசக் கரத்தை நாம் நீட்டவேண்டியது அவசியமாகும்.

நம் வாழ்க்கையையும், சுதந்திரத்தையும் அமைதியாகவும், இன்பமாகவும் நாம் அனுபவிப்பதற்கு இந்த உணர்வு எல்லாக் காலங்களுக்கும் நீடிப்பது இன்றியமையாதது. எல்லாக் காலங்களுக்கும் இறைவனின் ஆசிகளை நாம் தொடர்ந்து பெறுவோமாக.

மெர்தேகா!

Takdir
16, Jalan Ayer Rajah,
Pulau Pinang.

MESSAGE FROM YTM TUNKU ABDUL RAHMAN PUTRA ALHAJ.

The anniversary of our Merdeka falls this year in Bulan Puasa, the month when we give our thoughts to the glory of God and show our faith in Him by denying ourselves food and water during the day and eat only at night.

This fasting is most trying to the Muslims and yet we carry on with it as our duty to God in observance of one of the great principles of Islam. To go without food is the only way to know what it is to be hungry, and at the end of this great month we are all made to give alms to the poor and this is called fitrah and we give alms willingly and readily

Our Merdeka falls during this month. To those who remember God's gift to us, giving us freedom and human dignity as free peoples of the world, we carry out our fasting even more religiously than usual and we give thanks to Him, our Benefactor, in remembrance of His Magnificence and kind mercy.

Merdeka has brought us happiness and contentment and our country prosperity, and for thi, we must prove ourselves worthy of His Magnanimity. While we give thanks to Him we must do what is right to all our neighbours and our own people.

To all people who share this country with us, whether they be Muslims or non-Muslims, I will say that it takes more than one race, more than one people to make this country what it is today - a happy and prosperous country.

So I always advise my own people, the Malays, not to forget others on Merdeka Day, and so we should extend our hand in friendship to all others who have made this country their home.

This spirit must continue for all time so that we can enjoy our life, our freedom, in peace and in happiness, and may we continue to have the blessings of God for all time.

M E R D E K A.

(TUNKU ABDUL RAHMAN PUTRA)

15th August, 1977.

பழைய நிதியமைச்சர் துன் டான் சிறப்புப்பேட்டி



சுதந்திரத்திற்குப் பிறகு தொடர்ந்து பல ஆண்டு காலம் நிதியமைச்சராகப் பணியாற்றி, நாட்டின் பொருளாதாரம் வலுவாக அமைவதற்கு மூலகாரணமாகத் திகழ்ந்தவர் துன் டான் சியூ சின். இன்றும் அரசாங்கத்துக்குப் பொருளியல் ஆலோசகராகத் தொடர்ந்து சேவையாற்றி வருகிறார்.

நாட்டிற்கு விடுதலை ஈட்டித் தந்த கூட்டணிக் கட்சியின் முக்கியப் பங்காளியான மலேசிய சீனர் சங்கத்தின் தேசியத் தலைவராகவும் நெடுங்காலம் பதவி வகித்தவர் துன். கூட்டணியின் மூத்த தலைவர்களில் ஒருவர் என்னும் முறையில் "புதிய சமுதாயத்"திற்கு அவர் அளித்த பேட்டி இது.

வினா: கடந்த சில ஆண்டுகளில் நம் வெள்ளியின் வாங்கும் சக்தி வேகமாகச் சரிந்து வருவதையும், அண்மைக் காலத்தில் நம் பொருளாதாரத்தில் ஏற்பட்டிருக்கும் பணவீக்கத்தையும் தடுப்பதற்குத் தாங்கள் கூறும் தீர்வு யாது?

விடை: அரசாங்கம் மிகக் குறைவாகவே செலவிடவேண்டும். இதைத் தவிர்த்து வேறு வழியேதும் இல்லை. அரசு ஊழியர்களுக்கு அண்மையில் வழங்கப்பட்ட ஊதிய உயர்வு, பணவீக்கத்தைக் குறைக்க எவ்வகையிலும் உதவவில்லை.

வினா: இருபது ஆண்டு சுதந்திரத்திற்குப்பிறகும் இன்னும் இனவாரியாகவே சிந்திக்கும் நம் பலஇன சமுதாயத்துக்கு, ஒரு வலுவான-ஒன்றிய மலேசிய தேசிய இனத்தை உருவாக்குவதற்குத் தாங்கள் நல்கும் அறிவுரை என்ன?

விடை: தேசிய முன்னணியில் உள்ள எல்லாக் கட்சிகளும் தங்களைக் கலைத்துக்கொண்டு, ஒரே அரசியல் கட்சியை அமைப்பதே முதலில் செய்ய வேண்டிய காரியம் என்று நான் கருதுகிறேன். நம் தலைவர்கள் காட்டக்கூடிய தலைசிறந்த முன்னுதாரணம் இதுவேயாகும். இதைச் செய்வது-அதாவது வெவ்வேறு வம்சாவளியைச் சேர்ந்தவராயினும் முதலில் தம்மை மலேசியராகக் கருதுவது -கடினம் என்று அவர்கள் நினைப்பார்களாயின் பொதுமக்கள் இந்த முன்னுதாரணத்தை மேற்கொள்வார்களென்று நாம் எப்படி எதிர்பார்க்க முடியும்? எனினும் இந்த இலட்சியத்தை அடையும் முன்பு தீர்க்கப்படவேண்டிய பிரச்சினைகள் பல இருக்கின்றன என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன்; ஆனால் பிரச்சினைகளைத் தீர்க்கவேண்டுமே ஒழிய அவை இல்லையென்று கருதிவிடலாகாது; உறுதியாக அணுகினால் ஒழிய அவை அகலமாட்டா. இதை செய்யச் சற்றுக் காலமாகும் என்பதையும் ஏற்றுக்கொள்கிறேன்; ஆனால் துணிவுமிக்க, தொலைநோக்குள்ள தலைமைத்துவத்தினால் இதை செய்து முடிக்க முடியும் என்று உறுதியாக நான் நம்புகிறேன்.

வினா: இருபதாவது ஆண்டு மெர்தேகா விழா நெருங்கிக்கொண்டிருக்கும் இவ்வேளையில், மலேசிய மக்களுக்குத் தாங்கள் விடுக்கும் சிறப்புச் செய்தி யாது?

விடை: நாம் அனைவரும் மலேசியர்கள் என்பதை முதலாவதாகவும் மலாய்க்காரர்கள், சீனர்கள், இந்தியர்கள், பிற இனத்தவர்கள் என்பதை இரண்டாவதாகவும் எவ்வளவு விரைவில் கருதுகிறோமோ அவ்வளவுக்கு நம் அனைவருக்கும் நல்லது. என்றாலும் இதனை நாம் அவசரப்பட்டு ஆரம்பிக்க முடியாது. இளைஞர்களிடையே இனவாரியான சிந்தனை வளர்ந்துகொண்டு வருகிறது என்பதையும் நாம் நினைவிற் கொள்ளவேண்டும்.. பலஇனச் சமுதாயத்திலிருந்து ஓர் உயிரோட்டமுள்ள தேசிய இனத்தை நாம் உருவாக்கவேண்டுமானால் இப்படிப்பட்ட சிந்தனைப் போக்கை மாற்றியமைத்தே ஆகவேண்டும். மலேசிய மக்களுக்கு இதுவே என்னுடைய சிறப்புச் செய்தியாகும்.

வினா: சுதந்திரத்திற்கு முந்திய-பிந்திய நம் நாட்டின் நிதி நிலைமையைச் சற்று விளக்குவீர்களா?

விடை: சுதந்திரத்திற்கு முன் நம் நிதி - பொருளாதார அமைப்பு, முற்றிலும் காலனித்துவ சமுதாயத்தைச் சார்ந்ததாகவே இருந்தது. மிகச்சிறிய எண்ணிக்கையினருக்கு அதிக நன்மைகளை வழங்கும் முறையிலேயே அது பெரிதும் அமைந்திருந்தது. சுதந்திரத்திற்குப் பின்னர் நாம் ஏழை எளியவர்களின் தேவைகளின் மீது அதிகக் கவனம் செலுத்தினோம்.

வினா: சுதந்திரம் பெற்று இருபது ஆண்டுக்காலத்தில் நம் நாடு, பொருளியல் ரீதியில் எத்தகைய முன்னேற்றம் கண்டுள்ளது?

விடை: வளர்ந்துவரும் நாடுகளின் தரத்தைக் கருத்தில் கொண்டால் பிரம்மாண்டமான வளர்ச்சி பெற்றுவரும் நடுத்தர வகுப்பினரை இந்த இருபது ஆண்டுகளில் உருவாக்கி இருக்கிறோம். துல்லிதமான விழுக்காடு எனக்குத் தெரியவில்லையாயினும் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் கண்டிருக்கிறோம் என்றே நான் கருதுகிறேன். எடுத்துக்காட்டாக, சொந்த வீடு வைத்திருக்கும் ஸ்டெனோகிராபர்களைக் காண்பது இப்போது புதுமையல்ல; அவர்கள் கார் வைத்திருப்பதை ஒரு தேவையாகவே கருதுகிறார்கள். இருபது ஆண்டுகளுக்கு முன்னர் கேள்வியே பட்டிராத அளவு, வீடு முதலான வசதிகளை இன்று நம் தோட்டத் தொழிலாளர்கள் பெற்றிருக்கின்றனர். அவர்கள் ஸ்கூட்டர்களிலும் மோட்டார் சைக்கிள்களிலும் பயணம் செய்கிறார்கள். உண்மையில் சைக்கிள்களைப் பயன்படுத்தும் நிலைமையை அவர்கள் கேவலமாகவே கருதுகிறார்கள். டிரைவர்களும் அங்காடிக்காரர்களும் தங்கள் பிள்ளைகளைப் பல்கலைக் கழகங்களுக்கு அனுப்புவது இன்று அசாதாரணமான ஒன்றல்ல. இத்தகைய நல்லடையாளங்கள் எல்லாம் 1957-க்கு முன் காணமுடியாதவை.

வினா: ஏழை பணக்காரர்களுக்கு இடையே உள்ள இடைவெளியைக் குறைப்பதில் நமது புதிய பொருளாதாரக் கொள்கை நாம் எதிர்பார்த்த அளவு வெற்றி பெற்றுள்ளது எனத் தாங்கள் கருதுகிறீர்களா?

விடை: ஏழை பணக்காரர்களுக்கு இடையே உள்ள இடைவெளியைக் குறைக்கவேண்டுமானால் நம்முடைய பொருளியல் வளர்ச்சியின் அளவை முதலில் பெருக்க வேண்டும்; பெருக்கினால்தான் நியாயமான பங்கீடு செய்வதற்கு அதிகம் இருக்கும். ஒருவரிடமுள்ளதைப் பறித்து இன்னொருவருக்குக் கொடுக்கும் நோக்கம் நமக்கு இல்லையென்று நம் அரசாங்கம் தெளிவாகக் கூறி இருப்பதால் பொருளாதாரத்தைப் பெருக்குவதே நமது முதல் நடவடிக்கையாகிறது. சுருக்கமாகச் சொல்லவேண்டுமானால் பணக்காரர்களை ஏழைகளாக்குவதைவிட, ஏழைகளைப் பணக்காரர்களாக்குவதே நம் கொள்கை. சுதந்திரம் பெற்றும் எத்தகைய பொருளாதார வெற்றியும் காணாத ஒருசில நாடுகளில், பணக்காரர்களை ஏழைகளாக்கும் நடைமுறை விரும்பப்படுகிறது. பொருளாதார வளர்ச்சியைப் பெருக்குவதில் நாம் பெரும் வெற்றி பெற்றுள்ளோம். கடந்த இருபது ஆண்டுகளில் நமது தேசிய மொத்த உற்பத்தியின் வளர்ச்சி விகிதத்தைப் பார்த்தால் இது தெரியவரும். நான் மேலே குறிப்பிட்டாற்போல், புதிதாக நாம் ஈட்டியிருக்கும் செல்வம் இப்போது நியாயமாகப் பங்கிடப்படுகிறது என்பது இதைவிட முக்கியமானது.

புத்துணர்வூட்டும் தினம்



31.8.1957ஆம் நாள் நமது நாட்டின் வரலாற்றை மாற்றி அமைத்த நாள். நாம் விடுதலை பெற்ற திருநாள். எனவே ஒவ்வோர் ஆண்டு ஆகஸ்ட் 31ஐயும் நாம் சுதந்திர தினமாகக் கொண்டாடுகின்றோம் என்பது யாவரும் அறிந்த ஒன்று.

இவ்வாண்டு வருகிற ஆகஸ்ட் 31, நமது 20ஆவது சுதந்திர தினமாகும். இத்தினத்தையொட்டி, 25-8-77இல் வெளிவரும் "புதிய சமுதாயம்" சிறப்பு மலராக வெளிவருவதை நான் பாராட்டுகின்றேன்.

ஆண்டுதோறும் வருகின்ற சுதந்திரதினத்தை ஏதோ பழக்கமாகிவிட்ட திருநாளாக எண்ணி மெத்தனத்துடன் வெறுமே நாம் கடந்து சென்று கொண்டிருக்கக் கூடாது. நம் உணர்வுக்கும் சிந்தனைக்கும் புத்துயிரூட்டும் தினமாக இது திகழவேண்டும்.

சுதந்திரம் எப்படி வந்தது, சுதந்திரத்திற்கு முன்னர் நாடு எப்படி இருந்தது, நாம் எப்படி வாழ்ந்தோம், சுதந்திரத்திற்குப் பின்னர் நாடு எத்தகைய மாறுதலை அடைந்துள்ளது, நாம் எவ்வாறு முன்னேற்றம் அடைந்துள்ளோம் என்ற அடிப்படைக் காரியங்களில் கவனம் செலுத்தும் நாளாகவும் அது குறித்துக் கணித்துப் பார்க்கும் நாளாகவும் இதனை நாம் கொள்ள வேண்டும்.

இப்படிக் கணித்துப் பார்ப்பதற்கும் வளர்ச்சியடைந்துவரும் நாம் மேலும் வளர்ச்சிபெற யாது செய்ய வேண்டும் எனச் சிந்திப்பதற்கும் சுதந்திரதினமே பொருத்தமான நாள். சுதந்திரதினத்தின் தாத்பரியமும் இதுவே எனலாம்.

மேலே நான் கூறிய கணிப்பும் சிந்தனையும் மேற்போக்காகப் பார்த்தால் அரசாங்கம் மேற்கொள்ள வேண்டிய காரியங்களாகத் தோன்றுதல் இயல்பு. ஆனால் உண்மையில் அவ்வு அரசாங்கம் - மக்கள் ஆகிய இரண்டு கூறுகளுக்கும் இயல்பாகவே உரியவையாகின்றன.

மக்கள் தங்கள் வளத்தையும் முன்னேற்றத்தையும் கருதியே தங்கள் அரசாங்கத்தைத் தேர்ந்தெடுக்கின்றார்கள். அப்படித் தேர்ந்தெடுக்கும் அவர்கள் அந்த வளத்தையும் முன்னேற்றத்தையும் எடைபோட வேண்டிய காரியத்தையும் செய்யாவிட்டால் அரசின் தராதரத்தையும் திறனான பணிகளையும் அவர்கள் சரிவர அறிதல் சாத்தியமில்லாது போய்விடும். அப்படிப்பட்ட சூழ்நிலையில், அடுத்து அவர்கள் அரசினைத் தேர்ந்தெடுப்பதில் தவறுகள் செய்வதும் சாத்தியமாகலாம். நாட்டின் நிலை, அரசின் நிலை ஆகியவற்றை ஒரு நாட்டின் மக்கள் தெரிந்திராவிட்டால் தேர்தல் காலங்களில் திடீரென மேடைகளில் கிளப்பிவிடப்படும் குழப்பச் செய்திகளில் அவர்கள் குழப்பநிலை அடைவதும் சாத்தியமாகலாம்.

எனவே நமது நிலையினை நாட்டுப்பற்றுடன் அறிந்துகொண்டுள்ள மக்களாக நாம் இருந்தோமானால் வெறும்வார்த்தைகள் எவை, விஷயமுள்ள வார்த்தைகள் எவை என்று அடையாளம் காணக்கூடியவர்களாக இருப்போம். அதேவேளையில் தவறு செய்யாதவர்களாகவும் சுதந்திரத்தின் பலனைத் தடையின்றி அடைந்து வருபவர்களாகவும் நாம் இருப்போம். இதுவே நமது சுதந்திரத் தத்துவமாகவும் அமையும்.


ம.இ.கா. தோன்றிப் பதினொரு ஆண்டுகட்குப் பின்னர் நமது நாடு விடுதலை பெற்றது. விடுதலைப் போராட்டத்திலும் சரி, விடுதலைக்குப் பின்னர் நாட்டின் வளர்ச்சிகளிலும் சரி ம. இ. கா. தனது நேர்மையான பங்கினை உணர்வுடன் ஆற்றி வந்துள்ளது. தொடர்ந்து தனது கடமையை நேர்மைத் திறனுடன் ஆற்றி வருவதிலும் தனது உரிமைகளைப் பெறுவதிலும் ம. இ. கா. தயக்கம் கொள்ளாது.


20ஆவது சுதந்திரதினத்தையொட்டி நாட்டு மக்கள் அனைவருக்கும் எனது நல்வாழ்த்துக்களைப் "புதிய சமுதாயம்" வாயிலாகப் புலப்படுத்துகின்றேன்.

டான்ஸ்ரீ மாணிக்கவாசகம்

தொடர்புத்துறை அமைச்சர்,
ம. இ. கா. தேசியத் தலைவர்.

மூத்த கவிஞர்கள்





கவியரசு சோமசன்மா

ஆயிரத்துக்கும் மேற்பட்ட கவிதைகளை எழுதியிருக்கும் கவியரசு சோமசன்மா பல கவிதைப் போட்டிகளில் முதற் பரிசுகளைப் பெற்றவர்.

கவிமணி கிருஷ்ணதாசன் அவர்களால் "கவிச்சுடர்" விருதும் கவிஞர் கண்ணதாசன் அவர்களால் "மலேசியக் கவியரசு" விருதும் வழங்கப் பெற்றிருக்கும் இவருக்கு மேன்மை தங்கிய ஜொகூர் சுல்தான் பி. ஐ. எஸ். விருது வழங்கிச் சிறப்பித்துள்ளார்.

சிரிகாடிங் தோட்டத் தமிழ்ப் பள்ளியின் தலைமையாசிரியராகப் பணியாற்றும் இவர் தமது கவிதைத் தொகுப்பை விரைவில் வெளியிடவிருக்கிறார்.

கவிமணி கிருஷ்ணதாசன்

தமது 9வது வயதிலேயே கவிதை எழுதத் துவங்கிய கவிமணி கிருஷ்ணதாசன் இலக்கியத் தொடர்புடைய குடும்பத்தைச் சேர்ந்தவர். அவரின் தந்தையார் ஓர் அஷ்டாவதானி. கொள்ளுப் பாட்டனார் ஒரு மகாகவி.

"சமுதாய ஊழியன்", "தேச நேசன்", "உதய சூரியன்" "நாகரிகம்" ஆகிய பத்திரிகைகளில் ஆசிரியராகப் பணியாற்றியிருக்கும் "கவிமணி" தேசிய நிலநிதிக் கூட்டுறவுச் சங்க ஆதரவில் கூட்டுறவுக் கவியரங்கத்தைச் சிறப்பாக நடத்தியவர்.

பேராமாநிலத் தமிழ் எழுத்தாளர் சங்கம் இவருடைய தமிழ்த் தொண்டைப் பாராட்டித் திரு. அகிலன் அவர்களைக் கொண்டு கேடயம் வழங்கிச் சிறப்பித்துள்ளது.

எழில் கண்டேன்



இரவழகி எழிலன்னை இரவெல்லாம் சுமந்து
ஏக்கமுடன் காத்திருந்து இதயமகிழ் வோடு
நறுமலர்கள் மணம்வீச நாற்றிசையும் வண்டு
நல்லிசையின் பண்பாடி நடம்புரியுங் காலை
மறுமலர்ச்சி பலவிரும்பும் கவினுலகில் தனது
மணிமகனைக் கதிரவனை மனங்குளிர ஈன்றாள்
திருப்புதல்வன் கீழ்க்கடலை இளம்விழியால் பார்த்துச்
சிரித்திடவே இயற்கைப்பெண் சிரித்தமெழில் கண்டேன்!

சோமசன்மா

மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் 15-ஆம் ஆண்டு விழாவில் மலேசியாவின் மூத்த தமிழ்க் கவிஞர்களுள் கவிமணி கிருஷ்ணதாசன், மலேசியக் கவியரசு சோமசன்மா ஆகிய இருவரும் பாராட்டுக் கேடயம் வழங்கப்பெற்றுச் சிறப்பிக்கப்பட்டனர். கடந்த 31.7.77 ஞாயிற்றுக்கிழமை விழாவைத் துவக்கிவைத்த தொழிலாளர் ஆள்பலத் துறையின் துணையமைச்சர் மாண்புமிகு சு. பத்மநாபன், கவிஞர்களுக்குக் கேடயங்களை வழங்கினார். சங்கத் தலைவர் திரு. சி. வடிவேல் பொன்னாடை போர்த்தினார்.

பசி! பசி!



"பசிபசி"என் றேமனிதர் பறக்கின் றார்கள்
பணக்காரக் கும்பலிதைப் பார்க்கின் றார்கள்
உசிதமுற உபகாரம் செய்கின் றாரா?
உதவிசெயல் கடமையெனக் கொள்கின் றாரா?
புசித்துடல் பருத்துமிகக் கொழுக்கின் றார்கள்
பூமிக்கே பாரமதாய்ப் பொறுப்பே இன்றி
வசிக்கின்ற பணக்கார வகையார் இன்னார்
வையத்தில் வாழ்வதினும் ஒழிதல் நன்றாம்

கிருஷ்ணதாசன்

முத்து அழுகிறான்

ரெ. கார்த்திகேசு

வரிசைபிடித்து நின்ற ரப்பர் மரங்களுக்கிடையே ஓடிய அந்த நெடுஞ்சாலையில் காற்றைக் கிழித்துக்கொண்டு விரைந்தது அந்த டாக்சி. தன் முகத்தில் ஜில்லென்று வீசிய அந்தக் காற்றில் முத்து தூங்கி வழிந்து கொண்டிருந்தான். இரவெல்லாம் சிட்டாட்டம். இன்று ஞாயிற்றுக்கிழமை தூங்கிக் கழிக்கலாம் என்றிருந்த அவனை இந்தச் சேகரம் பிள்ளை பிடித்துக்கொண்டார்.

"ஏய் முத்து! வாடா என்னோடே டவுன் வரைக்கும். முக்கியமான வேலை இருக்கு!" என்று காலையில் காப்பிக்கடையில் காப்பி சாப்பிடப் போனபோது பிடித்துக்கொண்டார்.

"முதலாளி! நீங்க ஆளை விடுங்க! நேத்து ராத்திரி முழுக்கத் தூக்கம் இல்ல. ஒரே சிட்டாட்டம்! நான் தூங்கப்போறேன் முதலாளி!" என்றான் முத்து.

"சீ, சோம்பேறி! இன்னிக்கு நம்ப நாடாளுமன்றச் செயலாளர் மாணிக்கம், சட்டமன்ற உறுப்பினர் ராகவன் ரெண்டு பேரும் டவுனுக்கு வந்து ரெஸ்ட் ஹவுஸ்ல நம்பளைச் சந்திக்கணும்னு சேதி அனுப்பியிருக்காங்கடா!" என்றார் சேகரம் பிள்ளை.

"நம்பளைன்னு என்னையும் ஏன் இழுக்கிறீங்க முதலாளி? நீங்க நம்மூர் கிளைத்தலைவர். ஆகவே, வரப்போற கட்சித் தேர்தல் பத்திப் பேச உங்களை அழைச்சிருப்பாங்க. இந்த லாரி டிரைவர் முத்துவப் பார்க்கணும்னு அவங்களுக்கு என்ன தலையெழுத்தா?" என்று முத்து அலுத்துக்கொண்டான்

"டேய்! சும்மா வம்பு பேசிக்கிட்டு இருக்காம வாடா என்னோடே!" என்று கட்டளையிட்டு விட்டார் சேகரம். ஆகவே தூக்கத்தைச் சமாளிப்பதற்காக ஒரு கப்புக்கு இரண்டு கப்பாகக் காப்பியைச் சாப்பிட்டுவிட்டு அவரோடு புறப்பட்டுவிட்டான் முத்து. இருந்தும் டாக்சியில் போகும்போது தூக்கம் கண்ணைச் சுழற்றியது.

இந்தச் சேகரம்பிள்ளைக்கு எங்கே போக வேண்டுமானாலும் இரண்டு பேர் கூடவே போகவேண்டும். அதுவும் குறிப்பாக முத்து அவருடனேயே இருக்கவேண்டும். ஏனென்றால் முத்து அரசியலில் கலந்துகொள்ளமாட்டான். எடுபிடி வேலைக்குத் தயாராக இருப்பான். வேடிக்கையாகப் பேசுவான். சேகரம்பிள்ளைக்கு அவனை மிகவும் பிடிக்கும்.

இன்றைக்கு அவனோடு பழனியாண்டியையும் இழுத்துக் கொண்டார் சேகரம்பிள்ளை. பழனியாண்டி அந்தக் கிளையில் ஒரு கமிட்டி உறுப்பினன். சேகரம் பிள்ளைக்குச் சரியான பின்பாட்டு; ஆமாம்சாமி. அவனையும் சேகரம் பிள்ளைக்குப் பிடிக்கும்.

முத்து அரைத்தூக்கத்தில் இருக்கும்போது பழனியாண்டியும் சேகரம் பிள்ளையும் தீவிரமாக அரசியல் பேசுவதில் இறங்கியிருந்தனர்.

"அடுத்த மாசம் கட்சியோட பொதுத்தேர்தல் ரொம்பத்தீவிரமா இருக்கும்போல இருக்கே!" என்றான் பழனியாண்டி.

"ஆமா தம்பி! நம்ப நாடாளுமன்றச் செயலாளர் மாணிக்கம், சட்டமன்ற உறுப்பினர் இராமநாதன் ரெண்டுபேரும் நேரடியா மோதறாங்களாம்!" என்றார் சேகரம் பிள்ளை.

"அதுதான் இப்ப மாணிக்கம் நம்பளத் தேடிவந்திருக்கிறார் போல. ஓட்டுவேட்டையா?" என்றான் பழனியாண்டி.

"அப்படித்தான் இருக்கணும். போய்ப் பேசிப் பார்ப்போமே. அதோட, நம்ப கிளையிலிருந்து இந்த சந்திரன் பயல் கோலாலம்பூர் வரைக்கும் போய் நம்ப கிளையைப் பத்திப் புகார் கொடுத்திட்டு வந்திருக்கான்னு கேள்வி. அதைப் பத்தியும் மாணிக்கத்துக்கிட்ட கேட்டுப் பார்க்கணும்!" என்றார் சேகரம் பிள்ளை.

"ஆமா, ஆமா! கேட்டுப்பாருங்க! இந்தச் சந்திரன் நம்ப கிளையில 'அது ஊழல், இது ஊழல்ன்னு' சொல்லிக்கிட்டே திரியிறான். போனமாசம் நடந்த தேர்தல்ல கிட்டத்தட்ட உங்களயே தோக்கடிக்கப் பாத்தானே! இதை நீங்க சும்மா விடக்கூடாது முதலாளி! மாணிக்கத்துக்கிட்ட சொல்லி வையுங்க!" என்றான் பழனியாண்டி.

ரெஸ்ட் ஹவுஸ் நெருங்கிவிட்டது. முத்துவைத் தொடையில் தட்டி எழுப்பினார் சேகரம் பிள்ளை. முத்து கண்களைத் திறந்து பார்த்தான். "எழுந்திருடா! மூஞ்சைத் தொடச்சிக்க! ரெஸ்ட் ஹவுஸ் வந்தாச்சி!" என்றார் சேகரம் பிள்ளை.

"ரெஸ்ட் ஹவுஸ் வந்தாச்சி! நம்பளைத்தான் ரெஸ்ட் பண்ண விடமாட்டேங்கிறீங்க!" என்றவாறு கொட்டாவி விட்டான் முத்து.

ரெஸ்ட் ஹவுசின் வாசலில் நின்று கைகூப்பி அவர்களை வரவேற்றார் மாணிக்கம்.

"வாங்க, வாங்க! நானே வந்து உங்களைப் பார்த்திருக்கணும்! இங்க நம்ப டி. ஓ. வோட எனக்குப் பேசவேண்டிய வேலை இருந்தது. அதனால்தான் வர முடியல!" என்றார்.

சேகரம் வாயெல்லாம் பல்லாகச் சிரித்துக்கொண்டு பழனியாண்டியை அறிமுகப்படுத்தினார். அப்புறம் பின்னால் ஒதுங்கி நின்ற முத்துவையும் அறிமுகப்படுத்தினார். அவன் திடீரென முன்னால் வந்து, நாடாளுமன்றச் செயலாளரின் கையைப் பிடித்துக் குலுக்கிவிட்டு வந்த வேகத்திலேயே மீண்டும் பின்னால் போய்விட்டான்.

மாணிக்கம் அவர்கள் அனைவரையும் ரெஸ்ட் ஹவுசின் லவுஞ்சில் உட்கார வைத்தார். "என்ன சாப்பிடுறீங்க? காலையில் பசியாறினீங்களா?" என்று உபசரித்தார்.

முத்து பசியாறத் தயாராக இருந்தான். சேகரம்பிள்ளைதான் வேண்டாம் வேண்டாம் என்று எல்லாவற்றையும் கெடுத்துக்கொண்டிருந்தார்.

"பாருங்க சேரகம்பிள்ளை! நேத்து நான் உங்க மாநிலத் தலைவரோட பேசிக்கிட்டு இருந்தேன்!" என்று ஆரம்பித்தார் மாணிக்கம். "இந்த மாநிலத்தப் பொறுத்தவரை உங்களோட செல்வாக்கு இல்லாம ஒண்ணும் நடக்காதுன்னு அடிச்சிச் சொல்லிட்டார்!" என்றார். சேகரம் பிள்ளை நாற்காலியில் நிமிர்ந்து உட்கார்ந்தார்.

"நான் வர்ர கட்சிப் பொதுத் தேர்தல்ல நிக்கப்போறது உங்களுக்குத் தெரியும். இராமநாதன் என்னை நேரடியா எதுக்கிறாரு! நான் கட்சிக்குப் புதியவனா இருக்கலாம்! ஆனா கட்சிக்கு நிறைய உழைச்சிருக்கேன் !"

சேகரம்பிள்ளை இடைமறித்தார். 'யாங் பெர் ஹொர்மாட்! நீங்க சொல்றத நான் புரிஞ்சிக்கிட்டேன். மாநில அளவில நான் ஆதரவத் திரட்ட முடியும். ஆனா நம்ப மாநிலத் தலைவரே இரட்டை நாக்கு படைச்சவர் மாதிரி அங்கேயும் இங்கேயும் பேசிக்கிட்டு இருக்கிறாரு!"

"உங்களுடைய ஆதரவு இல்லாம மாநிலத்தலைவர் என்னங்க செய்திட முடியும் சேகரம் பிள்ளை? அவர் ஒரு சில ஓட்டு வித்தியாசத்தில் ஜெயிச்சி வந்தவர்னு எனக்குத் தெரியும். அவருடைய ஆதரவு சாமிநாதன் பக்கம்னு எனக்குத் தெரியும். ஆனால் நீங்க முயற்சிபண்ணினா பேராளர்கள் மனச மாத்தமுடியும்! அப்படி இல்லாட்டா உங்களத்தேடி வந்திருப்பேனுங்களா?" என்றார் மாணிக்கம்.

சேகரம்பிள்ளை மேலும் நிமிர்ந்து உட்கார்ந்தார். மாணிக்கம் தொடர்ந்

தார். "உங்களப்பத்தி நான் நிறையத் தெரிஞ்சி வச்சிருக்கேன் சேகரம் பிள்ளை. மாநிலத்தலைவர்கூட உங்களுக்குத்தான் பயப்படுறார். அந்தோட உங்க கிளையில் உள்ள சந்திரனத் தாண்டிவிட்டு உங்கமேல் பல அபாண்டமான குற்றச்சாட்டுக்களையெல்லாம் தலைமையகம் வரைக்கும் கொண்டு வந்திருக்காங்க... ஆனா நான்தான் சொல்லி அதையெல்லாம் குப்பைன்னு ஒதுக்கிட்டேன். 'சேகரம் பிள்ளையை எனக்கு நேரடியாத் தெரியும். அவர் கட்சிக்காக உயிரைக்கொடுக்கிறவரு. அவரு இப்படி ஊழல்கள்ள எல்லாம் ஈடுபடமாட்டாரு"ன்னு சொல்லி அந்தக் குற்றச்சாட்டுக்கள எல்லாம் தூக்கி எறிஞ்சாச்சி!" என்றார் மாணிக்கம்.

சேகரம்பிள்ளை நெஞ்சு நிமிர்ந்து உட்கார்ந்தார். "அதெல்லாம்அபாண்டம் யாங் பெர்ஹோர்மாட்! நீங்க செஞ்சது நல்ல வேலை. இந்தப் பசங்களுக்கு அப்படித்தான் பாடம் படிச்சிக் கொடுக்கணும். நீங்க கவலையே படாதிங்க. இந்த மாநிலப் பேராளர்கள் ஓட்டு உங்களுக்குத்தான்! அதுக்கு என்னால் எவ்வளவு செய்ய முடியுமோ அவ்வளவும் செய்றேன்!" என்றார்.

எல்லாருக்கும் காப்பி வந்தது. தான் விழித்துக்கொண்டிருப்பது போல் நடிப்பதற்காகக் கண்களைத் பெரிதாக விரித்துவைத்துக் கொண்டிருந்த முத்துவுக்குக் காப்பி அமிர்தம்போல் இனித்தது.

டாக்சியில் திரும்பிக் கொண்டிருந்தபோது சேகரம்பிள்ளை உற்சாகமாக இருந்தார். பழநியாண்டி வேறு அவர் புகழை ஓயாமல் பாடிக் கொண்டிருந்தான். "என்ன முதலாளி! நாடாளுமன்றச் செயலாளருக்கு உங்கமேலே எத்தனை மரியாதை? எத்தனை நம்பிக்கை? உங்க புகழ் கோலாலம்பூர் வரைக்கும் எட்டியிருக்கே?" என்றான்.

"பின்ன? இந்த மாநிலக்கூட்டம் நடக்கும்போதெல்லாம் நான் பேச எந்திரிச்சா கூட்டம் கப் சிப்புன்னு அடங்கும் தம்பி? இந்த மாநிலத் தலைவருக்கு என் விஷயம் இன்னும் சரியா புரியல. இப்ப பாரு! இந்த ஒரு மாசத்தில் இந்த மாநிலம்பூரா ஒரு சூறாவளிச் சுற்றுப்பயணம் பண்ணி மாணிக்கத்துக்கு முழு ஆதரவத் தெரட்டிக்காட்டப் போறேன்!" என்றார்.

முத்து இன்னும் அரைத் தூக்கத்தில் இருந்தான்.

"டேய் முத்து! காதில விழுந்திருச்சா? நீயும்தான் என்னோட வரப்போற! ஞாபகம் இருக்கட்டும்!" என்றார்.

முத்து சீட்டில் நிமிர்ந்து உட்கார்ந்தான். "அதெல்லாம் சரி முதலாளி! இவ்வளவு நேரம் யாங் பெர்ஹோர்மாட் கிட்ட பேசினிங்களே! நம்ப ஊருக்குன்னு ஒரு இந்து மயானம் இல்லாத குறைய ஒவ்வொரு மீட்டிங்கிலயும் பேசிக்கிட்டு இருக்கோமே, அத அவரு காதில போட்டிருக்கக் கூடாது?" என்று கேட்டான்.

"போடா பரதேசிப்பயல! அதுக்கெல்லாம் நேரம் காலம் வேணும்? தேர்தலப்பத்தி பேசிக்கிட்டு இருக்கும்போதா மயானக்கதை பேசுறது? அதுக்கெல்லாம் நேரம் வரும்! இவரு தேர்தல்ல ஜெயிச்சி வரட்டும். அப்புறம் பாரு! நம்ம கேட்டதையெல்லாம் செய்வாரு!" என்றார்.

"ஆமாம்! நம்ப ஊரையே மயானமா மாத்திப்புடுவாரு!" என்று நினைத்துக் கொண்டு மீண்டும் தூங்க ஆயத்தமானான் முத்து.

சேகரம்பிள்ளை மேற்கொண்ட தீவிர சுற்றுப் பயணத்தை இளைஞன முத்துவாலேயே தாங்க முடியவில்லை. தோட்டம் தோட்டமாக, ஊர் ஊராகப் போய் யார் யாரையோ பார்த்துப் பேசினார். பலரோடு நயமாகப் பேசினார். சிலரோடு வாதங்கள் புரிந்தார். கூட்டம் போட்ட இடங்களில் எல்லாம் காப்பி, டீ, சில இடங்களில் பீர் ஆகிய பானங்கள் வெள்ளமாக ஓடின.

இதற்கிடையியே சேகரம்பிள்ளைக்கென இருந்த ஒரே ஒரு மளிகைக் கடையைத் தன்னிடம் வேலைக்கு இருந்த பையனின் பொறுப்பில் விட்டுவிட்டார். பையன் தனக்கிருந்த எரிச்சலில் ஒரு கட்டிப் பருப்புக் கேட்டவர்களுக்கு ஒன்றரைக்



கட்டியாகக் கட்டிக் கொடுத்து, சேகரம் பிள்ளையின் நிதியைத் தானம் செய்து கொண்டிருந்தான்.

சேசரம் பிள்ளைக்கு எதிராக மாநிலத்தலைவர், இராமநாதனுக்குச் சார்பாக வேலை செய்து கொண்டிருந்தார். ஆகவே அவருடைய எதிர்ப்பையும் சமாளிக்க வேண்டியதாயிற்று.

ஒருமாதம் ஓடிய ஓட்டத்தில் சேகரம்பிள்ளை தளர்ந்து போனார். ஒருநாள் இரவு கடுமையான நெஞ்சு வலி கண்டுவிட்டது. இரவோடு இரவாக டாக்சி பிடித்து அவரை ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் சென்றார் அவர் மனைவி. முத்துவும் உடன் இருந்தான்.

சேகரம்பிள்ளை பூரணமான ஓய்வு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று சொல்லிவிட்டார் டாக்டர். 'சரி சரி' என்று சொல்லிவிட்டு ஒரு நான்கு நாள் வீட்டுக்குள்ளேயே படுத்திருந்தார். அந்த வேளையில் தான் மாநிலத்தில் தமக்கு ஆதரவு தேட இராமநாதன் வந்து சூறாவளி போல் பலரிடம் பேசிவிட்டுப் போயிருந்தார். சேகரம்பிள்ளை படுத்துக்கொண்டது, அவருக்கும் வசதியாகப் போய்விட்டது.

ஆனால் இராமநாதனின் வருகையால் ஆதரவுக் காற்று திசை மாறிவிடும் போலத் தெரிந்ததும் சேகரம் பிள்ளை மீண்டும் வரிந்து கட்டிக் கொண்டு எழுந்துவிட்டார். மீண்டும் ஒரு சுற்றுப்பயணம் தொடங்கியது.

இதற்கிடையில் மாணிக்கத்திடமிருந்து அடிக்கடி அவருக்குச் செய்தி வந்து கொண்டிருந்தது.

சுவனபதியும் நரகமும்

சுவனபதியும் நரகமும் தங்களுக்குள் [மேலானது எது என்று] தர்க்கம் செய்துகொண்டன. அப்பொழுது நரகம் "என்னைக் கர்வம் கொண்டவர்களுக்கும் அட்டூழியம் புரிந்தவர்களுக்கும் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறது" என்று கூறிற்று.

ஆனால் சுவனபதியோ, "எனக்கு என்ன வேண்டியுள்ளது! மக்களில் பலஹீனர்களும் தாழ்ந்தவர்களும் தவிர வேறு எவரும் என்னிடம் வர மாட்டார்கள்" என்று கூறிற்று.

அப்பொழுது இறைவன் சுவனபதியை நோக்கி, "நீ என் அருளாகும். உன்னைக் கொண்டு நான் என் அடியார்களில் . நான் நாடியவர்களு -க்கு அருள் புரிவேன்" என்று கூறுவான்; பின்னர் நரகத்தை நோக்கி "நீ என் வேதனையாகும். உன்னைக் கொண்டு நான் என் அடியார்களில் நான் நாடியவர்களை வேதனை புரிவேன். மேலும் உங்களில் ஒவ்வொருவருக்கும் நிறைவு உண்டென்"றும் கூறுவான். எனினும் நரகமோ, இறைவன் அதில் தன் பாதத்தை வைக்காதவரை நிறையமாட்டாது. [வைத்த] அப்பொழுது நரகம், போதும் போதும் என்று கூறும். அவ்விதமே அது நிறைந்து, தன்னில் சிலவற்றைச் சிலவற்றுடன் அணைத்துக்கொண்டு சுருட்டிக்கொள்ளும்.

அல்லாஹ் தன் அடியார்களில் எவருக்கும் அநீதம் செய்யமாட்டான். ஆனால் சுவனபதிக்காக அல்லாஹ் வேறு படைப்பைப் படைத்து (நிரப்பி) விடுவான் என்றும் அண்ணல் நபி [ஸல்] அவர்கள் கூறினர்.

–அல்ஹதீஸ்

சேகரம் பிள்ளையின் ஆதரவை அவர் பெரிதும் நம்பியிருப்பதாகவும் பிற மாநிலங்களில் தமக்கு அமோக ஆதரவு இருப்பதாகவும் இந்த மாநிலம் மட்டுமே நிச்சயமற்ற நிலையில் இருப்பதாகவும் அவர் செய்தி அனுப்பியிருந்தார்.

இராமநாதனுக்கு ஆதரவாக மாநிலத் தலைவர் ஏராளமான பணத்தைச் செலவிட்டுப் பேராளர்களாகப் போகப் போகிறவர்களுக்கு விருந்து வைத்துக்கொண்டிருந்தார்.

இதைக் கண்ட சேகரம்பிள்ளை தனது மளிகைக்கடையின் உரிமைப் பத்திரத்தைக் கொண்டுபோய் ஒரு செட்டியாரிடம் கொடுத்து மூவாயிரம் வெள்ளி வாங்கி வந்தார். ஏனென்றால் இப்போது இந்தத் தேர்தல் சேகரம் பிள்ளைக்கு ஒரு மானப் பிரச்சினை ஆகிவிட்டது.

மாநிலத் தலைவர் செல்வாக்கு இருந்த இடத்திலெல்லாம் தாமும் போய் நின்றார். பணத்தைக் கரைத்தார்.

தலைநகரில் பொதுத் தேர்தல் நடக்க இருந்த அன்று பேராளர்கள் தலைநகர் செல்வதற்காக ஒரு பஸ் பிடித்தார்.

உற்சாகமாகப் பஸ்ஸில் பிரயாணம் செய்து வந்த பேராளர்களிடையே முத்துவும் கலந்துகொண்டு கடைசிச் சீட்டில் உட்கார்ந்து தலைநகர் சேரும் வரை தூங்கிக் கொண்டே வந்தான்.

எட்டு வாக்குகள் வித்தியாசத்தில் மாணிக்கம் தோற்றுவிட்டார். இராமநாதன் வெற்றிவிழா கொண்டாடிக் கொண்டிருந்தார். சேகரம் பிள்ளை உட்படப் பலர் விக்கித்து அழுதனர்.

திரும்ப வரும்போது அந்தப் பஸ்ஸில் வந்த பலர் அங்கு இல்லாததை முத்து கவனித்தான். ஒன்று, அவர்கள் தலைநகரில் உல்லாசப் பொழுது போக்குக்காகப் பின்னால் தங்கியிருக்க வேண்டும்; அல்லது "நானும்தான் உங்களுக்கு ஓட்டுப் போட்டேன்!" என்று இராமநாதனின் வெற்றிக் கொண்டாட்டங்களில் கலந்து கொண்டிருக்க வேண்டும்.

சேகரம்பிள்ளை நெஞ்சில் கை வைத்து அழுத்தியவாறு ஒரு சீட்டில் சோர்ந்து படுத்திருந்தார். அவரைத் தொந்தரவு செய்யவேண்டாம் என முத்து இன்னொரு சீட்டில் படுத்து விட்டான்.

வந்த அன்றே சேகரம் பிள்ளையை ஆஸ்பத்திரியில் சேர்த்தார்கள். மூன்றும் நாள் அவர் உயிர் பட்டென்று போய்விட்டது. அவர் மனைவி கதறிக் கதறி அழுதார். முத்து சோகமாகப் பக்கத்திலேயே உட்கார்ந்திருந்தான்.

மாநிலத் தலைவர் வந்து சடங்குக்குத் துக்கம் விசாரித்துவிட்டுச் சென்றுவிட்டார்; நாடாளுமன்றச் செயலாளர் மாணிக்கத்திடமிருந்து தந்திவந்திருந்தது. தான் மிகவும் துயர் உறுவதாகவும், அரசாங்கச் சார்பில் வெளிநாடு செல்லும் தூதுக்குழுவில் தான் செல்வதால் வரமுடியவில்லை எனவும் தந்தி அடித்திருந்தார். இராமநாதன் கூட அனுதாபத் தந்தி அடித்திருந்தார்.

சேகரம்பிள்ளையின் சடலத்தை அடுத்த ஊரில் உள்ள இந்து மயானத்தில் எரிக்க ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தன. உள்ளூரில் மயானத்தை அமைக்கக் கட்சியின் கிளை எடுத்த முயற்சிகள் இன்னும் முற்றுப் பெறாமல் அப்படியே இருந்தன.

சவம் எரியும்போது அங்கு நின்று சோகமாகப் பார்த்து கொண்டிருந்த முத்து நினைத்தான்.

"அன்னைக்கு நான் மயானத்தப் பத்தி நினைவூட்டினபோது அதுக்குக் காலம் நேரம் வரும்னு சொன்னிங்களே முதலாளி! இப்ப காலமும் நேரமும் சரியா வந்திருக்கு! ஆனா அதைப்பத்திப் பேச நீங்க இல்ல! யார்யாரோ தலைவர் ஆகணுங்கிறதுக்காக நீங்க இத்தனைப் பாடுபட்டு உயிரையும் கொடுத்திங்க! அந்த முயற்சி, பணம், சக்தி எல்லாத்தையும் நம்மூர்ல ஒரு மயானம் அமைக்கச்செலவழிச்சிருந்தா உங்க சடலத்த இன்னொரு ஊர்ல கொண்டுவந்து எரிக்கிற நெலம வந்திருக்காதே!"

முத்துவின் கண்களிலிருந்து முதன் முறையாக இரு சொட்டுக் கண்ணீர் உதிர்ந்தது.

மெர்தேகா குழந்தைகள்

1

2

3

4

5

6

7

8

9


இவர்கள் அனைவரும் நமது நாடு சுதந்திரம் பெற்ற 31.8.1957ஆம் நாளில் பிறந்தவர்கள். மெர்தேகா தினத்தன்று பிறந்த இவர்களுக்கு ஏற்கனவே அறிவித்துள்ளபடி புதிய சமுதாயம் பரிசுகள் வழங்க இருக்கிறது.

1. சுதந்திரதினத்தில் பிறந்த இவருக்குச் சுதந்திரதேவி என பொருத்தமான பெயர் வைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத் தக்கது. இயந்திர இயக்குநராகப் (மிஷின் ஆபரேட்டர்) பணி புரியும் சுதந்திரதேவியின் முகவரி: 49, பெர்சியாரான் சிகாம்புட் கோலாலம்பூர்.
2. மெர்தேகா தினத்தில் பிறந்த இவரது பெயர் பிறப்புப் பத்திரத்தின்படி 'மெர்தேகா' என்பதுதான். விட்டில் 'கமலா" என்று கூப்பிடுவார்களாம். முகவரி: 26, ஜாலான் 14/40, பெட்டாலிங் ஜெயா, சிலாங்கூர்.
3. எண். 1, மார்க்கெட் தெரு, சிலிம்ரிவர் என்னும் முகவரியைச் சேர்ந்த இவரின் பெயர் ஆர். குமாரி.
4. தோட்டத்தில் வேலை செய்து வரும் இவர் பெயர் கே. நாகம்மாள். முகவரி: நீலாய் டிவிஷன், சுங்கை மாகாங் தோட்டம், நெகிரி செம்பிலான்.
5. தற்போது உயர்நிலை 6-ஆம் படிவத்தில் பயின்று கொண்டிருக்கும் இவருடைய பெயர் தமயந்தி என்பதாகும். 631, கூலிம் கார்டன்ஸ், ஜாலான் புக்கிட், கூலிம் என்பது முகவரி.
6. ரஹிமா பீ என்னும் பெயர் கொண்ட இவருடைய முகவரி: 34 ஏ, ஜாலான் டிரான்ஸ்ஃபெர், பினாங்கு. பாயான் லெப்பாசிலுள்ள ஒரு தொழிற்சாலையில் பணிபுரிந்து வருகிறார்.
7. காஜாங் நகருக்கு அருகிலுள்ள அம்பர்தினாங் தோட்டத்தில் தேயிலை கிள்ளும் பணிபுரிந்து வரும் இவருடைய பெயர் கனலெட்சுமி.
8. இவருடைய பெயர் விக்டர். தற்சமயம் இந்தியாவில் உள்ள ஒரு தொழில்நுட்பக் கல்லூரியில் பயின்று கொண்டிருக்கும் இவர் ஒரு தோட்டப் பாட்டாளியின் மகன் என்பது குறிப்பிடத்தக்கது. முகவரி: செலபா தோட்டம், தெலுக் கான்சன்.
9. அரச மலேசிய விமானப்படை வீரராக நாட்டைக்காக்கும் நற்பணியில் ஈடுபட்டிருக்கும் இவருடைய பெயர் என். மகாலிங்கம். முகவரி: 153, ரவாப் டின் மைனிங், ரவாங்.
10. இவருடைய பெயர் குமார். ரேடியோ நிறுவனம் ஒன்றில் விற்பனையாளராகப் பணியாற்று

சிந்தனை மேடை

'கதிர்'

ஒரு விழா! நம்மவர்களுடைய ஏற்பாடுதான்! சரியாக ஐந்து மணிக்குத் துவக்கம் என்று அழைப்பிதழில் அச்சிடப்பட்டிருந்தது. ஆனால் கூட்டமும் உரிய அளவு கூடவில்லை; கூட்டத்தலைவரும் உரிய நேரத்தில் வரவில்லை. கூட்ட ஏற்பாட்டாளர்க்குக் கூட்டக்குறைவே சலிப்பையும் தளர்வையும் உண்டாக்கிவிட்டது. உள்ள கூட்டத்தை வைத்து உரிய நேரத்தில் விழாவை நடத்தலாமென்றாலோ தலைமை தாங்கவேண்டியவர் வந்து சேரவில்லை.

அப்படி இப்படி என்று மணி ஆறே காலாகிவிட்டது. தலைமைக்குரியவர் வந்தார். வந்தும் ஒரு கால் மணி நேரம் இழுத்தடிப்பு. பிறகு கூட்டம் ஒரு வழியாகத் துவங்கியது.

செயலாளர் பேசினார் இன்னார் தமிழ் வாழ்த்துப் பாடுவார் என்று! ஆனால் தமிழ் வாழ்த்துப் பாடகரை அந்தப் பக்கம் காணவில்லை. அவரைத் தேடிப்பிடித்து வருவதற்குள் ஐந்து நிமிடங்கள் அதில் முடிந்து விட்டன,

வந்தவர், கையிலே ஒரு தாளைப் பிரித்துவைத்துக்கொண்டு, ஒரு மாதிரியாக "சைடு" வாங்கி நின்று கொண்டு, தமிழ் வாழ்த்து என்று எதையோ பாடத் தொடங்கினார். அது ஒரு மூன்று நான்கு நிமிடப் பாட்டு. இசையில்லை, தாளமில்லை, உச்சரிப்போ தமிழின் உயிரையே வாங்கியது; எழுந்து நின்றவர்களுக்கு அது ஒரு கழுத்தறுப்பாகத் தோன்றியது.

தமிழ் வாழ்த்து என்றால் சிக்கனமாக ஒரு விருத்தமாகவோ வெண்பாவாகவோ இருப்பது சால்பு. அதிலும் தமிழை வணங்குவதாகவோ, வாழ்த்துவதாகவோ இருப்பது பொருத்தம். ஓரிரு நிமிடத்தில் பக்திபூர்வமாக பதவிசாக நின்று, இனிமையாகப் பாடினால் நிற்கிறவர்களுக்கும் மொழிப்பற்று ஏற்படும். நிகழ்ச்சிக்கும் ஒரு மதிப்பு ஏற்படும்.

அடுத்தபடியாக வரவேற்புரை. அவர் பேச்சாளர் வரிசையில் இருந்த எழுவரை விளித்துப் பேசினார். அவர்களின் பட்டம், அவர்கள் வகிக்கும் பொறுப்புககள் முதலியவற்றை முறையாகச் சொல்லிவிட்டு அவர் ஒரு பதினைந்து நிமிடம் பேசி முடித்தார். அவரது உரைக்கு அடுத்து மாலை அணிவிப்பு. அத்தனை பேருக்கும் மாலை. மாலை அணிவிப்பவர்கள் அழைக்கப்பட்டனர். அவர்கள் கூட்டத்திலிருந்தும் பின்னாலிருந்தும் வந்தனர். ஓரிருவரைக் காணவில்லை. அவர்கள் வரும்வரை சிறப்புக்குரியவர்கள் மாலையை எதிர்பார்த்துக் கழுத்தை நீட்டிக்கொண்டு நின்றனர். அவர்களுக்கு அதனால் சங்கடம்; பார்க்கிறவர்களுக்கோ அது ஒரு கேலி அங்கம். அதற்காக ஒரு பத்து நிமிடம்.

பிறகு தலைவர் உரை. அவர் பேச்சாளர் பட்டியலைக் கையில் வைத்துக்கொண்டு பட்டியலில் உள்ளபடியும், விழா ஏற்பாட்டாளர்

கிறார். முகவரி: 213, ரயில்வே குவாட்டர்ஸ், ஜாலான் ஸ்பூனர், பாலிங், ஈப்போ.

11. பாலமுருகன் குடிகொண்டிருக்கும் பத்துமலை வட்டாரத்தைச் சேர்ந்தவரான இவரது பெயர் பாலன் என்பதாகும். முகவரி: எண் 1,7வது கல்,பத்து கேவ்ஸ், சிலாங்கூர்.

12. பேராக், சிம்மோரைச் சேர்ந்த கிளாபாங் தோட்டத்தில் வசிக்கும் இவரது பெயர் தம்பிரா செல்வம். எம். சி. இ.வரை படித்திருக்கிறார்.

13. காவல் (போலீஸ்) துறை வீரராகத் தற்சமயம் ஜாலான் கர்னியிலுள்ள போலீஸ் பயிற்சிப் பாசறையில் (பூசாட் லாத்தேகான் போலீஸ் டிராஜா மலேசியா) பயிற்சி பெற்று வரும் இவருடைய பெயர் ஏ. பரியதாஸ்.

14. இவரது பெயர் அ. ராஜமாணிக்கம். அலுவலக உதவியாளராகப் பணிபுரிந்துவரும் இவருடைய முகவரி 2027-2, சன் பெங் வீதி, கோலாலம்பூர்.

15. அரசாங்க அச்சகத்தில் வேலை செய்துவரும் இவரின் பெயர் ஆர் .அன்பரசு என்பதாகும். முகவரி:347-10, ஜாலான் கர்னி, முனிசிபல் குவாட்டர்ஸ், கோலாலம்பூர்.

16. ரைமண்ட் நாண்டஸ் என்பது இவரது பெயர். கிள்ளானில் ஒரு தொழிற்சாலையில் பணிபுரிந்து வரும் இவருடைய முகவரி: டி.பி.ஜி. 686, ஜாலான் ராயா ஜும்பாட், கிள்ளான்

17. இவர் பெயர் கே.சேகரன், சுங்கைபட்டாணி, சுங்கை துக்கான் தோட்டத்தில் பால் வெட்டுத் தொழிலாளியாக வேலை செய்து வருகிறார்.

10



11



12



13



14



15



16



17



18



19



20



21



18. க. திருபுவனதேவி என்பது இவர் பெயர். எல். சி. இ. வரை படித்திருக்கும் இவர் தட்டெழுத்து (டைப்ரைட்டிங்) கற்றுள்ளார். முகவரி: 778, ஜாலான் பூலோ காசாப், சிகாமட், ஜோகூர்.

19. 1563, சாய் லெங் பார்க், பிறை என்னும் முகவரியைச் சேர்ந்த இவரது பெயர் ப. ராஜா. துறைமுகத்தில் பணிபுரிகிறார்.

20. இவருடைய பெயர் எம். துரை ராஜா, எண்: 520, ஜாலான் ஜெர்னி, ஸ்தாப்பாக், கோலாலம்பூர் என்பது முகவரி.

21. இவருடைய பெயர் மெர்தேகா சதாசிவம். தொழிற்சாலை ஊழியராகப் பணிபுரிகிறார். எல். சி. இ. வரை படித்திருக்கும் இவரின் முகவரி: எண். 40, ஜாலான் 2/20, பெட்டாலிங் ஜெயா, சிலாங்கூர்.

களின் படடியலையும் அவர்களின் பட்டங்கள் பதவிகள் முதலான பிறவற்றையும் விளித்துப்பேசினார். அவரது பேச்சு விழாக்குரிய பொருளைக் குறைத்தும், வெளிவிவகாரம் பற்றியும் தமது சொந்த உணர்ச்சிகளை, எரிச்சலைத் தீர்த்துக்கொள்வதுமான பேச்சாக அமைந்தது. ஏறக்காழ நாற்பத்தைந்து நிமிடங்களாகிவிட்டன. கூட்டத்தினர் அந்தப் பேச்சிலேயே பாவம், பாதி சலித்துவிட்டனர்.

முதல் பேச்சாளர் பேசத் தொடங்கினார். ஏனைய பேச்சாளர்களின் பெயர், பதவிப்பட்டியல்களை மீண்டும் பாடிவிட்டு அவரும் பொருளை விட்டு தலைவர்க்கும் தனக்கும் உள்ள உறவு, தன்னை ஏற்பாடு செய்த விழா நண்பர், அவர்தம் சிறப்புக்கள் பற்றியும் ஒரு நீண்ட உரையாற்றினார். இதையெல்லாம் யார் கேட்டார்கள் என்று இருக்கும் கொஞ்சக் கூட்டத்தில் முணு முணுப்பு... ஓரிருவர் எழுந்து வெளியேறியும் விட்டனர்.

அடுத்து விழாத்தலைவர் நேரக் கட்டுப்பாடு குறித்துச் சொன்னார். மற்ற ஐந்து பேச்சாளர்களுக்கும் முகம் சுருங்கிவிட்டது. எதற்காக அழைத்தார்கள், எதைப் பேச அழைத்தார்கள்! ஒரு வேளை பேச்சாளர் கண்காட்சி காட்டவா அழைத்தார்கள்? அந்த ஐவரிலே நல்ல பேச்சாளர் ஒருவரும் இருந்தார். அவர் முத்தாய்ப்பு வைக்கும் பேச்சாளர் என்று கடைசியில் போட்டிருந்தார்கள்.

ஆக, அந்தக் கடைசிப் பேச்சாளர் பேச எழுந்தபோது கூட்டம் முக்கால்வாசி குறைந்துவிட்டிருந்தது. அதற்குள் மண்டபம் "புக்" பண்ணிய நேரமும் கடந்து வெகு நேரமாகிவிட்டது. அதனால் அவர் மூன்று நிமிடம் கூடப் பேசவில்லை; உட்கார்ந்துவிட்டார்.

அவசர அவசரமாகவே மற்ற -வை எல்லாம் முடிந்தன. எரிச்சலும் சலிப்பும் சேர எதையோ தேடி வந்த கூட்டமும் கலைந்தது. விழா பயனேதுமில்லாமல், ஏற்பாடும் தோல்வியடைந்த நிலையில் முடிந்தது.

இந்த நிலை நமது விழாப் பெருமைகளை இன்னும் குலைத்துக்கொண்டிருக்கிறது. விழா நடத்தப்படும் நோக்கமும் குலைந்துவிடுகிறது.

அளவான பேச்சாளர்கள்' பொருள் பொதிந்த, தேவையான பேச்சு, நாகரிகமான செயல்முறை, அந்த அந்த நிகழ்ச்சிகளின்போது ஆள்தேடும் படலம் இல்லாமை, முறையான வரவேற்பு, உடனுக்குடன் காரியங்களை முடித்தல் முதலியவற்றில் நாம் சரியாக இருக்க வேண்டும்.

ஒருவர் பேச்சாளர்களைப் பற்றி சொல்வதோடு போதும். எல்லாரும் அதனையே மீண்டும் மீண்டும் ஒப்புவிப்பதைத் தவிர்க்கவேண்டும்; அதன் காரணமாக ஏற்படும் நேரச் செலவை மீதப்படுத்தலாமல்லவா?

விழாக்கள், நமது நிலைகள் விழாமல் இருக்கத்தான் கொண்டாடப்படுகின்றன. விழாக்களினால்தான் நாம் இன்னும் நமது உரிமைகளை, நிலைமைகளை அனுபவித்து வருகிறோம். விழாக்கள் உண்டாக்கும் உணர்ச்சிகள் சமூகத்துக்குப் பலம் சேர்ப்பன. எனவே விழாக்களுக்கு நமது மக்கள் திரண்டுவந்து ஆதரவு நல்குவது விழா ஏற்பாட்டாளர் நன்மைக்கு அல்ல, நமது சமூக நன்மைக்கே என்பதை உணரவேண்டும்.



பாவையர் பக்கம்

எலுமிச்சஞ்சாறு



சாதம் சமைக்கும்பொழுது எலுமிச்சம்பழத்தின் சில துளிகளை விடுங்கள். சாதம் வெண்மையாகவும் மணமாகவும் இருக்கும்.

பானையை அடுப்பில் வைக்குமுன் அதன் பின்புறம் ஒரு துண்டு எலுமிச்சம்பழத்தை வெட்டித் தேயுங்கள். பானையின் அடிப்புறம் நிறம் மாறுவதை அது தடுக்கும்.

புதிய உருளைக்கிழங்கையோ அல்லது வெங்காயத்தையோ உரித்த பின் உங்கள் கைகள் கறையாக உள்ளனவா? உடனே எலுமிச்சம்பழத்தைத் துண்டுகளாக வெட்டி கைகளில் தேயுங்கள். கறை எளிதில் நீங்கும்.

கிளாஸ்களையோ கண்ணாடிப் பாத்திரங்களையோ கழுவுமுன், அந் நீரில் எலுமிச்சம்பழத்தின் சாற்றைப் பிழிந்து விடுங்கள். உங்கள் பாத்திரங்கள் பளிச்சென்று மின்னும்.

-குமாரி பெ. அன்னக்கிளி

தைப்பிங்

நச்சீரகம், கசகசா போன்ற உணவுப் பொருட்களை வாங்கி வந்தவுடன் இருப்புச் சட்டியில் போட்டு வறுத்து வைத்து விடுங்கள்; பூச்சி பிடிக்காமல் பாதுகாப்பாக இருக்கும். விலைவாசி அதிகமாக உள்ள இந்நாளில் இந்த முறை தேவை அல்லவா!

முருங்கைக்கீரை



ஒவ்வொரு நாளும் முருங்கைக் கீரையைப் பிரட்டியோ, சாம்பாரில் போட்டோ உண்டு வந்தால் இனிப்பு நீர் வியாதி நெருங்கி வராது. இனிப்பு நீர் வியாதி உள்ளவர்கள் முருங்கைக் கீரையை அதிக அளவில் சேர்த்துக் கொண்டு பசும்பால் அருந்திவர நோய் குணமாகும்.

-கௌரி

பெண்

1. மரங்களைப்போல் உறுதியும் உரமும் நிறைந்தவன் ஆண்; மலர்களைப்போல் அழகும் மென்மையும் நிறைந்தவள் பெண்.
2. இரண்டு அங்குல நீளமே உடைய பெண்ணின் நாக்கினால் ஆறடி மனிதனையும் வீழ்த்த முடியும்.
3. அழகான பெண் கண்களுக்கு விருந்து; குணமான பெண் மனத்துக்கு விருந்து.
5. பெண்ணின் ஒரு சொட்டுக் கண்ணீர் நூறு ஈட்டிகளைவிட வலிமை வாய்ந்தது.

தொகுப்பு: கிருஷ்ணா

கோலாலம்பூர்

நாணம்



நாணம் என்பது பெண்ணுக்கே சிறப்பான ஒன்று என மதிக்கப்பட்டு வருகின்றது. அதற்கு வரையறை வகுத்து அதற்குரிய இலக்கணம் இயம்புதல் கடினமானது. இன்னின்ன இடங்களில் 'நாண்' தோன்றுவது இயல்பு எனக் கூறலாமே தவிர, "இதுதான் நாண்" என்று காட்ட முடியாது. புதிதாக ஒருவரைக் கண்டபோது தன்னை மறைத்துக்கொள்ளவேண்டுமென ஒரு வகை உணர்ச்சி தோன்றுவதை நாணம் எனலாம். நாணம் என்பது மனத்தே தோன்றும் ஓர் உணர்ச்சி. அது காரணமாகச் சொல் தடைப்படலாம். அது காரணமாக உடலில் ஒருவகை உணர்ச்சி வசப்பட்டு, உடல் சிறிது ஒடுங்கினாலும் ஒடுங்கலாம். இவை உள்ள இடத்து நாண் உண்டு என்பது அறியப்படும்.

"நாணம் என்பது நாரியர்க்கு அழகு" என்று கருதிக் கொண்டு பெண்டிர் சிலர் ஆடவரோடு எக்காரணத்தாலும் உரையாடுதல் இல்லை என்று தீர்மானித்துக் கொண்டிருக்கின்றனர்! பேச வேண்டிய அவசியம் இருந்தாலன்றி ஆடவரோடு பேச வேண்டா என ஒரு பெண் நினைப்பது குற்றமாகாது. கண்ணகி கூடச் சாதாரணமாகப் பிற ஆடவரோடு பேசி அறியாதவள். பேச வேண்டிய அவசியம் ஏற்பட்டபொழுது, பாண்டிய மன்னன் முன்னிலையிற் சென்று வாதாடினதால் அன்றே இன்றும் அவளை உலகம் கொண்டாடுகிறது. அப்படியிருக்க, "நாணம் என்பது நாரியர்க்கழகு" என்று எப்படிப் புகல்வது?

"நாணம் என்பது நங்கையர்க்கு அழகு" என்பதிலும் "நாணமென்பது நங்கையர்க்கு அணி" என்று கூறினாற் பொருந்தும். அணிகளை வேண்டிய சமயத்தில் அணிந்துகொண்டு வேண்டாதபோது கழற்றி வைத்துக் கொள்ள முடியும். இவ்வாறே, அத்தியாவசியமான இடங்களில் நாணத்தை மேற்கொண்டு, பொருந்தாத இடங்களில் நாணத்தை விலக்கி வைக்க மகளிர் பழகிக்கொள்ள வேண்டும். இப்படி வேண்டுங்கால் அணிந்து வேண்டாக்கால் நீக்கலாம் என்பதால் "நாணம் என்பது நாரியர்க்கு அணி" எனக் கூறலாம்.

-குமாரி மாலதி கிருஷ்ணன்

ஈரிக், பேராக்

இலக்கிய அரங்கம்

டாக்டர் இரா. தண்டாயுதம்

எந்தவொரு காலகட்டத்தின் சமுதாயத்தை எடுத்துக் கொண்டாலும், அச்சமுதாயத்தில் அறிஞர்கள் சிலராகவே இருப்பர். புகழும் செல்வாக்கும் பெற்ற கலைஞர்கள், அதிகாரிகள், வணிகர்கள், படைப்பிலக்கியவாதிகள், தொழிலதிபர்கள், தொழில்துறை வல்லுனர்கள் முதலிய பிற துறையினரும் எண்ணிக்கையில் குறைந்தவராகவே இருப்பர். இவர்களைத் தவிர்த்த சாதாரண மனிதர்களே எந்தக் காலத்துச் சமுதாயத்திலும் மிகப் பெரும்பான்மையோராக இருந்திருக்கின்றனர் -இருக்கின்றனர். எனினும், இன்று அவர்களுக்குக் கிடைத்திருக்கும் முக்கியத்துவமும் முதன்மையும் வேறு எந்தக் காலத்திலேனும் அவர்களுக்குக் கிடைத்திருக்குமா என்பது சந்தேகத்திற்குரியதுதான். இதற்குக் காரணம், சாதாரண மக்களை அடிப்படையாகக் கொண்ட மக்களாட்சி முறைதான். அரசியல் அமைப்புக்களுக்கும் படைப்பிலக்கியப் போக்குகளுக்கும் நெருங்கிய தொடர்பிருப்பதை இலக்கிய வரலாறு உணர்ந்தோர் அறிவர். அதனையொட்டியே சாதாரண மக்களை அடிநாதமாகக் கொண்டு எழுதப்படும் நாவல், சிறுகதை ஆகியவை செல்வாக்குப் பெற்ற இலக்கிய வகைகளாகி விட்டன. ஒரு காலத்தில் மன்னர்களின் சிறப்புக்களையும், வீரர்களின் பெருமைகளையும் பாடப் பயன்பட்ட கவிதையும் நாடகமும் கூட, சாதாரண மனிதனின் பக்கம் தங்கள் பார்வையைத் திருப்பி விட்டன. இதனைத் தெள்ளத் தெளிவாக உணர்த்துவதுதான் ஈழத் தமிழ்க் கவிதையுலகில் மலர்ந்த மஹாகவியின் "ஒரு சாதாரண மனிதனது சரித்திரம்!"

து. ருத்திரமூர்த்தி (1927 - 1971) என்ற இயற்பெயரைக் கொண்டவரான மஹாகவி ஈழத் தமிழ்க் கவிதையின் உருவம், உள்ளடக்கம் ஆகிய இரண்டிலும் சோதனை பல செய்தவர். வழிவழியாகக் கவிதைப் பொருள்களாக விளங்கி வருவனவற்றை மாற்றிப் பாடியதுடன் மற்ற கவிஞர்களையும் மாற்றிப் பாடத் தூண்டியவர்.

"இன்னவைதாம் கவி எழுத
    ஏற்றபொருள் என்று பிறர்
சொன்னவற்றை நீர் திருப்பிச்
    சொல்லாதீர்! சோலை கடல்
மின்னல் முகில் தென்றலினை
    மறவுங்கள்! மீந்திருக்கும்
இன்னல், உழைப்பு, ஏழ்மை உயர்வு
    என்பவற்றைப் பாடுங்கள்"

என்று ஏறத்தாழ இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னரே மஹாகவி பாடியுள்ளார். சொன்னதோடு அல்லாமல் பல குறுங்காவியங்களையும் கவிதை நாடகங்களையும் அவர் இயற்றினர். அவை எல்லாமே ஈழத்தின் அன்றாடப் பிரச்னைகளை அடிப்படையாகக் கொண்டவை. சாதாரண நிகழ்ச்சிகள், எளிய கிராம மக்கள், அவர்களது பேச்சு வழக்கோடு ஒட்டிய ஒரு நடை, அவர்கள் எதிர்நோக்கும் பிரச்னைகள், அலங்காரமற்ற கவிதைப் போக்கு, ஆங்காங்கு எளிய சொற்களில் வெளிப்படும் கவிதைத் தெறிப்புகள்—இவை சாதாரணமாக மஹாகவியின் படைப்புக்களில் காணப்படுபவை என்றாலும் சிறப்பாக வெளிப்பட்டு நிற்பது இக் காவியத்திலேயே எனலாம்.

சாதாரண மனிதர்கள் எனும்போது சமூகத்தில் பெரும்பாலோராக இருக்கும் மத்திய தர வர்க்கமே நம் கண்முன் நிற்கிறது. நிச்சயமும் உறுதியும் அற்ற வாழ்க்கை, கிடைக்கும் குறைந்த வருவாயில் போதும் போதாமலும் வாழவேண்டிய அவசியம், உயர்ந்த வர்க்கத்தினரின் வசதிகளுக்கு ஈடுகொடுக்க முடியாமலும் அதே நேரத்தில் கடை வர்க்கத்தினரோடு சேர முடியாமலும் திரிசங்கு சொர்க்கத்தில் கௌரவமாக வாழ வேண்டிய கட்டாயம்—இவை மத்தியதர வர்க்கத்தின் பண்புகள். இதில் திரைப்படம், சீட்டாட்டம், குதிரைப் பந்தயம் என நாற்புறமும் இழுக்கும் ஆசைகள் வேறு. இவற்றிற்கிடையே அல்லல்பட்டு வாழ்ந்தாலும் "முனைந்து முன்னேற வேண்டும்" என்ற முனைப்பு அவர்களில் பலரிடம் உண்டு. மனித ஆற்றலில் தமக்குள்ள இந்த அழுத்தமான நம்பிக்கையைத்தான் மஹாகவி இக்காவியத்தில் காட்டியுள்ளார்.

காவிய நிகழ்ச்சிகள் எனும்போது இக்காவியத்தில் மிகப் பெரிய நிகழ்ச்சிகளோ, திருப்பங்களோ இல்லை. சாதாரண மனிதனின் வாழ்க்கை எவ்வளவு எளியதோ அதேபோல இக்காவிய நிகழ்ச்சிகளும் மிகவும் எளியவை. வடலிக்கூடல் என்ற ஒரு சிறிய கிராமம். இக்கிராமத்தில் ஒரு காலைப் பொழுதில் வேலுப்பிள்ளைக்கும் வள்ளியம்மைக்கும் ஒரு மகன் பிறக்கிறான். அவனுக்கு முத்தையன் என்று பெயரிடுகிறார்கள். எல்லாக் கிராமத்துக் குழந்தைகளைப் போல் அவனும் வளர்கிறான். அவர்கள் விளையாட்டுக்களிலே பங்கும் கொள்கிறான். முத்தையன் வளர்கிறான். தன் தந்தை பாடுபட்டு உழைத்தும் பயன் தராத நிலத்தை ஒதுக்க வேண்டும் என்று நினைக்கிறான்.

"இப்படிப் பல கண்டு வளர்ந்தவன்
    இளைய முத்தையன், "தந்தை இறைக்கிற
உப்பு வேர்வை நிறைய உறிஞ்சியும்
    ஊதியம் தரக் கூசும் நிலத்தினைக்
குப்பை மேடொன் றெதுக்கிப் புதியதோர்
    கோடி கண்டு பெருமை விளைத்திடத்
துப்பிலாதவர் நாமல்ல!" என்னுமோர்
    துணிவு நெஞ்சின் அடியில் அடைந்தனன்"

என்று மஹாகவி இதனைக் கூறுகிறார். இடையில் காதல் என்ற பெயரில் ஒரு காட்சியும் நிகழ்கிறது. சாதியில் தாழ்ந்த செல்லியிடம் மோகம் கொள்கிறான் முத்தையன். ஆனால் கல்லுப்பட்டணம் வந்து ஒரு சிறிய வேலையில் அமர்ந்தபின் செல்லியை வல்லியன் வலிய கொண்டு சென்ற செய்தி அறிகிறான். "அது சரி" என்று அவன் மனத்தில் படுகிறது. பின்னர், பெற்றோர்களின் ஏற்பாட்டின்படி தெய்வயானையை மணக்கிறான் முத்தையன். காலம் நகர்கிறது. நிச்சயமில்லாத வாழ்க்கையூடே எத்தனையோ மனக்கசப்புகள், விரக்திகள்...தெய்வயானை கர்ப்பமாகிறாள். உரிய காலத்தில் ஒரு மகவினைப் பெறுகிறாள். அதே நேரத்தில், அங்கு வயலில் வேலை செய்யப் போன வேலுப்பிள்ளை மயக்கமடைந்து வீட்டிற்குக் கொண்டு வரப்பெற்று மரணமடைகிறான். இது தெரியாமலே 'வேலுப்பிள்ளை' என மகனுக்குப் பெயரிடுகிறான் முத்தையன். வேலுப்பிள்ளையின் மரணச் செய்தி கேட்டு முத்தையன் குடும்பம் ஊருக்குப் போகிறது. அங்கு எதிர்பாராமல் முத்தையனும் இறக்கிறான்; அடக்கமும் செய்யப்படுகிறான். "ஒரு சாதாரண மனிதனது சரித்திரம்" இதுதான். இச்சரித்திரத்தைத் தான் நூறு கட்டளைக் கலிப்பாக்களால் பிறந்தமை, வளர்ந்தமை, முனைந்தமை, திரிந்தமை, மணந்தமை, இணைந்தமை, சிறந்தமை, நிறைந்தமை, நடந்தமை, இறந்தமை என்ற பத்து இயல்களில் மஹாகவி பாடியுள்ளார். பாவகை பழையதே தவிர, அதைப் பயன்படுத்தியுள்ள முறை முற்றும் புதியது.

மத்தியதர வாழ்க்கை, சிக்கல் நிறைந்த தென்றாலும் அதனூடே எதிர்நீச்சல் போட்டு வாழ வேண்டும் என்பதை இக்காவியத்தின் மூலம் மஹாகவி உணர்த்துகிறார். அத்துடன், தொடர்ந்து இடையீடு இல்லாமல் நடந்து வரும் சங்கிலித் தொடர் போன்ற உயிர் இயக்கத்தையும் மஹாகவி இக் காவியத்தின் மூலம் உணர்த்தியுள்ளார். தாத்தாவே பேரனாகி, அப்பேரன் தந்தையாகி, அத்தந்தை பேரனாகி... எனக் காலம் காலமாக உயிர் இயக்கம் நடப்பதைஇக்காவியத்தில் பலஇடங்களில் பார்க்கலாம். தாத்தாவின் பெயர் பேரனுக்கு இடப்படும் பழக்கமும் இதிலிருந்து தானே வந்தது? பகலும் இரவும் போல பிறப்பும் இறப்பும் என்பதையும் கவிஞர் குறிப்பாகச் சுட்டியுள்ளார். "காலை ஒன்று கிழக்கில் விடிந்தது" என்று தொடங்கும் காவியம், "மேற்கிலே ஒரு மாலை படிந்தது" என்று முடிகிறது. பழைய பாவடிவமும் புதிய முறையில் எப்படிக் கையாளப் படலாம் என்பதற்கும், சாதாரண நிகழ்ச்சிகளையும் அலங்காரமில்லாமல் எப்படிக் காவியப் பொருளாக்கிக் கொள்ளலாம் என்பதற்கும் இக்காவியம் நல்லதோர் எடுத்துக்காட்டு.

சுதந்திர தேவி

பாரதியார்



இதந்தரு மனையின் நீங்கி
  இடர்மிகு சிறைப்பட் டாலும்
பதந்திரு இரண்டும் மாறிப்
  பழிமிகுந் திழிவுற் றாலும்
விதந்தரு கோடி இன்னல்
  விளைந்தெனை அழித்திட் டாலும்,
சுதந்திர தேவி! நின்னைத்
  தொழுதிடல் மறக்கி லேனே.

நின்னருள் பெற்றி லாதார்
  நிகரிலாச் செல்வ ரேனும்
பன்னருங் கல்வி கேள்வி
  படைத்துயர்ந் திட்டா ரேனும்
பின்னரும் எண்ணி லாத
  பெருமையிற் சிறந்தா ரேனும்
அன்னவர் வாழ்க்கை பாழாம்
  அணிகள்வேய் பிணத்தோ டொப்பர்.

தேவி! நின் னொளிபெ றாத
  தேயமும் தேய மாமோ?
ஆவியங் குண்டோ? செம்மை
  அறிவுண்டோ? ஆக்க முண்டோ?
காவிய நூல்கள் ஞானக்
  கலைகள் வேதங்க ளுண்டோ?
பாவிய ரன்றோ நின்றன்
  பாலனம் படைத்தி லாதார்?

ஓழிவறு நோயிற் சாவார்,
  ஊக்கமொன் றறிய மாட்டார்;
கழிவுறு மாக்க ளெல்லாம்
  இகழ்ந்திடக் கடையில் நிற்பார்,
இழிவுறு வாழ்க்கை தேரார்;
  கனவினும் இன்பங் காணார்;
அழிவறு பெருமை நல்கும்
  அன்னை! நின் அருள்பெ றாதார்.

பாட்டிசைப்போம்

சி. அன்பானந்தம்

எத்தனைக் கோடிப் பிறப்புவைத்தான் - அதில்
  எத்தனை வாழ்க்கைச் சிறப்புவைத்தான்
அத்தனை வாழ்க்கைச் சிறப்புமிங்கே – மிக
  அன்புடன் ஆக்கியே தேக்கிவைத்தான்!
பித்தனைப் போலவன் செய்யவில்லை - மக்கள்
  பெற்றிமை கண்டுதான் செய்துவைத்தான்
இத்தரை மீதினில் எம்மகம்போல் - வேறே
  இல்லை எனும்வகை ஆக்கிவைத்தான்!

பத்துடன் பத்தாண்டு சேர்ந்துவந்தே - இந்தப்
  பாரில் மலேசியப் பேருயர்த்தும்
கொத்துடன் தீங்கனி வாய்த்ததுபோல் - புதுக்
  கோலமும் தாங்கியே சீருயர்த்தும்!
முத்தருள் செங்கடல் சேரலையான் - கந்தன்
  முன்வந்து தந்திடும் பேருளான்
சொத்தொடும் ஒற்றுமைச் சொர்க்கமென - இதைச்
  சொந்த முறைமைக் கூட்டிவைத்தான்!

வெம்மொழி கூறுவோர் தம்வலையும் - போதை
  விற்கும் கொடியர்தம் நோய்வலையும்
கும்மிருள் சேர்த்துமே வாழ்வொழிக்கும் - அதைக்
  கொற்றத் துணையுடன் போக்கிடுவோம்!
நம்முயிர் போலிந்த நாட்டினையே - தினம்
  நம்மனத் தெண்ணியே காத்திடுவோம்!
எம்மலை நாட்டினிற் கீடொன்றில்லை - என
  இப்புவி போற்றிடப் பாட்டிசைப்போம்!

[illegible]

காரைக்கிழார்

வெள்ளத் தனையமலர் நீட்டம் எனப்புகலும்
வெல்லத் தமிழ்வளரும் மண்டலம் - நிறை
உள்ளத் தனையசெயல் ஓட்டம் எனத்தொடரும்
ஊக்கச் சுடர்பரவும் குண்டலம்

செய்தார் கரங்களிடை செய்தார் எனப்படர்ந்து
சிந்தை குளிரவைக்கும் காரிகை - முனம்
வைதார் மனங்கனிய வாழ்த்தும் குணமெடுத்து
வையம்முழுங்கவைக்கும் பேரிகை

தென்றல் எனமிதந்து நேயம் தனைவளர்க்கத்
தேயம் பலகடந்த மலேசியம் - புகழ்க்
குன்றம் எனப்புதிய பண்டம் படைத்துலகில்
கொண்டும் கொடுத்துமுயர் சுதேசியம்

சிங்கம் புலிகரடி திரியும் கொடுவனத்தில்
சிந்தை மகிழ்ந்துலவும் மானினம் - அது
எங்கள் மலைநிலத்து மாந்தர் உறவறிந்த
ஏக்கம் தனில்வளைந்த கூனினம்

இன்னல் மிடிமைஎனும் புண்ணைத் துடைத்தெடுத்த
இருப தகவையுறும் விடுதலை - அது
மின்னல் ஒளிச்சரடு பின்னக் கெடும்இருளை
அன்னத் துரத்தியது கெடுதலை


அச்சம் மடம்பயிர்ப்பு நாணம் இவையனைத்தும்
ஆளப் பிறந்தஇனம் பெண்ணினம் - பகை
துச்சம் எனமதித்து 'பெத்தோங்' படையெடுத்த
தோழர் மிகுந்தஇனம் என்னினம்

ஏழைத் திசையிருந்து மேலுக் கனுப்புகின்றோம்
ஏறிப் பதப்படுத்தும் ரப்பரை - அடி
வாழைத் தொடர்ச்சியென வாழ்வை நமக்களிக்க
வாயைப் பிளந்திருக்கும் கொப்பரை

மெச்சத் தொழில்புரியும் மேன்மைக் குடிகளுக்கு
மெத்தைச் சுகம்வழங்கும் மேனகை - இதில்
எச்சில் தனம்புரிய எண்ணும் பதடிகளுக்
கென்றும் நரம்பறுந்து போனகை

சீனக் கிழவியொரு சின்னக் கடைவிரிக்கச்
சேரும் பொருள்வளத்தைப் பாரடா - வெறும்
ஞானக் கிறுக்கரென நாளைக் கடத்தியொரு
நாருக் கிணையிருந்த தாரடா

உரிமைப் பயிர்வளர்க்கும் நிலத்தின் வகையறிந்த
உரிய தொழில்முறையைப் பேணுவோம் - நம்
வறுமைப் பிடியறுந்த வளமே சுதந்திரத்தின்
வடிவம் எனும்நிலையைக் காணுவோம்



சுதந்திரம்

பாரதிதாசன்

தித்திக் கும்பழம் தின்னக் கொடுப்பார்
மதுரப் பருப்பு வழங்குவார் உனக்குப்
பொன்னே, மணியே, என்றுனைப் புகழ்வார்;
ஆயினும் பச்சைக் கிளியே அதோபார்!
உன்னுடன் பிறந்த சின்ன அக்கா
வான வீதியில் வந்து திரிந்து
தென்னங் கீற்றுப் பொன்னூசல் ஆடிச்
சோலை பயின்று சாலையில் மேய்ந்து
வானும் மண்ணுந்தன் வசத்திற் கொண்டாள்!
தச்சன் கூடுதான் உனக்குச் சதமோ?
அக்கா அக்கா என்றுநீ அழைத்தாய்
அக்கா வந்து கொடுக்கச்
சுக்கா மிளகா சுதந்தரம் கிளியே?

ஒளிருவோம்

ஆதம்குமார்

கொடியுயர்ந்து மிடியயர்ந்து
கோனுயர்ந்த நாடிதே!
மடியயர்ந்த மக்களுள்ளம்
மகிழ்ச்சிகீதம் பாடுதே!

படிய ளக்கும் மலைய அன்னை
பரிவு டையாள் உண்மையே!
பாடு பட்ட அனைவ ருக்கும்
பகிர்ந்த ளித்தாள் நன்மையே!
இடிமு ழக்கும் வேற்று எண்ணம்
ஏது மிங்கே இல்லையே!
இணைந்து ழைத்தே வெற்றி காணல்
என்றும் நோக்கும் எல்லையே!

இறைவ னுண்டு என்று நம்பி
இனிய செயல்க ளாற்றுவோம்!
இல்லை யென்ப தில்லை இங்கே
எனமு ழக்கிச் சாற்றுவோம்!
துறைகள் தோறும் ஆணும் பெண்ணும்
துணிந்த சேவை செய்குவோம்!
துளிரும் புதிய சமுதா யத்தார்
தூய்மை யோடே உய்குவோம்!

திட்டம் யாவும் வெற்றி யாக
செயல்தி றத்தைக் காட்டுவோம்!
தீய சக்தி இங்கு வந்து
சேர்ந்தி டாமல் ஓட்டுவோம்!
சட்டம் கூறும் விதிமு றைக்கே
தலைவ ணங்கி மிளிருவோம்!
சரித்தி ரத்தில் நாம்நி லைக்க
சார்ந்தி ருந்தே ஒளிருவோம்!

பிரகடனம்

கு. பெருமாள்

இராகம்: மோகனம் தாளம்: திரிசிரம்

பல்லவி


உலகுக் கொரு பிரகடனம் விடுப்போம்! —நாம்
உலகுக் கொரு பிரகடனம் விடுப்போம்!

கண்ணிகள்

அன்பே எங்கள் மலேசியச் சின்னம்,
அனைவரும் ஒன்றெனும் கொள்கையே செங்கோல்;
இன்ப வாழ்வே எங்களின் குறிக்கோள்;
இணைந்து வாழ்வோம் வாரீர், வாரீர்!-என;
-(உலகுக்கொரு)

பகைவேண் டாத பாங்கினர் நாங்கள்,
பண்பா டுயர்ந்த மலேசிய மாந்தர்!
குகைபோல் மனத்தை இருளாக் காதீர்;
கூடி வாழ்வோம் வாரீர், வாரீர்! -என;
-(உலகுக்கொரு)

மானிடர் தம்மை மதிப்பவர் நாங்கள்,
தேன்நிகர் இனிமை சேர்க்கும் மலேசியர்!
ஈனமாம் பிரிவு இல்லா தாக்கி
இணைந்து வாழ்வோம் வாரீர். வாரீர்! -என;
-(உலகுக்கொரு)



பால்மரக் காட்டினிலே

அகிலன்

11. ஆணிவேரின் அடியிலே...

கண்ணம்மாவின் கடைசிக் கடிதத்தைப் படித்த பாலன் அப்படியே காரில் சாய்ந்துவிட்டான். அவனுக்குக் கண்கள் இருண்டு கொண்டு வந்தன; வாயடைத்து விட்டது; மூச்சுத் திணறியது. மயங்கி விழுந்த பாலனைக் கண்டு உடன் வந்த கணேசன் பயந்து பதறிப் போனான். சில நிமிஷங்களுக்குப் பிறகு பாலனின் விழிகள் திறந்து கொண்டபோதே கணேசனுக்கு நம்பிக்கை வந்தது.

அடுத்த எஸ்டேட்டுக்குள் கார் நுழைந்தது. அங்கே ஏதுமே நடக்காததுபோல் அவரவர் வேலையை அவரவர் பார்த்துக்கொண்டிருந்தார்கள். வேலைக்குப் புறப்படும் வேளையில் கண்ணம்மா இப்படிச் செய்து கொண்டுவிட்டதால், பலருக்குச் செய்தி பரவியிருக்காது என்று நினைத்தான் கணேசன். காலத்தையும் நேரத்தையும் கணக்கிட்டுத்தான் தனக்கு முடிவு தேடிக்கொண்டிருக்கிறாள் கண்ணம்மா. கணேசனையே கூட, அவன் மஸ்டர் களத்துக்குப் புறப்பட்டுக்கொண்டிருந்த போது தான் பழனி வந்து பார்த்துச் செய்தியைக் கூறினான்.

கண்ணம்மாவின் வீட்டுக்குமுன் கார் வந்து நின்றது. வீட்டின் கீழ்ப் பகுதியில் ஐந்தாறு ஆண்கள் மௌனமாக உட்கார்ந்திருந்தார்கள். மேலே பெண்களின் அழுகுரல் கேட்டது. கணேசன் கைத்தாங்கலாகப் பாலனைப்பிடித்துக்கொண்டே காரிலிருந்து இறங்கினான். அவனுடைய பிடியிலிருந்து உதறிக் கொண்டு வெறி பிடித்தவன்போல் மேல் தளத்துக்கு ஓடினான் பாலன். பாலனைக் கண்ட பெண்களின் அழுகுரல் குபீரென்று பொங்கி எழுந்தது.

எதிரில் கிடந்த கண்ணம்மாவைப் பார்த்துக் கொண்டு வாசற் கதவருகே சற்று நேரம் சிலையாக நின்றான்.

"பாலா, உன்னையும் என்னையும் ஏமாத்திட்டுப் போயிட்டா, பாலா!" என்று பெற்ற வயிறு பற்றி எரியக் கதறினாள் தங்கம்மாள். "பொண்ணும் மாப்பிள்ளையுமா உங்களை மணவறையிலே வச்சுப்பார்க்க நான் எவ்வளவு ஆசைப்பட்டேன் தெரியுமா? நேத்து ராத்திரி தான் எங்கிட்டே வந்து நடந்ததைச் சொல்லி, தான் கட்டிக்கிட்ட தாலியை எனக்குக் காட்டினா. புதுப் பொண்ணு வேசம் போட்டு உங்கிட்டே நாடகமாடிட்டு, ஒரு நாள் கூத்தோட உன்னையும் என்னையும் விட்டுப் போயிட்டா, பாலா! நான்கூட அதுக்காக அவளைத் திட்டலே, வையலே, ஒரு சொல் சொல்லலே! "இத்தனை பேர் இருக்கிறப்ப நீ கள்ளத் தாலி கட்டிக்க வேண்டிய காலம் வந்திருச்சேன்னு" சொல்லி, ஒரு சொட்டுக் கண்ணீர் வடிச்சேன். அவ்வளவு தான். அவ எதுக்குத் தாலி கட்டிக்கிட்டான்னு இப்பத்தானே தெரியுது?"

வாயிலும் வயிற்றிலும் அடித்துக்கொண்டு தன் பெண்ணின் மேல் விழுந்து புரண்டாள் தங்கம். பாலன் தன் வாயில் கைக்குட்டையை வைத்துக் கையால் அடைத்துக் கொண்டு, அழுகையை அடக்க முயன்றபடி, கண்ணம்மாவின் தலை அருகே சென்று உட்கார்ந்தான். தலைக்குப் பின்னால் குத்துவிளக்கு ஒன்று எரிந்துகொண்டிருந்தது. அவளை மௌனமாக உற்றுப் பார்த்தான். விழிகள் மட்டிலும் மேலே செருகியிருந்தன. அவள் அவனுக்காக முதல் நாள் உடுத்துக்கொண்டிருந்த அதே உடை; அவனுக்காகச் செய்து கொண்டிருந்த அதே அலங்காரம்; அவள் கழுத்தில் அவன் கட்டிய அதே மஞ்சள் கயிறு. புதுப் பெண் கோலத்திலிருந்து அவள் இன்னும் மாறவில்லை.

"திடீர்னு இப்படி என்னை விட்டுட்டுப் போறதுக்குத்தான் நேத்து அப்படியெல்லாம் என்னை ஆட்டிப் படைச்சியா? முன்னாலேயே இதை முடிவு செஞ்சிட்டுத்தான் எங்கிட்டே நீ கழுத்தை நீட்டினியா?" பாலன் தனக்குள் கேள்விகளை எழுப்பிக் கொண்டான்.

கண்ணம்மாவின் ஆசைகளுக்கும் பொறுப்புணர்ச்சிக்கும் நடைபெற்ற போராட்டம் இப்போது தான் அவனுடைய நெஞ்சுக்குள் மின் வெட்டியது. கல்யாணம் செய்து கொள்ள வேண்டுமென்ற ஆசையில் அவ்வளவு தீவிரமாக இருந்தவள், அதற்காகப் பாலனுடைய வேலை பறிபோவதற்குச் சிறிதும் இசைய



வில்லை. தனக்காகப் பாலன் அவனுடைய குடும்பத்தையும் வேலையையும் விட்டு விட்டு வெளியேறுவதைப் பிடிவாதமாக மறுத்தாள். "இந்தக் காலத்துப் பெண்களில் இப்படியும் ஒருத்தி இருக்க முடியுமா? எப்படியும்தான் மட்டும் வாழ்ந்தால் போதும் என்று நினைக்கிற உலகத்தில், அடுத்தவர் வாழ்வுக்காகத் தன்னையே அழித்துக் கொள்ளும் குணம் இவளுக்கு இந்த வயதில் எங்கிருந்து வந்தது?

நேற்றுப் பேசிய அதே பேச்சைக் கண்ணம்மா மீண்டும் வாய் திறந்து பேசுவது போல் பாலனுக்கு ஒரு பிரமை ஏற்பட்டது. "நீங்க பொழைக்கிற பொழப்பிலே நான் மண்ணைப் போடறதுக்காக உங்களைக் கல்யாணம் செய்துக்கணுமாக்கும்! உங்க குடும்பத்திலேருந்து உங்களை நான் தனியாகப் பிரிக்க மாட்டேன். உங்கஅண்ணன் முருகன்தான் குடும்பத்தை அடியோட மறந்திட்டாரு. எனக்காக நீங்களும் வேலையை விட்டு வந்திடவேண்டாம். அந்தப் பாவத்தை நான் செய்யமாட்டேன்."

பாவம் செய்து மகிழ்ச்சியோடு வாழ்வதைவிடப் புண்ணியவதியாகச் சாவது மேல் என்று துணிந்து விட்டாள் போலும்! அவனையும் மீறி அவன் விழிகளில் நீர் பொங்கி வழிந்தது. கண்ணம்மாவுக்கு அப்படி ஒன்றும் வயது அதிகமாகவில்லை; படிப்பும் அந்தத் தோட்டத்தின் தமிழ்ப்பள்ளிக்கூடப் படிப்புத்தான்; விவரமறியாச் சிறுமி என்று பாலனால் மதிக்கப்பட்ட பெண் அவள். அந்தச் சின்னஞ்சிறு பெண்ணின் மனத்துக்குள்ளே இவ்வளவு பெரிய பெரிய எண்ணங்களா? இவை எங்கிருந்து வந்தன? எப்படி வந்தன? படித்துப் பட்டம் பெற்ற அறிவாளியான முருகன் பேசிய பேச்சுக்களுடன் கண்ணம்மாவின் பேச்சையும் செயலையும் அப்போது பாலனால் ஒப்பிட்டுப் பார்க்காமல் இருக்க முடியவில்லை.

தமிழ் நாட்டில் பிறந்து வளராத பெண் இவள்; அந்த நாட்டின் ஆணிவேர் அறுபட்டு, கடல் கடந்த நாட்டில் பிறந்து வளர்ந்துங்கூடப் புதுவேர் படராத ஒரு நிலையற்ற வாழ்வின் சொந்தக்காரி. என்றாலும் வாழையடி வாழையாக வந்த அந்த மண்ணின் ரத்தத்துக்கே உரிய தனித்தன்மையா இது? இடத்தாலும் காலத்தாலும் சோதனைகளாலும் ஏன்? காலனாலும்கூட, கரைக்க முடியாத தியாக உணர்வு என்பது இதுதானா?

பாலனைப் பொறுத்தவரையில் அந்த வேளையிலேயே அவன் இதய பீடத்தில் அவள் ஒரு தெய்வத் திருமகளாக ஏறி அமர்ந்து கொண்டு விட்டாள். பாலனுக்கு அப்போது வெறும் உயிரற்ற ஓர் உடலின் அருகே உட்கார்ந்திருப்பதாகத் தோன்றவில்லை. தோட்டப்புறக் கோயில்களில் குடிகொண்டுள்ள மாரியம்மனின் அம்சம் அவள்; காளிதேவியின் கருணை வடிவம்; பராசக்தியின் திவலைச் சுடர்.

அவள்மீது விழுந்து கதற வேண்டுமென்று தோன்றிய வேகத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டு அவள் காலடிக்கு வந்தான் பாலன். கண்ணம்மாவின் பாதங்கள் இரண்டையும் பற்றிக்கொண்டு சில விநாடிகள் கண்மூடியிருந்தான். பிறகு அவளைக் கையெடுத்துக் கும்பிட்டுவிட்டு, அங்கிருந்து மௌனமாகக் கீழே இறங்கி வந்தான். முதல் நாள் இதே வேளையில் ஆசாபாசங்களில் உழன்று அவனுக்கு மனைவியாக இருந்தவள், இன்று அவ்வளவையும் உதறிவிட்டு, அவனால் எட்டிப் பிடிக்க முடியாத தொலைவுக்கு எங்கோ சிறகடித்துப் பறந்துவிட்டாள்; ஆசைத் தளைகளை அறுத்துக் கொண்டு போய்விட்டாள்.



வீட்டின் கீழ்ப்பகுதிக்கு அந்தத் தோட்டத்துக் கிராணி வந்திருப்பது தெரிந்தது. கண்ணம்மாவின் தகப்பன் பழனியிடம், "எல்லாத்தையும் சட்டுப்புட்டுன்னு முடிச்சிடு; காய்ச்சலாக் கிடந்து உயிர் போயிருச்சுன்னு சொல்லு; வெளியிலே ஒண்ணும் விசயம் தெரியவேண்டாம். தெரிஞ்சா உனக்கும் தொல்லை; எங்களுக்கும் தொல்லை" என்றான் கிராணி.

இதற்குள் பாலனின் பெற்றோரும் அங்கே வந்து சேர்ந்தார்கள். கண்ணம்மாவின் கடைசிப் பயணத்துக்கான காரியங்கள் ஒருபுறம் மளமளவென்று நடைபெற்றுக் கொண்டிருந்தன. கணேசனும் அவனுடைய நண்பர்களும் முன்னால் நின்று அந்த வேலைகளைக் கவனித்தார்கள்.

நடுப்பகல் வேளைக்கு அவளைப் பச்சை மூங்கில்களில் கிடத்தித் தூக்கிக்கொண்டு சென்றார்கள். பத்துப் பதினைந்து பேர் புடைசூழப் பயணம் புறப்பட்டாள் கண்ணம்மா. அந்தத் தோட்டத்திலே தனக்குத் திருமண ஊர்வலம் நடக்க வேண்டுமென்று ஆசைப்பட்டவள் அவள்; நடக்கப் போகிறது என்று கனவு கண்டவள் அவள். அந்த ஆசைகள் அப்படியே நிறைவேறாவிட்டாலும் கூட, அவள் பாலன் கட்டிவிட்ட தாலியும் கழுத்துமாகத்தான் சென்றுகொண்டிருந்தாள். பூவும் பொட்டும் மஞ்சள் குங்குமமும் குலையாமல் தான் ஊர்வலம் போய்க்கொண்டிருந்தாள். அவளுடைய கணவன் பாலனே அவளுக்காக நெருப்புச் சட்டியைச் சுமந்துகொண்டு முன்னால் நடந்தான்.

நேரம் சென்றது.

எல்லாக் காரியங்களும் ஒரு வழியாக முடிந்து விட்டன. நோட்டீஸ் கொடுத்து அந்த மண்ணிலிருந்து அவளைத் துரத்த முயன்றவர்களின் தந்திரம் கண்ணம்மாவிடம் பலிக்கவில்லை. அவள் பிடி சாம்பராகி அந்த மண்ணோடு மண்ணாய் இரண்டறக் கலந்து விட்டாள். அவளுக்கு முன்னே எத்தனை எத்தனையோ தோட்டத் தொழிலாளர்கள் அங்கே சாம்பராகி அந்த மண்ணுக்குச் சொந்தம் கொண்டாடியிருக்கிறார்கள் அல்லவா? அவர்கள் கூட்டத்தில் கண்ணம்மாவும் ஒன்றிக் கலந்து பூமி புத்திரியாகிவிட்டாள்.

இரண்டு நாட்களுக்கு எதுமே ஓடவில்லை பாலனுக்கு. பிரமை பிடித்தவனைப்போல் நடந்து கொண்டான். நேரத்தில் பெரும்பகுதியைத் தன் மாமன் பழனியின் வீட்டிலும் கணேசன் வீட்டிலுமே கழித்தான்.

கண்ணம்மாவின் பிரிவைவிடப் பயங்கரமான பிரச்னையொன்று பழனியின் குடும்பத்தை மட்டுமா நெருங்கிக் கொண்டிருந்தது? கணேசனின் குடும்பத்தையும் அவனைப் போன்ற நூற்றுக்கணக்கான வர் குடும்பங்களையும் அது அலைக்கழித்துக் கொண்டிருந்தது.

தோட்டத்தைவிட்டு வெளியேற வேண்டிய நாளைப் பலர் அங்கே தூக்குமேடைக்குச்செல்லும் கைதிகளைப்போல் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

எப்படியோ தமிழ் நாட்டுக்குப் போய்ச் சேர்ந்து, விதிவிட்ட வழியிலே காலந்தள்ள நினைத்தவர்கள் சிலர்; எதையுமே திட்டமிடாமல் தெருவுக்குப் போய் மரத்தடிகளில் குடியிருக்க நினைத்தவர்கள் சிலர்; தொலை தூரக் காடுகளில் புதிதாக உருவாகிக் கொண்டிருந்த குடியிருப்புக்களில் தங்களுக்கு வீடும் நிலமும் கிடைக்குமா என்று தேடி அலைந்தவர்கள் சிலர்; ஸாபா மாநிலத்தின் புதிய ரப்பர்க்காடுகளுக்குப் போனால் அங்கே தங்களுக்கு வேலை கிடைக்கும் என்று நம்பியவர்கள் சிலர். இவ்வாறாகப் பலர் அங்கே பல்வேறு திசைகளிலும் மனத்தைத் திரியவிட்டு அலைக்கழிந்து கொண்டிருந்தார்கள்.

பொழுது விடிந்து பொழுது போகுமட்டும், அதற்குப் பிறகு இரவு முழுவதும், அங்கிருந்த பெரும்பாலானவர்களை ஒருவகை நம்பிக்கை வறட்சி பிடித்து ஆட்டிக்கொண்டிருந்தது. பாதுகாப்பற்ற தன்மை பயமுறுத்திக்கொண்டிருந்தது. அந்தத் தோட்டத்தில் வாழ்ந்த மூன்றில் ஒரு பங்குத் தொழிலாளர்களைத் தவிர மற்றவர்கள் வெளியேற்றப் படுவது உறுதி என்று சொல்லிவிட்டார்கள்.

பழனியின் குடும்பத்துக்கு ஸாபா மாநிலத்துக்குப் போவதைத் தவிர, வேறு வழியிருப்பதாகத் தெரியவில்லை. பழனி, அவன் மனைவி தங்கம், மகள் காமாட்சி, மற்றும் இரு சிறு பையன்கள் ஆகிய ஐவரும் புறப்படுவதற்கு ஏற்பாடு செய்து கொண்டிருந்தார்கள்.

பாலனும் கணேசனும் ஒருநாள் மாலை மேட்டருவிக் கரையில் உட்கார்ந்து இந்தப் பிரச்னையைப் பற்றிக் கவலையோடு பேசிக் கொண்டிருந்தார்கள். கணேசன் பல நாட்களாக இதைப்பற்றி நினைத்துக் குழம்பிக் கொண்டிருந்தான்.

"ஆமா, உனக்கும் நோட்டீஸ் குடுத்தாச்சே? நீ என்ன செய்யப் போறே?" என்று கணேசனைக் கேட்டான் பாலன்.

"என்னோட சொந்தப் பிரச்னை ஒண்ணும் பெரிய பிரச்னையில்லே; நானும் என்னோட அம்மாவும்தான் இருக்கோம். எப்படியாவது என் கையாலே உழைச்சு எங்கம்மாவுக்கு சோறு போட்டுடுவேன். ஆனால் நான் நினைக்கிற பிரச்னை இதை விடப் பெரிய பிரச்னை!"

"பெரிய பிரச்னையா?"

"நடந்ததையெல்லாம் பார்த்த பிறகு, நான் என்னோட வயிற்றைக் கழுவறதுக்கும் எங்கம்மாவுக்குச் சோறு போடறதுக்குந்தான் வாழனுமான்னு தோணுது. இந்த உடம்பையும் உசிரையும் வச்சிக்கிட்டுத் தோட்டத் தொழிலாளிகளுக்கு ஏதாச்சும் செய்ய முடியாதான்னு யோசிக்கிறேன். பத்துப் பதினைஞ்சு நாளா எனக்கு இதே யோசனை தான்."

கணேசன் இப்படிப் பேசிய போது அவன் விழிகளில் தென்பட்ட ஒளிக்கீற்றைப் பாலன் கவனிக்கத் தவறவில்லை. மற்றவர்களுக்காக வாழ நினைக்கும் நினைப்புக்கே ஓர் அபூர்வமான காந்த சக்தி இருக்கத்தான் செய்கிறது. கணேசனின் இந்தப் பேச்சால் கவரப்பட்டு, ஆர்வத்தோடு அவன் அருகில் நெருங்கி உட்கார்ந்தான் பாலன். தொடர்ந்து பேசினான் கணேசன்.

"எனக்குப் படிப்புப் பத்தாது; வயசும் அப்படி ஒண்ணும் ஆயிடலே. ஆனாலும் எனக்கு என்னமோ இந்தத் தோட்டத்து வாழ்க்கை இயற்கையான வாழ்க்கையா, நியாயமா மனுசன் வாழ வேண்டிய வாழ்க்கையாத் தோணலே. எவனோ எப்பவோ நம்மவங்களைக் கொண்டாந்து ஒரு கூண்டிலே அடைச்சுப் போட்டது போல இங்கே போட்டிருக்கான். இப்ப என்னடான்னா வேறெவனோ வந்து அந்தக் கூண்டு வாழ்க்கை கூட நமக்குச் சதமில்லேங்கறான்."

"நீ படிக்காததுனாலே ஒண்ணும் நஷ்டம் இல்லே" என்றான் பாலன்; "படிச்சவங்க சில பேரு இதிலேருந்து தப்பிச்சிக்கப் பார்க்கிறாங்களே தவிர, அடுத்தவங்களைப் பத்திக் கவலைப் படறதில்லே."

"சிரம்பானிலே நான் இருந்துக்கிட்டுச் சின்னதா ஒரு தொழிலோ வியாபாரமோ செய்யப் போறேன். அந்தத் தொழிலோ வியாபாரமோ தோட்டங்களோட சம்பந்தமுள்ளதா இருக்கணும். என் சாப்பாட்டுக்கு உழைச்ச நேரம் போக, நம்மைப் போலப் பத்துப் பேரோட சேர்ந்து ஏதாவது செய்ய நினைக்கிறேன். நீதான் எனக்கு இதிலே வழி காட்டணும். நீதான் எனக்கு இதிலே வாத்தியார். நீ என்னைவிடப் படிச்சவன்; விசயம் தெரிஞ்சவன்."

பாலனுக்கு மெய்சிலிர்த்தது. தன்மீது கணேசனுக்கு இவ்வளவு நம்பிக்கையா?

"என்னாலே என்ன செய்ய முடியும் கணேசா?" என்று கேட்ட பாலன், "தோட்டத் தொழிலாளர்களோட சங்கமும் ஒரு பக்கம் அதனாலே முடிஞ்சதைச் செய்துக்கிட்டு வருது; அரசியல் ரீதியாகவும் மறுபக்கம் தலைவர்கள் வளர்ச்சிக்குப் பாடுபட்டு வர்ராங்க; இவ்வளவையும் மீறிக் காரியங்கள் நடக்கிறப்ப நாம என்ன செய்ய முடியும்?" என்று கேட்டான்.

"மத்தவங்க செய்யறதைச் செய்யட்டும். அது பத்தாது. ஆனால் நான் இப்போ உங்கிட்டக் கேட்கவேண்டிய கேள்வி முக்கியமான கேள்வி. சுமார் அஞ்சு லட்சம் பேரோட எதிர்காலத்தைப் பற்றிய கேள்வி."

"என்ன அது?" என்றான் பாலன்.

"ரப்பர்த் தோட்டத்தை விடச் செம்பனைத் தோட்டம், போடறதாலே ரொம்ப லாபம் இருக்குதாம். அதுக்கு இவ்வளவுபேர் தொழிலாளர்களும் தேவையில்லையாம். அதனாலே இப்போ ரப்பர்த் தோட்டத்திலேயே செம்பனையையும் போட்டுக்கிட்டு வர்ராங்க. ஆட்களுக்கு வேலைப்பஞ்சம் தலைகாட்டுது. திடீர்னு ரப்பருக்கே தேவையில்லேங்கிற நிலை வருதுன்னு வச்சுக்க. அப்ப இத்தனை பேரும் என்ன செய்வாங்க?"

"அந்த நிலை இப்போதைக்கு வராதுன்னு நினைக்கிறேன்."

"இப்போதைக்கு வரலேன்னாக் கூட, ரப்பர் மரம் வெட்றதைத் தவிர, வேறே எந்த வேலையுமே செய்யத் தெரியாத ஒரு கூட்டம் இருக்கலாமாங்கறதுதான் என் கேள்வி. வேறே எந்த வேலையுமே பழகாமல், வேற எந்தவேலைக்குமே லாயக்கில்லாமல் இருக்கிறதுனாலே தானே இன்னம் நாலு நாளைக்குப் பிறகு நூத்துக் கணக்கான குடும்பம் அவதிப்படப் போகுது? காலப் போக்கைத் தெரிஞ்சுக்கிட்டு அதுக்குத் தகுந்தாப்பிலே நாம்ப இங்கே வாழவேண்டாமா?"

பிரச்னையின் ஆணி வேரையே தொட்டுவிட்டான் கணேசன். மிகவும் ஆழமான கேள்விதான் அவன் கேட்ட கேள்வி. மேலெழுந்த வாரியாகப் பலர் ஏதேதோ செய்து கொண்டிருந்தார்களே தவிர வாழ்க்கைப் போராட்டத்தை வெற்றியுடன் நடத்துவதற்கான அடிப்படை வழி இன்னும் தோட்டங்களில் வாழ்ந்த பலருக்கு அடைக்கப் பட்டே கிடந்தது.

உடனடியாகப் பாலன் பதில் ஏதும் சொல்லவில்லை. நினைத்துப் பார்த்தான். 'ஆமா, கணேசன் சொல்றதும் உண்மைதானே? பரம்பரை பரம்பரையா ஒரே தொழிலை மட்டும் செய்யத் தெரிஞ்ச மனித யந்திரமாகத்தானே வெள்ளைக்காரன் எங்களை இங்கே தோட்டத்துக்குள்ளே அடைச்சு வச்சிருக்கான்? வெளி உலகத்தைப் பார்த்து நாலுபேரைப் போலே முன்னுக்கு வந்திடக்கூடாதுன்னு தானே தனியா எங்களை ஒதுக்கி வச்சிட்டான்? மலாய் மக்களோடே, சீனமக்களோடே பழகறதுக்கும் அவங்க மொழியைத் தெரிஞ்சுக்கறதுக்குங்கூடப் பலருக்கு இங்கே வழியில்லையே! பள்ளிக்கூடங்கறது ஏதோ பேருக்கு இருக்கே தவிர, மேல் படிப்புப் படிச்சு முன்னுக்கு வர்ரதுக்கு இதிலே வாய்ப்பே கிடையாதே! திடீர்னு ரப்பர்த் தொழிலிலே நஷ்டம் வந்திட்டா அவன் பாட்டுக்குக் கப்பலேறிப் போயிடுவான். லட்சக்கணக்கானவங்களுக்குப் பிழைக்க வழி? வாழ வழி?'

"உண்மைதான் கணேசா" என்றான் பாலன்; "வரப்போற தலைமுறைக்காவது நாம் வழிகாட்டத் தான் வேணும்" என்றான்.

"நீ படிச்சவன்; நீ முதல்லே எனக்கு இதிலே வழிகாட்டு. நாம ரெண்டு பேரும் நம்மாலே முடிஞ்சதைச் செய்வோம்" என்றான் கணேசன்.

(தொடரும்)



15 நாள் பலன்

ஆக. 26 முதல் செப்டம்பர் 10 வரை

கும்பம் (ஜன 20 — பிப் 18)

எதிர்கால வாழ்க்கையின் வளத்திற்கான பொருளாதார நடவடிக்கைகளிலும் கூட்டுத் தொழில்களிலும் ஈடுபட முயல்வீர்கள். என்றாலும் கூட்டுத் தொழில்களுக்கு இது ஏற்ற தருணமல்ல! உங்களுக்கோ உங்களைச் சார்ந்தவர்களுக்கோ மருத்துவ உதவி தேவைப்படலாம். எப்பொழுதும்போல் இல்லாமல் இப்போது நீங்கள் உங்கள் தொழிலில் கடினமாக உழைக்க வேண்டியிருக்கும்.

நல்ல நாட்கள்: 8, 10
எச்சரிக்கை நாட்கள்: 4, 6

மீனம் (பிப் 19- மார்ச்சு 20)

மேலதிகாரிகளின் ஆதரவு வழக்கத்திற்கும் சிறிது கூடுதலாகக் கிடைக்கும். கற்பனைவாதிகளுக்கு யோககாலம். குடும்பத்தினரும் சுற்றத்தினரும் உங்கள் முயற்சிகளுக்கு மிகவும் உறுதுணையாக இருப்பார்கள். புதியவர்களின் நட்பு கிட்டும். பொருளாதார முயற்சிகளைக் கொஞ்சம் ஒத்திப்போடுவது நல்லது. எதிர்பாராத சில அதிர்ஷ்டங்களுக்கு வாய்ப்புண்டு.

நல்ல நாட்கள்: 8, 10
எச்சரிக்கை நாட்கள்: 27, 29

மேஷம் (மார்ச்சு 21 - ஏப். 20)

முதலாளியாக இருந்தாலும் சரி, தொழிலாளியாக இருந்தாலும் சரி செய்தொழிலில் மேன்மை கிட்டும். மற்றவர்களின் வாக்குறுதிகளை நம்பிவிடாதீர்கள். உடல் நலம் பாதிக்கலாம். கவனம் தேவை. குடும்பத்தில் சுமுகம் நிலவாது. சேமிப்பைப் பெருக்க நினைக்கிறீர்களா? இந்த நாட்களைப் பொறுத்த வரைக்கும் ஓட்டைப் பானையில் நீர் ஊற்றிய கதைதான்!

நல்ல நாட்கள்: 1, 8
எச்சரிக்கை நாட்கள்: 29, 30

ரிஷபம் (ஏப். 21 - மே 20)

பணம் சம்பந்தப்பட்ட முயற்சிகள் பலனளிக்கும். நம்பிக்கைக்குரியவர்கள் என நீங்கள் நம்பிக் கொண்டிருப்பவர்கள் காலை வாரி விட்டாலும் விடலாம். குடும்பத்தில் உள்ளவர்களுக்குச் சுகவீனம் ஏற்படக் கூடும். நண்பர்களோடு கவனமாகப் பழகுங்கள். நட்பு முறியும் சாத்தியம் உண்டு. சக ஊழியர்களின் ஒத்துழைப்பு குறையும் என்பதால் உங்களுக்கு வேலைப்பளு அதிகரிக்கும்.

நல்ல நாட்கள்: 1, 9
எச்சரிக்கை நாட்கள்: 30, 6

மிதுனம் (மே 21-ஜூன் 20)

வீட்டைப் பழுது பார்ப்பதிலும் அழகு படுத்துவதிலும் உங்களுக்கு அதிக ஆர்வம் உண்டாகும் என்றாலும் புதிய கடன்கள் ஏற்பட வழியில்லை. உறவினர்கள் உங்களுக்குச் சாதகமாகச் செயல்படுவார்கள். வழக்கு விவகாரங்களில் வெற்றி கிட்டாது. வாகனப் போக்குவரத்துகளைத் தவிர்த்தால் நல்லது. அனாவசியச் செலவுகளைத் தவிர்க்காவிட்டால் அடுத்த மாதம் கடன் வாங்க வேண்டியிருக்கும்.

நல்ல நாட்கள்: 3, 7
எச்சரிக்கை நாட்கள்: 29, 4

கடகம் (ஜூன் 21-ஜூலை 20)

அதிகமான வாகனப் போக்குவரத்துகள் ஏற்படும். அவையாவும் பயன் தரக்கூடியவையே. எறும்பு மாதிரி உங்களைப் போன்றவர்கள் அனைவரும் சுறுசுறுப்பாகச் செயல்பட வேண்டியிருக்கும். பொருளாதாரம் சம்பந்தப்பட்ட வகையில் பெரியோர்களின் அரிய ஆலோசனைகள் கிட்டும். மேலதிகாரிகள் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற மாட்டார்கள் என்பதால் அதனையே நம்பிக் கொண்டிராதீர்கள். தன் கையே தனக்கு உதவி என்பதை மறக்க வேண்டாம்.

நல்ல நாட்கள்: 29, 7
எச்சரிக்கை நாட்கள்: 20, 3

சிம்மம் (ஜூலை 21 - ஆக 21)

எந்த எந்த வழிகளிலெல்லாம் வருமானத்தைப் பெருக்க முடியுமோ அந்த அந்த வழிகளிலெல்லாம் புகுந்து விளையாடுவீர்கள். அதில் நல்ல வெற்றி கிட்டுவதும் நிச்சயம் தான்! என்றாலும் ஒன்று, ஏற்கனவே முயன்று தோல்வி கண்ட விஷயங்களில் மீண்டும் ஈடுபடவேண்டாம். எதிர்பாராமல் சில செலவுகள் உண்டாகும். வாகனப் போக்குவரத்து ஏற்றதல்ல.

நல்ல நாட்கள்: 28, 3, 8
எச்சரிக்கை நாட்கள்: 30, 31

கன்னி (ஆக 22-செப். 22)

வெளியார் அனைவரும் உங்களுக்கு ஆதரவாக இருப்பார்கள். ஆனால் வீட்டில் நீங்கள் கீரிதான், மற்றவர்கள் பாம்புதான்! வீடு, நிலம் போன்ற சொத்துகளை மற்றவர்களுக்கு விற்கவோ பெயர் மாற்றம் செய்யவோ நினைத்திருந்தால் அதை ஒத்திவையுங்கள். பண விஷயங்களில் நண்பர்களின் தலையீட்டைத் தவிருங்கள்.

நல்ல நாட்கள்: 29, 30
எச்சரிக்கை நாட்கள்: 28, 6

துலாம் (செப் 23-அக். 22)

பூனைக்கு யார் மணி கட்டுவது என்பார்களே, அதைப்போல கணவன் மனைவியருக்கிடையே ஏற்படும் விவகாரத்தில் யார் முதலில் விட்டுக் கொடுப்பது என்னும் நிலை ஏற்படலாம். புதிய முயற்சிகளில் ஈடுபட அத்துணை விருப்பம் உண்டாகாது. சிக்கலான விஷயங்கள் என நீங்கள் நினைத்துக் கொண்டிருந்தவை சாதாரண விஷயங்களாக மாறும். பெரியோர்களின் ஆதரவு குறைந்து காணப்பட்டாலும் நண்பர்களின் ஒத்துழைப்பு அதிகம் உண்டு.

நல்ல நாட்கள்: 1, 8
எச்சரிக்கை நாட்கள்: 30, 4

விருச்சிகம் (அக் 23- நவ. 22)

அறிவை விருத்தி செய்து கொள்வதில் நீங்கள் செய்யும் முயற்சிகளுக்கு நல்ல பலன் உண்டு. செய்தொழிலில் மேன்மை கிடைக்கும். பணவிஷயத்தில் நண்பர்களின் ஆலோசனைகளைப் புறக்கணிக்காதீர்கள். வெளியூர்ப் பயணங்களை மேற்கொள்ள வேண்டியிருந்தால் நிதானித்து மேற்கொள்ளுங்கள். எதற்கு அவசரம்?

நல்ல நாட்கள்: 8, 10
எச்சரிக்கை நாட்கள்: 3, 5

தனுசு (நவ. 23 - டிச. 20)

வியாபாரிகளுக்கு நல்ல நேரம். ஒன்றுக்குப் பத்தாக லாபம் கிடைக்கலாம் என்றாலும் முதலீடுகளில் மாற்றங்களைச் செய்யக்கூடாது. 'எதற்கெடுத்தாலும் இது நடக்குமா?' என்று கூறும் தன்னம்பிக்கை அற்றவர்களால் நீங்கள் பாதிக்கலாம். அப்படிப்பட்டவர்களை ஒதுக்குங்கள். முடியாவிட்டால் அவர்களிடமிருந்து ஒதுங்குங்கள்.

நல்ல நாட்கள்: 8, 10
எச்சரிக்கை நாட்கள்: 26, 6

மகரம் (டிச 21- ஜன. 19)

கூட்டாக எதையும் செய்ய முயன்றால் உங்களுக்கு அதிக பலன் உண்டு. ஆனாலும் உங்கள் கருத்துக்களை அதிகம் வற்புறுத்திக் கூட்டு முயற்சிகளைக் கெடுத்துக்கொள்ளாதீர்கள். மின்சாரம், இயந்திரம் போன்றவற்றில் வேலை செய்பவர்கள் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். வீட்டுச் செலவுகள் அதிகரிக்க வாய்ப்புண்டு. ஆகவே செலவு செய்வதில் கவனம் தேவை.

நல்ல நாட்கள். 28, 6
எச்சரிக்கை நாட்கள்: 30, 9

–தஞ்சை நகுலன்

பத்துப் பேர்

(நம் நாடு சுதந்திரமடைந்து 20 ஆண்டுகள் நிறைவு பெறுகின்றன. இந்த இனிய வேளையிலே 1957-ஆம் ஆண்டை நாம் மறந்துவிட முடியுமா? நம் மலேசியாவை நாள்தோறும் தங்கள் உழைப்பின் மூலம் புதுமுறையில் வளப்படுத்தி வரும் உழைப்பாளர்களில் சிலரை அண்மையில் சந்தித்தேன். அவர்களும் பூரிப்போடு புதிய சமுதாயத்திற்குத் தங்கள் கருத்துக்களை வழங்கினர். அந்தக் கருத்து மலர்களை ஒன்றாகத் தொகுத்துக் கீழே தந்துள்ளேன்.)

"இப்போது நம் இளம் பெண்கள் நிறையப் பேர் தோட்டப் புறங்களிலிருந்து வெளிவந்து நகர்ப் புறங்களில் வேலை பார்க்கிறார்கள். 1957ல் இப்படி இல்லை. இதற்குப் பல காரணங்கள் இருக்கலாம்! அன்று, வயது வந்த பெண்களைத் தனியே பட்டணங்களுக்கு வேலைக்கு அனுப்ப நம் தாய்மார்கள் விரும்பவில்லை. அதோடு இப்போது இருக்கிற மாதிரி கல்வியறிவும் துணிச்சலும் நம் பெண்களுக்கு அப்போது இருந்திருக்கும் என்று சொல்ல முடியாது. அதனால் இந்த இருபது வருஷ இடைவெளியிலே நம் பெண்கள் பலர் நல்ல முன்னேற்றம் அடைந்திருக்கிறார்கள் என்று தான் நினைக்கிறேன். ஆவதும்



பெண்ணாலே, அழிவதும் பெண்ணாலே என்பதுபோலக் குடும்பம் உயர்வதும் தாழ்வதும் பெண்கள் கையில்தான் இருக்கிறது. தோட்டப்புறப்பெண்களாக இருந்தாலும் சரி, நகரத்திலே வேலை பார்க்கிற பெண்களாக இருந்தாலும் சரி, நம் குடும்பம் சீராக வளருவதற்குச் சிக்கனத்தைக் கடைப்பிடிக்க மறக்கவே கூடாது."

-பெண்மணிகளுக்கு இப்படி மணியான கருத்துக்களை எடுத்துக் கூறியவர் பால் வெட்டுத் தொழிலாளியான திருமதி மீனாட்சி, வீ னார்டோ எஸ்டேட், தஞ்சோங் மாலிம்.

"நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ச்சியின் பாதையில் சென்று கொண்டிருக்கும் நம் மலேசிய நாடு, மெர்தேகா கண்டு 20ஆண்டுகள் ஆகிவிட்டன. அன்றிலிருந்து இன்றுவரைஇதே தொழிலில் தான் நானும் இருந்து வருகிறேன். இந்த நீண்ட இடைவெளியில் நாள் பத்திரிகை, மாதப் பத்திரிகை, இரண்டு வாரத்திற்கொருமுறை வெளிவரும் பத்திரிகை எல்லாவற்றையுமே கேட்டு வாங்கிப் படிக்கும் ஆர்வமும் துடிப்பும், முன்பு இருந்ததைவிட இப்பொழுது அதிகரித்திருப்பதைக் கண்கூடாகப் பார்க்கமுடிகிறது. அதோடு முன்



பெல்லாம் பத்திரிகை படிப்பதோடு இருந்துவிடும் நம்மவர்கள், இப்போது சாதாரண விஷயங்களிலிருந்து அரசியல்வரை படித்து விட்டுக் கடையிலேயே சூடாக விவாதிக்கத் துணிந்து விடுவதையும் என் அனுபவத்தில் கண்டு வருகிறேன்" என்று கருத்துரைத்தார் பத்திரிகை விற்பனையாளர் வீ. பெருமாள், தெலுக்கான்சன்.

●●●●●●●●●●●●

"நம் நாட்டிற்கு மெர்தேகா கிடைத்த வேளையில் நான் பினாங்கில் வேலைபார்த்து வந்தேன். அப்போது



அங்காடி வியாபாரங்களெல்லாம் மந்தமாகவே இருந்தன. 20 ஆண்டுகளுக்குப் பிறகுதான் அங்காடி வியாபாரங்களுக்குத் தனி மவுசு ஏற்பட்டது. இப்போது இந்த வியாபாரம் நாடெங்கும் பரவியிருக்கிறது.

மாலையில் ஆரம்பித்து பின்னிரவு 1 மணிக்குத்தான் என் வியாபாரம் முடிவடைகிறது. உழைப்புக் கடுமையாக இருந்தாலும் இத்தொழிலின் மூலம் கிடைக்கும் வரும்படி மனத்திருப்தியை தரும்படி இருக்கிறது" என்று சிறு தொழிலில் கிடைத்த வெற்றி குறித்து மனம் திறந்து கருத்துரைத்தார் செ. ஜலீல் மரைக்கான், மேடான் போனஸ், கோலாலம்பூர்.

●●●●●●●●●●●●

"1957இல் எங்களைப் போன்ற தோட்டத் தொழிலாளர்களுக்குக் குறிப்பாக வெளிக்காட்டு வேலைக்குச் செல்லும் ஆண்-பெண்களுக்குச் சமத்துவச் சம்பளம் இருந்தது கிடையாதுங்க. ஆனால் இப்போது சம சம்பளம் கிடைக்குதுங்க. அதோட தோட்டத்துத் தொழிலாளர்களுக்குச் சம்பளத்தோடு ரெண்டு வாரம் லீவும் கிடைக்குது. இந்தச் சலுகையெல்லாம் மெர்தேகா கிடைத்த காலத்திலே இல்லைங்க.



அப்போ பிள்ளைங்களைப் படிக்க வைக்கிறது பெரிய பாடு! என்னை பள்ளிக்கட்டணம் கட்டவேண்டியிருந்தது. புத்தகம் வாங்கிக் கொடுக்க வேண்டியிருந்தது! இப்போ நம்ம அரசாங்கமே எல்லாத்தையும் "பிரீ"யா கொடுக்கிறாங்க...! அப்படியிருந்தும் பாருங்க, நம்ம ஜனங்கள்ளே சிலரு குடிச்சு வீணே பணத்தை செலவழிச்சிடுறாங்க! நம்ம பிள்ளைக்குப் படிப்புக் கிடைக்கிறதைப் பாழடிச்சிடுறாங்க! குடிக்கிற காசை சேமிச்சு குடும்பத்துக்கும் பிள்ளைகளோட படிப்புக்கும் செலவழிச்சா எவ்வளவோ நல்லா இருக்குங்க...!" — உண்மை நிலையை இப்படி மனம் திறந்து எடுத்துரைத்தனர் பேரா, சுங்கை பீக்கம் தோட்டத்தைச் சேர்ந்த மண்டோர் எம். ஏசைபாவும் அவர்தம் துணைவியாரும்.

●●●●●●●

"நம் நாட்டில் இருபது வருஷத்துக்கு முன்னால் இவ்வளவு பஸ்கள் நாடெங்கும் இருந்ததில்லை. அதோட இப்பொழுது இருப்பதுபோல கூட்டமும் நெரிசலும் இருந்தது கிடையாது. இதற்குக் காரணம் நம் நாட்டில் மக்கள் தொகை கூடிவிட்டதே

சொல்கிறார்கள்

ஆகும். 1957இல் மைலுக்கு 4 காசு விதம் டிக்கெட் கட்டணம் இருந்தது. இப்போது அது 5 காசாக உயர்ந்துவிட்டது. இதற்குக் காரணம் எண்ணெய் விலை ஏறிப் போனதுதான். முன்பைப் போல்



இல்லாமல் இப்பொழுது தொழிற் சங்கம் நம் நாட்டில் இருப்பதால் எங்களைப் போன்ற பஸ் ஊழியர்களுக்கு அது பாதுகாப்பாகவே இருந்து கை கொடுக்கிறது". தெலுக் கான்சன் லோவர் பேராக் மோட்டார் சர்வீஸ் பஸ் டிரைவர் கே. ஜெயராமனின் கண்ணோட்டம் இது.

●●●●●●●●●●

"1957இல் இல்லாத அளவுநம் தமிழ்ப்பெண்கள் இப்பொழுது மலேசியாவில் பொதுச்சேவை, அரசியல் போன்ற துறைகளில் அதிக ஈடுபாடு காட்டி வருகிறார்கள். இது வரவேற்க வேண்டிய ஒன்றாகும்.



அடுப்படியிலேயே பெரும்பகுதி நேரத்தைச் செலவிட்டுவந்த நம் பெண்கள், இப்போது மிகவும் மாறியிருக்கிறார்கள். முன்பைவிட இப்பொழுது நம் இந்தியர்கள் ஊர்ப் பயணம் மேற்கொள்ளும்போது கப்பலில் செல்வதைவிட விமானத்தில் பறந்து செல்வதையே பெரிதும் விரும்பும் நிலை ஏற்பட்டிருப்பதையும் என் அனுபவத்தில் நிறையக் காணுகிறேன்" என்று ஐ. சி. சி. நிறுவன விற்பனை வளர்ச்சி அதிகாரி குமாரி ஏஜல் கருத்துக் கூறினார்.

●●●●●●●●●●

"1957ல் மெர்தேகா கிடைத்த வேளையின்போது பெரும்பாலான நம் இந்திய இளைஞர்கள் தோட்டப் புறங்களையே நம்பி வாழ்க்கை நடத்தி வந்தார்கள். இதற்குப் பெற்றோர்களின் கண்டிப்பும் ஒரு காரணமாக இருந்தது. இப்பொழுது



நிலைமை மாறிப் பெரும்பாலான நம் தோட்டப்புற இளைஞர்கள் நகர்ப்புறங்களுக்குத் துணிந்து வந்து வேலை செய்து தங்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக்கொண்டு வருகிறார்கள். முன்பைவிட இப்போது நம் இளைஞர்களிடையே படித்தறிந்து கொள்ளும் துடிப்பும் வளர்ந்திருக்கிறது..." என்று கூறினார் இளைஞர் ஆர். ராமசாமி (சங்கர்), நைகல் கார்டன் தோட்டம், பத்தாங் பெர்ஜுந்தை.

●●●●●●●●●●

"1957இல் இருந்ததற்கும் இப்போது உள்ள நிலைக்கும் சேலை விற்பனைபற்றி உங்கள் எண்ணங்களைச் சொல்லுங்கள்" என்று தபாள் சந்தி ஜவுளிக்கடையில் பணிபாற்றும்



திருமதி ரதிமலரையும், குமாரி ஹஸ்ராணியும் வினவியபோது அவர்கள் இப்படிச் சொன்னார்கள்: "காலத்திற்குக் காலம் சேலைகளின் மாதிரிகள் மாறி மாறி வருவதால் சேலை மோகம் குறைய வழி கிடையாது. நம் பெண்கள் முன்பு லைட் கலர் துணிகளை விரும்பினார்கள். இப்பொழுது திக்கான கலர்களையே விரும்புகிறார்கள். 1957இல் பாத்தேக் புடவை என்று ஒன்று இருந்



தது கிடையாது. இப்போது அதனைப் பலரும் விரும்பி அணிகிறார்கள். மேலும் இப்போது மலாய்க்காரப் பெண்கள் விலையுயர்ந்த காஷ்மீர், மணிப்புரி போன்ற புடவைகளை வாங்கி, பாஜு-கூரோங், காப்டன்ஸ் போன்ற வகைகளில் தைத்து அதனை விரும்பி அணிந்து கொள்வதையும் நாங்கள் பார்க்கிறோம்."

பேட்டி:
ராமதாஸ் மனோகரன்

மிதக்கும் நகரம்

ஜப்பானிலுள்ள தோக்கியோ விரிகுடா தெப்பத்தில் கட்டிடங்கள் 1982ஆம் ஆண்டுக்குள் கட்டி முடிக்கப்படும் என்று நம்பப்படுகிறது. இதில் வீடுகளும், கடைகளும் இருக்கும். சுமார் 1,600 மில்லியன் வெள்ளி செலவில் இது கட்டப்படவிருக்கிறது. இக்கட்டிடத்திற்குச் செல்ல சிறு பாலம் ஒன்று நிலத்தில் அமைக்கப்படும் என்றும் பொருளியல் நிபுணர்கள் கூறுகின்றனர். நிலப் பற்றாக்குறையினால் இப்படித் தெப்பத்தில் கட்டப்படுகிறது.

சிலந்திப்பூச்சி முப்பது மாதங்கள் உணவு உண்ணாமல் இருக்கும். உடலில் தேவையான உணவுகளை சேர்த்து வைத்திருப்பதே இதற்குக் காரணம்.

–செல்வராஜு குமரன்



15. 'அந்தக் கதா நாயகன் யாரோ?'

லல்லியின் நிலை "தர்ம சங்கடம்" என்று சொல்வதுபோல் அமைந்துவிட்டது. கோபி வனிதாவை விரும்புகிறன் என்று தெரிந்தபோது மகிழ்ச்சியும் கவலையும் ஒரே சமயத்தில் அவளை ஆட்கொண்டன.

கோபியைப் போன்ற நற்குணமும் இனிய சுபாவமும் கொண்ட இளைஞனே வனிதாவைப் போன்ற கள்ளங் கபடமற்ற குழந்தை மனங் கொண்ட பெண்ணுக்கு ஏற்றவன் என்று அவள் தனக்குள் உவகை கொண்டாள்.

ஆனால் வனிதாவின் தந்தையை நினைத்தபோது அவளுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சி இருந்த இடம் தெரியாமல் ஓடி மறைந்து விட்டது.

ஆடம்பரமான வசதியுள்ள குடும்பத்தின் ஒரே செல்லப்பெண் அவள்! பெரிய பதவியும் கைநிறைய சம்பாத்தியமும் உள்ள தங்கள் குடும்பத்திற்குத் தகுதியான இடத்தைத் தேர்ந்தெடுக்கவே அவர் விரும்புவார்.

அதோடு முன்கோபக்காரர் என்று வனிதாவே அடிக்கடி கூறுவாள்! இதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

கோபி மிகவும் சாதாரணக் குடும்பத்தைச சார்ந்தவன் என்பதை நவீன் அன்றே குத்திக் காட்டிப் பேசினான்.

அந்தஸ்து அவர்களின் அன்புக்கு ஒரு தடைக்கல்லாக அமைந்துவிட்டால் அது எவ்வளவு பெரிய துயரத்தை ஏற்படுத்தி விடுமோ?

இதுவரை லல்லி எதையும் ஆழமாகவோ அக்கறையுடனே சிந்தித்து மனத்தைக் குழப்பிக்கொண்டவள் அல்ல! ஆனால் வனிதாவின் விஷயத்தில் மட்டும் ஏனோ ஒரு தாயைப்போலப் பாசம செலுத்தினாள். தமக்கையைப்போல் பரிவு கொண்டாள்; உண்மையான ஒரு தோழிக்குரிய அக்கறையுடன் நடந்து கொண்டாள்.

நீண்ட நேரம் சிந்தித்த பிறகு அவளுக்குச் சற்றே தெளிவு பிறந்

கோபியிடம் ஈடுபாடு கொண்டிருக்கிறள் என்பதை எலிசபெத்தின் பிறந்தநாள் விழாவின்போது அறிந்து கொள்ளமுடிந்தது!

ஆனால் அது அவளது தீர்க்கமான முடிவா அல்லது இளமை உணர்வுகளின் வெறும் கவர்ச்சியின் உந்தலா என்பதை முதலில் புரிந்துகொள்ள வேண்டுமே!

காதலும் களியாட்டமும் இப்போது இளைய சமுதாயத்தின் பொழுதுபோக்கான விளையாட்டாக அல்லவா மாறிவிட்டன!

எதற்கும் வனிதாவைக் கொஞ்சம் சிந்தித்துப் பார்க்கச் செய்ய வேண்டும் என்ற இறுதி முடிவுக்கு வந்தபோது அவளுக்கு இன்னொரு விஷயமும் நினைவுக்கு வந்தது.

தனியாக இருக்கும் வனிதாவுக்குக் கோபியின் நட்பு ஒரு பெரிய பாதுகாப்பாகவும் இருக்கும்! நவீனைப் போன்றவர்களிடமிருந்து அவளைப் பாதுகாத்துக்கொள்ள கோபியின் துணை இப்போதைக்கு அவசியந்தான் என்ற நினைவு தோன்றியபோது அவளுக்கு மனத்திலிருந்த பெரிய சுமை குறைந்தது போலிருந்தது!

நவீனைப் பற்றிப் பேசும்போது வனிதாவின் நிலைமையையும் கொஞ்சம் நினைவூட்டியிருந்தாள்.

அதைப் பற்றியும் கோபி நிச்சயம் சிறிதளவாவது சிந்தித்துப் பார்க்கத்தானே செய்வான்! சிந்தித்துப் பார்த்தபிறகு எடுக்கப்போகும் முடிவு உறுதியான முடிவாக இருக்கும் அல்லவா?

அதன் பிறகு அவர்களே ஒரு முடிவுக்கு வரட்டுமே என்ற அளவில் லல்லி தனது சிந்தனைக்கு ஒரு முடிவு கட்டிவிட்டுப் புறப்பட்டாள்.

வனிதாவைப் பார்த்துவிட்டு வரவேண்டும் என்றுதான் நினைத்தாள். ஆனால் அதற்குள் சரீனு வந்து சேர்ந்துவிட்டாள்.

டெய்லர் கடைவரையில் போக வேண்டும் என்று பிடித்துக் கொண்டாள். சரி செய்வதற்கு அவசர வேலை எதுவுமில்லை. ஓர் அரை மணி நேரத்தில் வந்துவிடலாம் என்று கிளம்பிய லல்லிக்கு அது சாத்தியப்படாது என்பது பாதிவழி போன பிறகே புரிந்தது.

சரீனு இலேசில் வெளியே வரவில்லை!

அடுத்த மெச்சிக்கு என்ன மாதிரிப் புது டிசைன் துணி வந்திருக்கிறது என்பதில் ஒரு மணி நேரத்தைச் செலவழித்த பிறகு ஒரு வழியாகக் கடையைவிட்டு வெளியே வரச் சம்மதித்தாள்.

டெய்லர் கடையில் டிசைன் கண்டுபிடிப்பதில் மேலும் ஒரு அரை மணியைக் கடத்திய பிறகு லல்லியின் அவசரத்திற்குப் பணிந்தாள்.

"ஏய் சரீனு! நாம் வீட்டை விட்டுப் புறப்பட்டு மூன்று மணி நேரமாகிவிட்டது! ஒரு சட்டைத் துணியைக் கொடுத்து விட்டு வர இவ்வளவு நேரத்தைச் செலவழித்தால் மற்ற காரியங்கள் என்ன ஆவது என்று நினைத்தாயா?

சரீனு முத்துப் புன்னகையொன்று புரிந்துவிட்டு இப்படிக் கூறினாள்.

"இப்போ நமக்கு இதைவிடப் பெரிய காரியம் என்னடி இருக்கு?"

"உனக்கு என்று சொல்! என்னை ஏன் உன்னோடு சேர்த்துக் கூறுகிறாய்?"

"அடேயப்பா! நீ பெரிய இவள்! உன்னை மட்டும் தனியாக நினைத்துக் கொள்வாய்! இந்த வயசில் உல்லாசமாகச் சுற்றாமல் கல்யாணம் ஆன பிறகா முடியப்போகிற -?

லல்லிக்கு சிரிப்பை அடக்க முடியவில்லை!

"அப்படியானால் மாப்பிள்ளை ரெடி என்று சொல்! யாருடி அந்தப் பரிதாபத்திற்குரிய மனிதன்" - சரீனு அவளை முறைத்துப் பார்த்தாள்!

"ஏண்டி! நான் அவ்வளவு பொல்லாதவளா?"

"நீ நல்லவள்தான்! இப்படி ஒரு சட்டைக்கு ஒருநாள் முழுதும் கடைத்தெருவில் செலவழித்துக் கொண்டிருந்தாயானால் உன்னை மணந்துகொள்பவன் ஒன்று கோலைக்காரனாக வேண்டும் அல்லது பைத்தியக்காரனாக வேண்டும்!" லல்லி கலகலவென்று சிரித்தாள். சரீனுவுக்கும் சிரிப்பு வந்துவிட்டது.

"போடி! உனக்கு எப்பவம் கேலிதான்!"

"அதுசரி! இந்த நவம்பரில்

றயா? சொல்லிவிடு! நான் போக வேண்டும்!

"என்னடி இது. ஒரு பேச்சுக்கு ஏதாவது சொன்னால் அதையே பிடித்துக்கொள்கிறாயே"

"பின்னே பரீட்சைக்குப் படிக்கும் லட்சணமா இது! கொஞ்சங்கூட அதைப்பற்றி நீ கவலைப்படுவதாகவே தெரியவில்லையே?"

"பரீட்சையைப் பற்றி எனக்குக் கவலையில்லை!"

"ரிசல்ட்டைப்பற்றியும் உனக்குக் கவலை இல்லையே! இப்போ உன் கவலை எல்லாம் கல்யாணத்தைப் பற்றித்தானே"

"என்னைப்பற்றிச் சொல்கிறாயே! நீ என்ன செய்யப்போகிறாய் என்பதைப்பற்றி முடிவுக்கு வந்துவிட்டாயா?"

"என்னடி இது புதுக்கேள்வி?"

"பிரச்னையும் புதியதாகத்தானே முளைத்திருக்கிறது. அதனால்தான்!" லல்லி நின்று அவள் முகத்தைப் பார்த்தாள்.

"நீ கோபிநாத்தை விரும்புகிறாய் என்றுதான் நாங்கள் நினைத்தோம்! ஆனால் உன் அத்தானையல்லவா இப்போது"

லல்லி இடைமறித்தாள்.

"யாருடி உனக்கு இந்தக கதையைச் சொன்னது?"

"இந்தக் காதல் நாடகத்தை சுஜாதாதான் நேராகவே பார்த்துவிட்டு வந்திருக்கிறாளே! உன் அத்தான் பார்க்க இந்திப்பட ஹீரோ மாதிரி ஜோராக இருக்கிறானாமே"

"ஆள்மட்டுமா? பெயர் கூடத்தான் ஜோராக இருக்கும்! நவீன்!" லல்லி விழுந்து விழுந்து சிரித்தாள்.

16. 'அருகில் வந்தாள்! உருகி நின்றாள்!'

மணி நாலரையாகிவிட்டது. என்றாலும் வெயில் இன்னும் தணியவில்லை. வனிதாவுக்குத் தனிமையில் நடப்பது டல்லாக இருந்தது.

லல்லியும் கூட வந்திருந்தால் நன்றாக இருக்குமே என்று மனம் எண்ணியது. ஆனால் அவள் ஓய்வாக இருந்திருந்தால் நிச்சயம் தன்னைத் தேடி வந்திருப்பாள். அரை மணி நேரம் காத்திருந்துவிட்டே கிளம்பினாள்.

லல்லிக்கு எப்போதும் ஏதாவது செய்யும்படியான காரியம் இருந்துகொண்டேதானிருக்கும்.

ஒன்று அவளுக்கான அலுவல்! மற்றது தோழிகளுக்காக! சப்பாத்து வாங்கவேண்டுமா? லல்லி வரவேண்டும்! சட்டையோ துணியோ



வாங்கவேண்டுமா? அதற்கு லல்லி வந்தால்தான் செலக்ட் பண்ணவோ பேரம் பேசவோ வசதியாக இருக்கும்.

சில்லறைப் பொருட்கள் ஏதாவது தேவையா? லல்லிக்குத்தான் எங்கெந்த கடைகளில் கிடைக்கும்! யார் யார் நல்ல பொருளைக் கொடுப்பார்கள்! எங்கெங்கே ஏமாற்றுவார்கள் என்பவை எல்லாம் அத்துப்படி!

வெயிலில் சுற்றி அலைந்துவிட்டுப் பசியும் களைப்புமாகத் தள்ளாடிக்கொண்டு வராமல் கூச்சமின்றி ஒரு ரெஸ்டாரெண்டுக்குள் நுழைந்து வேண்டியதை ஆர்டர் செய்ய லல்லி துணைக்கு வரவேண்டும்!

நேரம் போவதே தெரியாமல் கலகலப்பாகப் பேசிக்கொண்டு உல்லாசமாகச் செல்லவேண்டுமானால் லல்லியோடு செல்லவேண்டும்!

ஆகக்கூடி லல்லியை அறிந்துள்ளவர்களுக்கு வெளியில் எந்தக் காரியம் ஆகவேண்டுமானாலும் லல்லி வந்தால்தான் சரிப்படும் என்பார்கள். லல்லியும் முகத்தைச் சுளிக்காமல் கூப்பிட்டவுடன் வந்து உதவுவாள்.

அப்படிப்பட்ட லல்லி எந்த நேரமும் தன்னுடனேயே இருக்க வேண்டும் என்று விரும்புவது ஒரு வகையில் சுயநலந்தானே?

வனிதா லல்லியை நினைத்துக் கொண்டே மெதுவாக நடந்து கொண்டிருந்தாள்.

தூரத்தில் மோட்டார் சைக்கிளின் கிடுகிடுவென்ற சத்தம்! ஏனோ அந்த ஒலியே வனிதாவின் மனத்தில் இலேசாக நடுக்கத்தை ஏற்படுத்த ஆரம்பித்தது!

அது அந்த முரடன் நவீனாக இருந்தால்? அவள் சந்தேகத்தோடு தான் மெல்லத் திரும்பிப் பார்த்தாள்!

அவன் அவனேதான்! அவள் உடலில் இப்போது அச்ச உணர்வு பெருகிப் பரவியது!

தனிமையில் செல்கிறோமே என்ற பயம்! அந்த முரடன் வலிய வந்து பேசினால் என்ன செய்வது என்ற திகில் வேறு!

இவன் தற்செயலாகத்தான் வந்தானோ? அல்லது தன்னைப் பார்த்து விட்டுப் பின்தொடர்ந்து வருகிறானோ?

வனிதாவின் கால்கள் பின்னிக் கொள்வதுபோல நடை தளர்ந்தது. பட்டப்பகலில் நடுரோட்டில் அவன் எதுவும் செய்துவிடப் போவதில்லை என்றாலும் தன்னிடம் வலிய வந்து பேசி வம்புக்கு நின்றால்? வேறு யாராவது துணைக்கு வருகிறார்களா என்று சுற்றிலும் பார்வையை ஓட்டினாள். தூரத்தில் இரண்டொருவர் நடந்து கொண்டிருந்தனர். அவ்வப்போது வேகமாக ஓடி மறைந்துவிடும் கார்கள்; தலை தெறிக்கும் வேகத்தில் காற்றாகப் பறக்கும் ஸ்கூட்டர்!

இவர்களில் யார் தனக்கு உதவப் போகிறார்கள்? தூரத்தில் ஒரு பஸ் ஸ்டாண்டில் ஒரு சீனக் கிழவி உட்கார்ந்திருந்தாள். அது எங்கே போகும் பஸ் என்று கூடத் தெரியாது! ஏதாவது ஒரு பஸ் வரும்! அதில் ஏறிக் கொண்டுவிட்டால் இந்த முரடனின் பார்வையிலிருந்து தப்பித்துக் கொள்ளலாம்! பிறகு திரும்பி இதே இடத்திற்கே வந்து விட்டால்!

வனிதா தனக்குள் தீர்மானித்தபடி வேகமாக நடந்து சென்றாள். படுவேகமாக வந்த ஒரு மினி பஸ் அவளை இடித்துக் கொண்டு நின்றது. பட்டென்று உள்ளே ஏறி உட்கார்ந்துவிட்டாள்.

நாற்பது காசு!

அவளை ஒரு முரட்டுப் பயலிடமிருந்து மீட்டுவிட்ட பெருமையோடு மினி பஸ் காற்றாகப் பறந்தது!

அது எங்கே போகிறதோ? எங்கெந்த வழியெல்லாம் செல்லப் போகிறதோ?

ஓட்டுபவனுக்கும் இறைவனுக்கும் மட்டுமே தெரியும் அது! வனிதா நிம்மதியாகப் பெருமூச்சு விட்டாள்!

சற்றுத் தொலைவில் ஜயா சூப்பர் மார்க்கெட் தெரிந்தது. இப்போது அவளுக்கு இடம் புரிந்து விட்டது! லல்லியோடு இரண்டொரு முறை அந்தப் பக்கம் வந்திருக்கிறாள். அங்கிருந்து பஸ் ஏறினால் பெட்டாலிங் ஜெயா நியூ டவுனுக்குப் போய்ச் சேர முடியும்!

நிம்மதியாகப் பெருமூச்சு விட்டுக்கொண்டே கீழே இறங்கினாள் வனிதா! தெரிந்த இடத்தில் வந்து இறங்கிவிட்டோம் என்ற மகிழ்ச்சியோடு பஸ் வருகிறதா என்று தூரத்தில் பார்வையை ஓட்டிக் கொண்டிருந்தாள்.

அருகில், மிக மிக அருகில் அந்தக் குரல் ஒலி! அவள் இதயமே நின்றுவிடும்போல் அதிர்ச்சி!

சற்றும் எதிர்நோக்காத இடத்தில் எதிர்பாராத வகையில், அவனைப் பார்த்ததும் ஏற்பட்ட வியப்பில் பேசக்கூட முடியவில்லை!

"என்ன வனிதா! ஏன் அப்படிப் பார்க்கிறாய்? எங்கிருந்து வருகிறாய்?"

"நீங்களா! உங்களை நான் எதிர் பார்க்கவே இல்லையே! இங்கே என்ன செய்கிறீர்கள் கோபி!" இன்ப அதிர்ச்சியிலிருந்து மெல்ல விடுபட்டவளாகப் பேசினாள் வனிதா.

"அதோ அந்தக் கடையில் நின்று கொண்டிருந்தேன்! நீ தனியாக வந்து இறங்கியதைப் பார்த்தது எனக்கு வியப்பாகக் கூட இருந்தது! உனக்குத் தெரிந்தவர்கள் யாராவது இங்கே இருக்கிறார்களா?"

"ம்...ஆமாம்! தெரிந்தவர்தான் மிகவும் வேண்டியவர்!"

"அடடே, அப்படியா? யாரது?"

"நீங்கள் இல்லையா?"

"பரவாயில்லையே! நீ கூட லல்லியோடு சேர்ந்து நன்றாகப் பேசக் கற்றுக்கொண்டாய் போலிருக்கிறதே?"

வனிதா இலேசாக உதட்டைக் கடித்துக்கொண்டு நாணத்தோடு புன்னகை செய்தாள்!

"நியூ டவுனுக்குத்தானே போக வேண்டும்! நான் கொண்டுபோய் விடட்டுமா?" அவன் ஆவலோடு கேட்டான்.

"ஸ்கூட்டரிலா? ஐயையோ, நான் மாட்டேன்... எனக்குப் பழக்கமில்லை!"

அவனும் சிரித்துக்கொண்டான். தூரத்தில் பஸ் மெதுவாக வந்து கொண்டிருந்தது.

"பஸ் வந்துவிட்டதே!" அவன் குரலில் ஏமாற்றம் தொனித்தது. பஸ்ஸைக் கடந்துவரும் மோட்டார் சைக்கிள் அவள் கண்ணில் பட்டது!

"கோபி! நான் ஸ்கூட்டரிலேயே வருகிறேன்! வாருங்கள்... சீக்கிரம்!" வனிதா பரபரப்போடு இப்படிக் கூறியதைக் கேட்டதும் வியப்போடு அவளை ஏறிட்டு நோக்கியவன் முகத்தில் மகிழ்ச்சி பரவியது.

ஸ்கூட்டரில் அவள் ஏறி உட்கார்ந்தபோது விர்ரென்று அவர்களைக் கடந்து சென்றது அந்த மோட்டார் சைக்கிள்! நவீனின் வெறித்த பார்வையைக் கண்டு திகிலடைந்த வனிதா கோபியின் தோளை இறுகப் பற்றிக்கொண்டாள். கோபிக்கு உடலும் உள்ளமும் சிலிர்த்திட இன்பச் சிறகடித்துப் பறப்பது போல தன்னை மறந்து நின்றான்.

-வளரும்

மலேசிய, சிங்கப்பூர் ரசிக

இசை நாடகத்

30 நடிகர் - ந

தமிழகத்தில் தினந்தோறும் பல்லாயிரக்கணக்
கான ரசிகர்கள் பார்த்து மகிழும் தரமான
வெற்றி நாடகங்கள்.
விசேஷ காட்சி ஜோடனைகள்.
என்றென்றும் மறக்க முடியாத
மதுரமான இன்னிசைக் கீதங்கள்......



ஹரிச்சந்திரா மயான காண்டத்தில்
|உடையப்பா தேவரின் ஓர் தோற்றம்!

உண்மையே,
உன்னை நம்புவோமாக!
-ஹரிச்சந்திரன்

நாடகக்குழு
6000 நாட்களுக்குமேல் சிறப்பாக
மேடை ஏறிய

SEPT.

18 - ஹரிச்சந்திரா
19 - வள்ளி திருமணம்
20 - பவளக்கொடி
21-சத்தியவான்சாவித்திரி
22 - நந்தனர்

நாடகங்களின் கதைச் சுருக்கம்:

அரிச்சந்திரா

அரிச்சந்திரா சத்தியத்தின் பெருமையை உலகிற்கு உணர்த்திய ஒரு மகா புருஷனின் வாழ்க்கை சரித்திரம். அரச பதவியை இழந்த பொழுதும், நாட்டை இழந்த பொழுதும் மனைவியை இழந்த பொழுதும், மகனை இழந்த பொழுதும் அரச வம்சத்தில் பிறந்தும் சுடுகாடு காக்கும வெட்டியான் தொழில் செய்த பொழுதும் கூட சொந்த மகனின் பிணத்தை தகனம் செய்ய வந்த மனைவியை கண்ட பொழுதுங்கூட சத்தியத்தின் எல்லையில் நின்று வாழ்க்கையில் ஒருதரம் கூட பொய் பேச மறுத்த சத்தியத்தின் காவலனாக வாழ்ந்துவிட்ட ஒரு காவியமாகி விட்ட மகா புருஷனின் வாழ்க்கை சரித்திரம தான் இந்த நாடகம் அரிச்சந்திரா.

சம்பூர்ணவள்ளி திருமணம்

தமிழ்க் கடவுள் எனப் போற்றப்படும் ஸ்ரீ முருகப் பெருமான், திருவிளையாடற் புராணத்தில் ஸ்ரீ வள்ளியை மணந்துகொள்ளும் ஒரு தெய்வீக கதைதான் சம்பூர்ண வள்ளித் திருமணம். கந்தபுராணத்தின் ஒரு பகுதி!

பவளக்கொடி

இந்திய நாட்டின் இதிகாசங்கள் என்று புகழப்படும் இருபெரும் காவியங்களில் ஒன்றான மகாபாரதத்தின மாவீரனான அர்ஜுனனை, ஆண் இனத்தையே வெறுத்து ஒதுக்கிவிட்டு வாழ்ந்து வந்த ஒரு பெண்ணரசி பவளக்கொடி. பெண்களுக்கென ஒரு தனி உலகம் இருக்க முடியும் என்று கனவு கண்ட பவளக்கொடி. இறைவனின் சிருஷ்டிகளாகிய ஆணும் பெண்ணும் இருவருமே தனித்து வாழ முடியாது. இருசாராருமே ஒருவருக்கு மற்றவர் இல்லாமல் வாழ முடியாது என்பதை விளக்கும் ஒரு புராதன கதைதான் பவளக்கொடி நாடகம்.

களுக்கு ராஜலிங்கம் புரொடக்ஷன்ஸார் படைக்கவிருக்கும்

திலகம் உடையப்பா

டிகைகள் அடங்கிய இசை நாடகங்கள்

டிக்கட்டுகள்: **$10, $5**

செப்டம்பர்
8, 19, 20, 21, 22

கோலாலம்பூர்
சின் வூ
மண்டபத்தில்

தினசரி
இரவு 8 மணிக்கு
நடைபெறும்

டிக்கட்டுகள் கிடைக்குமிடங்கள்

- வெல்டு சூப்பர்மார்க்கெட், கோலாலம்பூர்
- ஜெயா சூப்பர்மார்க்கெட், பெட்டாலிங் ஜெயா
- பாலகிருஷ்ண பவான்
- தேவி ரெஸ்டாரண்ட்
- நியூ ஓரியண்டல் ரெஸ்டாரண்ட்
- நியூ மதராஸ் கபே

இன்றே உங்கள் டிக்கட்டுகளைப்
பெற்றுக் கொள்ளுங்கள்

"...உடையப்பா நடித்தார் என்று சொல்வதை விட அவருடைய அகண்ட மார்பு நடித்தது, திரண்ட புஜங்கள் நடித்தன, அவருடைய திட்சண்யமான பார்வை நடித்தது. அவருடைய வெண்கலக் குரல் நடித்தது என்றெல்லாம் சொல்வதுதான் நியாயம். இன்னமும் சொல்லப்போனால் வெட்டியானாகத் தோன்றிய அவர், தம் கையிலே வைத்திருந்த கழியைக் கூட நடிக்க வைத்தார் ஆஹா, இவ்வளவு அழகாக நடிக்கிறாரே, பாடுகிறாரே என்ற நினைப்பை விட ஒரு மனிதனால் எப்படி இப்படிப் பாடி நடிக்க முடிகிறது? என்ற பிரமிப்பே அதிகமாக இருக்கிறது..."

"உடையப்ப தேவரின் ஹரிச்சந்திர நாடகத்தில் உடையப்பா அவர்கள், ஹரிச்சந்திரனாக நடித்ததை "நடிப்பு" என்று வர்ணித்தால் அது அவருக்குச் செய்யும் அநீதியாகும். அவர் ஹரிச்சந்திரனாக மேடையில் தோன்றிச் செய்து காட்டுவது நடிப்பு அல்ல; சாதனை......"

துக்ளக் ஆசிரியர்
சோ

சத்தியவான் சாவித்திரி

தன்னை மணம் செய்து கொள்ளவிருக்கும் சத்தியவான் திருமணமான ஒரு வருஷத்தில் இறந்துவிடுவான் என்று ஒரு மகா முனிவரால் எச்சரிக்கப்பட்டிருந்தும் அறிந்திருந்தும்கூட மனதால் கணவனாக ஏற்றுக் கொண்டவனை தவிர வேறு யாரையும் மணந்துகொள்ள மறுத்து சத்தியவானையே மணந்து கொண்டு சத்தியவானின் உயிருக்காக யமதர்மனோடு வாதிட்டு தன் கணவனின் உயிரை மீட்டு பின் உயர்வை உலகிற்கு எடுத்து காட்டிய கற்புக்கரசியின் சரித்திரம் தான் சத்தியவான் சாவித்திரி நாடகம்.

நந்தனார்

ஆண்டையான் நிலத்தில் வேலை செய்யாமல் எப்போதும் சிவா, சிவா என புலம்பும் நந்தனை கிண்டல் செய்து, நீ கடவுளை காட்ட முடியுமா என மக்கள் கேட்க, அவர்களை திருப்பாங்கூர் கோயிலுக்கு அழைத்துச் செல்கிறான் நந்தன். கோயில் வாசலில் நந்தி மறைத்து நிற்க மனம் உருகி இறைவனை வேண்டிப் பாடுகிறான். நந்தி விலகுகிறது. இறைவன் தரிசனம் கிடைக்கிறது. நந்தன் சாதாரண மனிதனல்ல என்பதை அனைவரும் உணர்கின்றனர். அதன் பிறகு சிதம்பரம் செல்லும் நந்தனை வேதியர்கள் வரவேற்கின்றனர். நந்தன் அதில் மனம் லயித்தபடி நடராஜப் பெருமான் சன்னதியில் நுழைந்து ஜோதியில் கலந்து ஜோதியாகிறான்.

வழிகாட்டுகிருர் வள்ளுவர்

நிலமகள் அழைக்கிருள்

முருகு சுப்பிரமணியன்

இன்று நாம் எடுத்துக்கொள்ளும் குறள். பொருட்பாலில் உழவு எனும் அதிகாரத்தின் கீழ் வருகிற 1040வது குறளாகும்.

'இலமென்று அசைஇ
இருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகும்'(1040)

இக்குறளுக்கு டாக்டர் மு.வ. எழுதியிருக்கும் தெளிவுரை வருமாறு:
"எம்மிடம் ஒரு பொருளும் இல்லை என்று எண்ணி வறுமையில் சோம்பியிருப்பவரைக் கண்டால், நிலமகள் தன்னுள் சிரிப்பாள்."

உழவுக்குத் திருவள்ளுவர் கொடுத்திருக்கும் முதன்மை நமது மக்களின், கருத்தை அதிகம் ஈர்க்க வேண்டும் என்பது என் விருப்பமாகும். அதனுல்தான் உழவு எனும் அதிகாரத்தில் ரத்தினம் போல் பிரகாசித்துக் கொண்டிருக்கும் இந்தக் குறளை நான் தேர்ந்தெடுத்திருக்கிறேன்.

வறுமை என்பது மனிதனுக்கு நேரக்கூடிய அவ்லங்களில் மிகக்கொடிய துன்பமாகும். நெருப்புக்கு மத்தியில் கூடத் தூங்கிவிடலாம். வறுமை வாட்டும்போது கண்ணைப் பொருத்தவும் முடியாது என்று வறுமையின் தாங்கொணுக் கொடுமையை வள்ளுவர் வர்ணிக்கிருர். இந்த வறுமையிலிருந்து விடுபடுவது எப்படி?

உலக மக்களில் பெரும்பகுதியினர் வறுமையால் வாடுகின்றனர் என்று புள்ளி விவரங்கள் கூறுகின்றன. உலக நாடுகள் ஒன்றுசேர்ந்து வறுமை ஒழிப்புக்குக் கூட்டு முயற்சிகளை மேற்கொள்கின்றன. பணக்கார நாடுகள். ஏழை நாடுகளுக்குப் பண உதவி புரிந்து அவற்றை வறுமைப் பிடியிலிருந்து மீட்க முயல்கின்றன.

நாடுகளுக்கு மட்டுமின்றித் தனி மனிதர் வாழ்க்கையிலும் வறுமை ஒழிப்பு முக்கியப் பிரச்சனையாக இருந்து வருவது தெளிவு. முதல் இல்லார்க்கு ஊதியம் இல்லை என்னும் குறளின் கருத்துப்படி முதலீடு செய்வதற்குக் கையில் பணவசதி இல்லாதவர்கள் தொழில்களைச் செய்ய முடியாது.கையில் பணமில்லை, எப்படித் தொழில் செய்வது, எப்படிப் பிழைப்பது என்று வகையறியாது தவிப்பவர்களையும் காண்கிறோம். வேலை வாய்ப்புக்களை நாடுவதுதான் பெரும்பாலும் நமது மக்களின் இயல்பாக இருந்துவருகிறது. எந்தப் பொறுப்பும் இல்லாமல், வேலை பார்த்தோம். மாதம் முடிந்ததும் சம்பளம் வாங்கிளேம் என்று காலத்தைத் தள்ளவே பலர் கருதுகின்றனர். சஞ்சிக்கூலியாக இந்த நாட்டுக்கு வந்துசேர்ந்த அந்தநாள் முதல் இந்தநாள் வரை. நான்கு தலைமுறை ஐந்து தலைமுறைகளுக்கு அப்படியே மாருமல், மங்காமல் வேலை தொடங்கிய தோட்டத்தைக்கூடப் பிரிய மனமில்லாமல் தினச் சம்பளம் வாங்கும் பால்வெட்டுத் தொழிலாளர்களாகவோ வெளிக்காட்டுத தொழிலாளர்களாகவோ இன்னும் வேலைபார்த்து வருகிறவர்கள் ஏராளம். ஏராளம்.

வேலைக்கு மனுப்போட்டு....

இப்பொழுது அந்த வேலைவாய்ப்புக்கூடத் தோட்டங்களில் நமது மக்களுக்கு முன்பு இருந்ததைப்போல அத்தனை பிரகாசமாக இல்லை. தோட்டங்களில் பிறந்து வளர்ந்த பிள்ளைகள் வெளியே சென்று மற்றத் துறைகளில் தொழிற்சாலை, அலுவலகம் போன்றவற்றில் வேலைதேட வேண்டிய அவசியம் உண்டாகியிருக்கிறது. வேலை அத்தனை எளிதாகக் கிடைத்து விடுவதில்லை. நன்கு படித்த இளைஞர்களுக்குக்கூட வேலை வாய்ப்புப் பிரகாசமாக இல்லை. ஆண்டுக்கணக்கில் வேலைக்காக மனுப்போட்டுவிட்டு அடுத்தடுத்து வருகின்ற ஏமாற்றம் தரும் பதில்களைப் பெறுகிற அவல நிலையில் இளைஞர்கள்

"வியாபாரமோ தொழிலோ செய்வதற்குக் கையில் முதலுமில்லை. எங்காவது வேலைக்கு அமர்ந்து நிம்மதியாகச் சம்பளம் வாங்கலாமென்ருல் அதற்கும் வழி பிறப்பது குதிரைக்கொம்பாக இருக்கிறது. இந்த நிலையில் ஏதுமில்லாத நான் சும்மா குந்திக்கிடப்பதைத் தவிர வேறு என்ன செய்ய முடியும்?" இவ்வாறு எண்ணிக் கொண்டு, வாழும் வகையறியாது முயற்சி இன்றிச் சோம்பிக் கிடப்பவர்களைப் பார்த்து நிலமகள்-பூமாதேவி-சிரிக்கிருளாம்.

"அட பைத்தியக்காரா, உன்னிடம் ஏதுமில்லை, பிழைக்க வழியில்லை என்று சோம்பி, சோர்ந்து மயங்கிக் கிடக்கிருயே! இங்கே நான் இருப்பது உனக்கு. உன் கண்ணுக்குத் தெரியவில்லையா?" என்று நிலமகள் அவனை நோக்கிக் கேட்கிருளாம்.

> ## குறள் வகுப்பு
>
> 'வழிகாட்டுகிருர் வள்ளுவர்' என்னும் கட்டுரையைப் படித்துவரும் அன்பர்களில் ஒருவரான திரு. அப்பண்ணு, அக்கட்டுரையைப் படித்ததன் தொடர்பாகத் தான் ஏற்கனவே நடத்தத் திட்டமிட்டிருந்த குறள்வகுப்பை வெகுவிரைவில் துவக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிருர்.
>
> ஈப்போ, குனேங் ரப்பாட்டைச் சேர்ந்த அவர் குறள்வகுப்பை நடத்தும் தனது முயற்சிக்குத் துணை நிற்குமாறு குனேங் ரப்பாட் தமிழ் இளைஞர் மணிமன்றத்திற்கு வேண்டுகோளும் விடுத்துள்ளார். கடந்த சில காலமாக அப்பண்ணு, தமிழ் வகுப்பு நடத்தி வருவதும் குறிப்பிடத்தக்கது.
>
> காலை மணி 6 முதல் இரவு மணி 7 வரை சென்டோல் வியாபாரத்தைச் செய்துவரும் இவர் அதற்குப் பிறகு இந்தத் தமிழ்ப் பணியில் ஈடுபட்டிருப்பது இவரின் ஆழ்ந்த தமிழ்ப்பற்றைப் புலப்படுத்துகிறது.
>
> கோலாலம்பூரைச் சேர்ந்த திரு. சி மணிக்குமாரன் என்பவரும் குறள் வகுப்பு நடத்தி வருவதாகக் கடிதம் எழுதியுள்ளார். தென் சிஞ்சாங் ஸ்ரீ மகா மாரியம்மன் கோவிலில் புதன்கிழமை தோறும் நடைபெறும் தேவார வகுப்போடு, அவர் இந்தக் குறள் வகுப்பையும் நடத்திவருகிருர்.

எந்த நாட்டுக்கும் மண் வளம் பெரிய சொத்து! மண் வளத்தின் மூலம் குபேர நாடாகத் தன்னை உயர்த்திக்கொண்டு வருகிற குறிப்பிடத்தக்க நாடுகளில் ஒன்ருக நமது மலேசியா விள்ங்கி வருகிறது.

1957ஆம் ஆண்டு மலாயா பிரிட்டிசாரிடமிருந்து விடுதலை பெற்ற தருணத்தில் அப்பொழுது மலேசியசினர் சங்கத்தின் தலைவராக இருந்த துன்டான்செங் லோக், தாம் எழுதிய கட்டுரை ஒன்றில் மலாயாவின் பூமி வளத்தைப் பற்றித் தூர நோக்கோடு குறிப்பிட்டிருக்கிறார்.

"மலாயாவின் இயற்கை வளங்கள் மிகத் தாராளமாக நான்கு ஐந்து கோடி மக்களுக்கு ஜீவிதத்தை நல்கக்கூடியவை" என்று அவர் எழுதியிருக்கிருர். அந்த 1957ஆம் ஆண்டில் நமது மக்கள் தொகை 70 லட்சம் தான். 20 ஆண்டுகளுக்குப் பிறகு இப்பொழுது நமது மக்கள் தொகை 110 லட்சமாக உயர்ந்திருக்கிறது அதே சமயத்தில் நாட்டின் நிலப்பரப்பு மலேசியா அமைப்பின் மூலம் இரு மடங்கு பெருகி இருக்கிறது. துன் டான் செங் லோக் கணிப்பின்படி இந்த நிலப்பரப்பு பத்துக் கோடி மக்களுக்கு உயர்ந்த வாழ்க்கைத்தரத்தை நல்கக்

ஆகவே மலேசியத் திருநாட்டில் வாழ்கிற யாரும் முதல் இல்லை, வேலை இல்லை, பிழைக்க வழி இல்லை என்று சோம்பி, தேம்பி நிற்கக் காரணமே இல்லை. இங்கே நிலம் ஏராளமாக இருக்கிறது. மக்களின் கைபடாத - கண்படாத அடர்ந்த காடுகள், ஏராளமாக இருக்கின்றன. நிலமகள், மலேசியக் குடிமகன் ஒவ்வொருவனையும் நேசக்கரம் நீட்டி "நானிருக்கிறேன், நம்பிக்கையோடு வாருங்கள்" என்று அழைக்கிறாள். பாடுபடுவதற்கு, அயராது உழைப்பதற்கு ஆயத்தமாக இருப்பவர்களுக்கு மண்ணைப்போல் பலன் கொடுப்பது வேறு எதுவுமே இல்லை. 'ஒரு கொட்டையைப் போட்டு விடு. அங்கே ஆயிரம் கொட்டை தானே முளைக்கும்' என்பார்கள். மண் வளம், மண் தருகிற பலன் அத்தகையது.

வேகமான முன்னேற்றத்தை...

எனக்குத் தெரிந்த ஒருவர் முன்பு ஒரு தோட்டத்தில் கிராணியாக வேலை பார்த்து வந்தார். அந்த அடிமை வேலை அவருக்குப் பிடிக்கவில்லை. வாழ்க்கையில் அந்த வேலை மூலம் அவர் பெற்ற முன்னேற்றமும் அத்துணை மனநிறைவு அளிக்கவில்லை. வேகமான முன்னேற்றத்தை, வாழ்க்கை மாற்றத்தை அவர் மனம் நாடியது. கேமரன் மலையில் அச்சமயத்தில் விலைக்கு வந்த நிலத்தை எப்படியோ கடன் பட்டு வாங்கித் தன் குடும்பத்தோடு அங்குக் குடியேறினார். இப்பொழுது காய்கறித்தோட்டம் போட்டுத் தலைநகரத்துக்கு வாடிக்கையாகத் தக்காளிப் பழம் முதலியவற்றை லோரியில் அனுப்புகிற விவசாயிகளில் ஒருவராக மனநிறைவோடு வாழ்ந்துவருகிறார்.

நிலமகளை நாடியதால் அவருக்கு ஏற்பட்ட அதிர்ஷ்டம் 'கடுமையான உழைப்புத்தான்'. "குடும்பத்தோடு அனைவருமே உழைக்கிறோம். என்றாலும் பாட்டுக்கு நல்ல பலன் கிடைக்கிறது. பூமகள் எங்களை வாழ வைத்துக் கொண்டிருக்கிறாள்" என்று பூரிப்போடு பெருமிதமாகப் பேசுகிறார் அந்த இளைஞர். கிராணி வேலையிலும், தொழிற்சாலை வேலைகளிலும், தோட்ட வேலைகளிலும் நிரந்தரமாகச் சிக்கிக் கொண்டு மாற்றம் காண முடியாமல் தேங்கிக்கிடக்கிற எண்ணற்ற இளைஞர்களுக்கு இந்த இளைஞரின் குறுகிய கால முன்னேற்றம் ஒரு முன்மாதிரியாகும். இதுபோல நிலத்தை நாடி வாழ்க்கையில் வெற்றியைத் தேடிக்கொண்டிருப்பவர்கள் ஆங்காங்கு பலர் இருக்கிறார்கள். அவர்களின் அனுபவமும் அவர்கள் அடைந்திருக்கிற பலனும் நம்மிடையே மற்றும் ஏராளமானவர்களுக்கு வழிகாட்டியாக அமைந்து, சொந்தத்தில் நிலத்தில் பயிர் செய்வோரின் எண்ணிக்கை நம்மிடையே பெருக வழி பிறக்க வேண்டும்.

உலகம் தோன்றிய நாள்முதல் உழவுத் தொழிலுக்குத் தேவை இருந்து வருகிறது. அதன் சிறப்பும் நாளுக்கு நாள் உயர்ந்து வருகிறதே ஒழிய குறையவில்லை. நிலத்தின் மதிப்பு எந்த நாட்டிலும் நாளுக்கு நாள் ஏறி வருகிறதே ஒழிய இறங்கியதாகத் தெரியவில்லை. பணத்தின் மதிப்பும் வாங்கும் சக்தியும் எல்லா நாடுகளிலும் ஆண்டுக்காண்டு சரிவது இயல்பாகி விட்டது. ஆனால் நிலத்தின் விலைமட்டும் இதற்கு நேர் மாறாக ஏறிக்கொண்டிருப்பதையே காண்கிறோம். அது போலவே நிலத்தில் விளையும் பொருட்களின் விலையும் பெரும்பாலும் ஏறுமுகமாக இருப்பதையே காண முடிகிறது. ஆகவே எப்படிப் பார்த்தாலும் நிலத்தில் முதலீடு செய்வது வீண் போகாது என்பது தெளிவு.

வள்ளுவர் இந்தக் குறளின் மூலம் நமது கவனத்தை நிலமகளின்பால் திருப்புகிறார்.

நிலம் இருக்கும்போது — மண் வளம் இருக்கும்போது வெறுமனே சோம்பிக் கிடக்கவோ, ஏதும் இல்லை என்று ஏங்கி நிற்கவோ, வறுமை வாட்டுகின்ற சூழ்நிலைக்கு இலக்காகவோ எந்த நியாயமும் இல்லை. பக்கத்தில் பரந்து கிடக்கின்ற நிலம், சோம்பேறிகளைப் பார்த்து நகைக்கிறது. "பாடுபட ஆயத்தமாக இருக்கின்ற யாருக்கும் பலனைக் கொடுக்க நான் இருக்கும் போது சோம்பலுக்கோ, ஏக்கத்திற்கோ, வறுமைக்கோ சிறிதும் இடமில்லை" என்று நிலமங்கை அழுத்தமாகக் கூறுகிறாள். உழவுத்தொழில் தனிப்பட்ட குடும்பங்களுக்கு மட்டுமன்றி நாட்டுக்கும் மிக மிக இன்றியமையாத தொழிலாகும்.

பசிப்பிணியை விரட்டுவதற்கும் நாட்டை என்றும் பசுமையாக வைத்திருப்பதற்கும் உழவு துணைபுரிகிறது.

வள்ளுவர் இக்குறளின் மூலம் காட்டுகிற வழி, சோம்பிய கிடக்கும் நமது இளைஞர்கள் நிலத்தை நாடி புறப்பட வேண்டும் என்பதுதான். எங்கே நிலம் கிடைத்தாலும் நிலத்தில் குடியேறுவதற்குக் கிடைக்கின்ற எந்த வாய்ப்பையும் நமது இளைஞர்கள் நழுவ விடக்கூடாது. ஆரம்பத்தில் ஒரு சில ஆண்டுகளுக்கு நிலத்தில் பாடுபடுவது சிரமமாகத்தான் இருக்கும். போதிய வருவாய் கிட்டாது. மிக அதிகமான உழைப்பையும் நல்க வேண்டியிருக்கும். ஆனால் ஒரு சில ஆண்டுகளுக்குப் பிறகு ஆரம்பத்தில் பட்ட பாட்டுக்குப் பன்மடங்கு அதிகமாகப் பலன் கிடைக்கும். ஆகவே நிலக் குடியேற்றங்களில் நமது இளைஞர்களின் கவனம் அதிகமாகப் படியவேண்டும். எப்படியாவது எல்லாக் குடும்பங்களும் சொந்த நிலங்களைப் பெறுவதற்கும் அந்த நிலங்களில் பாடுபடுவதற்கும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

முயன்றால் முடியாதது இல்லை. தொடர்ந்து தட்டிக் கொண்டிருந்தால் பெரிய தாழ்ப்பாள் போட்டிருக்கிற கதவு கூடத் திறந்துவிடும். எங்கு நிலம் கிடைக்கிறதோ அங்குச் செல்வதற்குத் தயங்கக்கூடாது. பழைய முன்னோடி உணர்வை மீண்டும் நமது நெஞ்சங்களில் தழைக்க வைத்துக்கொண்டு சொந்த நிலம், சொந்தத் தோட்டம், சொந்தப் பயிர், சொந்த வீடு என்னும் திசையிலே நமது பயணம் நீடிக்கவேண்டிய தருணம் இது.

வள்ளுவரின் குறள் கூறுகிறபடி நிலமகள் பார்த்து எள்ளிநகையாடும் வறுமை வாழ்க்கை, வெறுமை வாழ்க்கை, சோம்பல் வாழ்க்கை நமக்கு இனிமேலும் வேண்டாம். இத்தனை ஆண்டுகாலம் நிலமடந்தையின் கேலிச் சிரிப்புக்கு இலக்காக நாம் வாழ்ந்தது போதும். நமது கையாலாகாத, வக்கற்ற நிலையைக் கண்டு நிலமகள் மட்டும் சிரிக்கவில்லை. அண்டை அயலார் அனைவருமே சிரித்தார்கள். முற்றிலும் பரிகாசத்திற்கு இலக்காக அமைந்த இந்த வறிய வாழ்க்கைக்கு இன்றே முடிவு கட்டுவோம். நிலமகளை நாடிச் செல்வோம். அவளுடைய அரவணைப்பில் இன்பம் காண்போம். நிலமகள் தருகிற எண்ணற்ற பலன்கள் நமது வாழ்க்கையை நிறைக்கட்டும். ஏற்கனவே நம்மைப் பார்த்து அவள் மறைமுகமாகச் சிந்திய சிரிப்பு அகன்று நமது வாழ்க்கை வெற்றியைக் கண்டு பூரிக்கின்ற பெருமிதச் சிரிப்பு அவள் முகத்திலே மலரட்டும். அந்தச் சிரிப்பின் எதிரொலி நமது வாழ்க்கையில் ஒவ்வொரு நாளும் மிளிரட்டும்.

மீண்டும் ஒருமுறை அந்தக் குறளைப் படிப்போம். அது தருகிற படிப்பினையை வாழ்க்கையில் கடைப்பிடிப்போம்.

"இலமென்று அசைஇ இருப்பாரைக்
காணின்
நிலமென்னும் நல்லாள் நகும்"(1040)

பெருவிழா

எல்.எம்.பகதூர்

இருப தாண்டு "மெர்டேகா"
எங்க ளுக்குப் பெருவிழா
வருக வென்று வாழ்த்துவோம்!
வணக்கம் அதற்குச் செலுத்துவோம்!

வீட்டில் எங்கும் மகிழ்ச்சியாம்
வீதி எங்கும் கொடிகளாம்
நாட்டி லெங்கும் கூட்டமாம்
நல்ல கலை விழாக்களாம்!

வாழ்த்துச் செய்தி யாவுமே
வானை யளந்து வருகுது
தாழ்வு மனத்தை அகற்றியே
தரணி மெச்ச வாழுவோம்!

மருத்துவக் கட்டுரை (3)

இருதய நோய்கள்

டாக்டர் ச. இராசரத்தினம்

அடுக்களையை ஆளுவோர் சுவையான பண்டங்களை ஆக்கிப் படைத்தல் கூடாது. சுவைக்கு அடிமை ஆகாதார் யாருமில்லை. வயிறு நிரம்ப உண்பார்கள். வாயிலில் காத்திருக்கும் நாய்க்கு ஒன்றும் எஞ்சவிடாது உண்பார்கள். முடிவில் விரல்களையே ஒவ்வொன்றாய்ப் பிறர் அருவருக்க நக்கிச் சுவைப்பதை நாம் பார்க்கின்றோம்! முடிவு? உடம்பு வளரும்; இரத்த உறைவுகள் கூடும்; சடுதி மரணம் சந்தியில் காத்து நிற்கும்.

காய்கறிகளால் வயிற்றை நிரப்புங்கள்

தொடக்கத்தில் பிரதான உணவை-சோறு, அரிசியாலான மற்றெவ்வுணவுகளையும் வழக்கத்தில் பாதியாக்கவேண்டும். வயிறு நிறை-யாவிடின் திருப்தி ஏற்படாது. எனவே "வயிற்றை நிரப்ப கீழ்க்காணும் மரக்கறி உணவுகளை எவ்வளவும் உண்ணலாம். இவை வயிறு கழிய உதவுவது மாத்திரமின்றி, கொழுப்பு உறைவுகள் இரத்தத்தில் சேருவதையும் தடுக்கின்றன. பூசணிக்காய், முருங்கைக்காய், கோவா, கறிமிளகாய், நோவக்கோல், நீற்றுப் பூசணிக்காய், பச்சைப் பப்பாசி, பாகற்காய், வெண்டிக்காய், வாழைப் பூ, தக்காளி, இவ்வகை எதுவுமே வயிறார மனமார உண்ணலாம். மேல்காட்டிய கறி வகைகளில் உடம்பைப் பருக்கவைக்கும் காபோகைரேட் மிக மிகக் குறைவாகவே இருக்கின்றது". The Prescriber, Ceylon, Sept. 75 issue.

நீரிழிவு (DIABETES)

"இதைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியாதோரில் நூற்றுக்கு 51%. சதமானோர் இருதய இரத்த நாள நோய்களினாலும் பாதிக்கப்படுகின்றனர். கட்டுப்பாட்டில் வைத்திருப்பவர்களில் 20%. விகிதமானோர் மட்டுமே" நீரிழிவு நோய் ஆராய்ச்சியில் ஈடுபட்ட R. C. பசினி, வைசனுவ இவ்விருவர்களின் முடிபு (AntisepticJuly75). சென்னை நீரிழிவு ஆராய்ச்சி நிலைய Dr. M. விஸ்வநாதன் M. D. முதலான நால்வர்களின் முடிபு வருமாறு: "கட்டுப்பாட்டிலேயே நோயை வைத்திருந்தவர்களில் இரத்த சம்பந்தமான நோய்களினால் பாதிக்கப்பட்டோரின் விகிதம் ஏழு (7) மட்டுமே. கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியாதோரில் 41%. விகிதமாய் கூடியது. இந்த ஆராய்ச்சி நிலையம் கைக்கொண்ட உணவுமுறை தமிழ்நாட்டு மக்கள் உண்ணும் உணவுக்கு அதிகம் வேறானதல்ல.

எனவே நீரிழிவு நோய் வாய்ப்பட்டால் அந்நோயைக் கட்டுப்பாட்டில் வைத்திருத்தல்

இரத்த நாளங்கள் நோய்க்குள்ளாகி அகால மாரடைப்பு மரணத்தை வரவழைப்பர். தொடக்கத்தில் உணவுக்கட்டுப்பாட்டால் மட்டுமே நோயை மாற்றலாம்.

புகைத்தல்

புகைப்போரில் இளம் மரண விகிதம் மற்றவர்களிலும் பார்க்கக் கூடியதென்பதை மறுப்பதற்கில்லை. பலதரப்பட்ட சுகவீனங்களால் காலம் முழுவதும் வருந்துவது கணக்கிட முடியாவொன்று. இங்கிலாந்தில் 50,000பேர் வருடா வருடம் அகால மரணத்துக்கு ஆளாகின்றனர் என்று அண்மையில் நடத்திய ஆய்வின் மூலம் கணக்கிடப்பட்டுள்ளது. (B. M. J. 16-8-75). இவர்களில் இரத்த அழுத்தம் கூடவே காணப்பட்டது. இரத்தத்தில் கொழுப்பு உறைவுகளும் அதிகரித்தே இருந்தன. புகைத்தல் கொழுப்புறைவுகளுக்கு நேர் காரணமென்று ஊகிக்கக் கிடக்கின்றது. இரத்த அழுத்தம் கூட இருப்போர் புகைத்தலை நிறுத்த வேண்டும். இரத்த அழுத்தத்தைக் கூட்டுவதுமன்றி புகைத்தல், பொல்லாப் புற்றுநோய்க்கும், சயரோகத்துக்கும் அடிகோலுகின்றது. இலண்டன், எடின்பரோ ராயல் கல்லூரி வைத்தியர்களின் அறிக்கை ஒன்று இவற்றைச் சுட்டிக் காட்டியதைத் தொடர்ந்து டாக்டர்மார்களில் புகைத்தல் ஐந்தே வருடத்தில் ஐம்பது விகிதம் குறைந்துள்ளதாம். இன்னும் குறைந்து கொண்டே போகிறதாம். அவர்களில் மாரடைப்பு நோயும் குறைந்தே வருகிறது. அதே அறிக்கை கொழுப்புறைவுகள் இரத்த நாளங்களில் கூடுவதற்கு புகைத்தல் ஒரு பெரிய காரணம் என்கிறது. அது மட்டுமல்லாமல் புகையிலுள்ள "நிக்கட்டின்" நஞ்சு சுவாசப் பைகளால் உறிஞ்சப்படுகின்றது. வாயின் மெல்லிய மேற்பரப்பாலும் உறிஞ்சப்பட்டு உடம்பில் சேர்க்கப்படுகின்றது என்றும் அறிவுறுத்துகிறது. சுருங்கும் இரத்த நாளங்களில் கொழுப்புறைவுகளும் சேர்ந்தால் இரத்த அழுத்தம் கூடும். அழுத்தம் கூட அவதிகளும் கூடும். நன்மை ஏதும் நல்காது. இப்பேரிடிகளை மாத்திரம்தரும்புகைக்குடியைச் சட்டம் மூலம் கட்டுப்படுத்தல் அவசியமாகின்றது.

காப்பி, தேயிலை குடி

"இத்தவிதமான அறுவைச் சிகிச்சை செய்யுமுன் காப்பி குடிக்கக் கூடாது. காப்பி, விரல்களுக்குத் தரக்கூடிய அந்தச் சிறிய நடுக்கமும் அறுவைச் சிகிச்சைக்குத் தடையாய் விடும். மது இரண்டு நாட்களுக்கு முன்பே அருந்தக்கூடாது." பூதக் கண்ணாடியின் உதவியுடன் மயிரிலும்

தைக்கப்படும் அறுவைச் சிகிச்சை மூளையில் செய்யும் டாக்டர் சலாசர் கூற்று இது. வெட்டுக் கருவிகளும் வெளிச்சத்துக்கு எதிரே பிடித்தாலன்றி கண்ணுக்குத் தெரியாதன. (Microsurgery, U.S.A. Horizon No. 11) அப்படியாயின் கோப்பை கோப்பையாய்க் காப்பியை, தேயிலை-யை, மதுவை மண்டினால் என்ன நேரும்? நடுக்கம், எதற்கும் கோபம், நித்திரையின்மை, படபடப்பு, நாடி முறைதவறி அடித்தல், தலை இடி இவைகள் தொடங்கிக் கூடிக் கொண்டே போகும். காப்பி, தேயிலையில் இருக்கும் "கபீனும்" இருதயத்தைப் பாதிக்கின்றது. ஒரு கோப்பை கடுங்காப்பியில் ஒரு "கிரேயின்" வரை "கபீன்" உண்டு. அதே அளவு கடும் தேநீரில் இருமடங்கு கூடிய "கபீன்" உண்டு. மேற்கூறிய நோய்களுடன் வருபவர்களை வைத்தியர் பொறுமை இழக்காது விசாரிப்பார்களாயின் அடிக்கடி காப்பி, தேயிலை, மது இவைகளில் ஒன்றோ இரண்டோ மூன்றையுந்தானோ அருந்துவதாகச் சொல்வார்கள். மாற்று மருந்துகள் எழுதுமுன் இப்பழக்கங்கள் பற்றி வைத்தியர் விசாரித்தல் வேண்டும். மது பற்றி விசாரிப்பதுண்டு. ஆனல் காப்பி, தேநீர் பற்றி விசாரிப்பார் யாருமே இல்லை என்று துணிவாய்ச் சொல்லலாம்.

மருந்தாகக் "கபீன்" பாவிக்கப்படுகிறது. ஒரு நேரத்துக்கு இரண்டு அல்லது மூன்று கிரேயின் மட்டுமே கொடுபடும். இந்த அளவு கூடினல் தீங்கையே இழைக்கும். கபீன் இருதயத்துக்கு ஊக்கமளித்து, ஊன்றியும் கெதியாயும் அடிக்கச் செய்கிறது. இதன் நேர் விளைவாய் இரத்த ஓட்டம் கூடுகிறது. விடும் மூச்சுக்களும் அதிகரிக்கின்றன. முடிபு? சோர்ந்த நேரத்தில் சொற்ப வலுவைத் தரக்கூடும். கோப்பை கோப்பையாய் நாளிலும் பொழுதிலும் குடித்துக் கொண்டேயிருந்தால் இருதயம் பலவீனம் அடையும். காலகதியில் இறக்கும் குதிரையைச் சவுக்குக் கொண்டு அடித்தது போல் ஆகும்.

தடைமருந்துகள்

இளம் வயதிலேயே குடும்பப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தவேண்டிய துரதிர்ஷ்ட நிலையில் நாம் இருக்கின்றோம். குடும்ப வாழ்வை ஆரம்பிக்கும் இருவருக்கே போதாத வருவாய் பெரும்பாலோர்க்கு இன்று உண்டு. அப்படியாயின் மூன்று, நான்கு, ஐந்தென்று பெருகிப்போக முடியாதன்றோ? பெறும் பிள்ளைகளுக்கு வேண்டியதெல்லாம் கொடுக்க, நல்ல மக்களாய் வளர்க்க நாம் கடமைப்பட்டிருக்கிறோம். எனவே இந்தக் கருத்தடை மாத்திரைகளை இளம் வயதிலேயே உண்

வாயும் கிடைக்கிறது. பணமில்லாமலும் அரசினர் அள்ளிக்கொடுக்கின்றனர். தீங்கொன்றுமில்லை என்றே பிரச்சாரம் செய்து இவைகளை விழுங்க ஊக்கப்படுத்துகிறார்கள். ஆனால் நன்மை தீமைகளை அறிய ஆராய்ச்சியிலீடுபட்டோர் தீங்குண்டென்றே தெரிவிக்கின்றனர். அதுவும் "பாவிப்போர் பருத்து பாரங்கூடியவர்களாயின். ஆபத்தும் கூடவே உண்டு. இரத்த அழுத்தம் கூடியவர்களாயின் இரத்த உறைவுகள் உள்ளவர்களாயின் ஆபத்து இதிலுங் கூடவே"(B.M.J.May 3rd 1975) 30–39க்குள் மாரடைப்பு நோயால் மடிவோர் தொகை, மாத்திரைகளை விழுங்காதோரிலும் மூன்று மடங்கு அதிகம். 40–44க்குள் ஐந்து மடங்கு கூட. மேற்காட்டிய நோய்கள் எதுவும் ஒன்று சேர்ந்திருந்தால் தீங்குகள் நான்கு மடங்கு கூட. இரண்டு சேர்ந்திருந்தால் பத்து மடங்கு கூட. மூன்றும் சேர்ந்திருந்தால் என்பது மடங்கு கூடவாகும். (Medical Times Via Health: October 75) குழிதோண்ட வழி வகுக்கும் கருத்தடை மாத்திரைகளை விடுத்து குடும்பத்தைக் கட்டுப்படுத்த வேறு முறைகளைக் கையாள வேண்டும்.

தேகாப்பியாசம்

தேக நலத்துக்கும் நீண்ட ஆயுளுக்கும் தேகாப்பியாசம் தேவை. இரத்தத்தை விரைவாயோடச் செய்யும். அதே நேரத்தில் கொழுப் புறைவுகளையும் கலைத்து ஒருவாறு கரையச் செய்யும். இரத்தாசய இரத்த நாளங்கள் நோய்வாய்ப்பட்டோர், முதியோர் இவர்களுக்கு எவ்வித அப்பியாசம் தேவை என்பதே கேள்வி. தொடர்ந்தும் முன் செய்த சரீர வேலைகளைச் செய்து வரலாம். விளையாட்டுக்களில் ஈடுபடலாம். ஆனால் இளைத்தால் களைத்தால் சுகம் தரும் வரம்பைக் கடந்ததாகவே கொள்ளவேண்டும். விறுவிறுப்பான நடையே நன்றென்பது பெரும்பாலான வைத்திய நிபுணர்களின் முடிபு. எதற்கும் இயற்கை தரும் எச்சரிக்கைகளை - இளைத்தல், களைத்தல் எல்லையாகக்கொள்ள வேண்டும்.

பாலுறவு

இரத்தாசய இரத்த நாளங்கள் நோயால் அவதியுறுவோர் இடையிடையே தேவை நேரின் பாலுறவில் ஈடுபடலாம். அறுபதுக்கு மேலும் அதே நினைவாலேயே காலம் போக்கும் அபூர்வப் பிராணிகளும் உண்டு. எவர்க்கும் மாதம் ஒரு முறை, இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை ஈடுபட்டால் தீங்கொன்றும் நேராது. கணக்குக்குள் அமைந்தது தீங்கிழைக்கப்பட மாட்டாது என்று கொள்ளலாம். மூச்சுத் திணறல், நெஞ்சு நோவு, படபடப்பு இருக்குமாயின் நிச்சயமே வரம்பை மீறுகின்றது. மரணங்களும் ஏற்படுகின்றன.

சிவசத்துக்கள்

இளமையைக் காக்கவும் நலமாக வாழவும் என சிவசத்து மாத்திரைகளை நிறைய வாங்கி விழுங்குகிறார்கள்; டாக்டரின் ஆலோசனை இல்லாது இதைச் செய்கிறார்கள். இந்த மாத்திரைகள் உண்மையாக நன்மை பயப்பனவா என்று சிந்தித்தல் வேண்டும். இச்செயற்கைச் சிவசத்து மாத்திரைகளை அளவுக் கதிகமாய் உட்கொள்வதால் ஆபத்தே உண்டாகின்றது.

சிவசத்துக்கள் 'ஏயும், சீயும்' பால், இறைச்சி, முட்டை, ஈரல், மீன் எண்ணெய், பயறு, உளுந்து, கடலை வகைகளிலும் பப்பாளி, மாம்பழம், தோடம்பழம் போன்ற பழவகைகளிலும் ஏராளமாயிருக்கின்றன. வளரும் பிள்ளைகளுக்கு 'ஏ'யும், 'சீ'யும் ஏராளம் வேண்டும், கட்டாயமாய் வேண்டும். போதிய அளவும் வேண்டும். இவைகளை நாம் இந்த இயற்கை தந்த ஏராளமான உணவு வகைகளிலிருந்தே பெறவேண்டும். அது, இது என்று பலதையும் புசித்து, பலவித ரகங்கள் சேர்ந்த சிவ சத்துக்களை உடம்பில் சேர்க்கலாம். உடம்புக்கும் நன்று - நாவுக்கும் ஏற்புடையதாகும் தேவைக்கு மிஞ்சி உண்ணவு மியலாது. நம் அடுக்களைகளையே சிவசத்துண்டாக்கும் தொழிற்சாலையாய் மாற்றிவிடலாம்" என்கிறார் டாக்டர் எச். கிரனுன்டானி (Illustrated Weekly Nov. 23, 1975)

பயறு, உளுந்து, நிலக்கடலை போன்ற தானிய வகைகளை நீரில் முளை கட்ட வைத்து தினமும் ஒரு கை கொண்ட அளவு பச்சையாய்ச் சப்பி விழுங்கினால் தேகத்துக்குத் தேவையான போதிய சிவசத்துக்கள் "ஏ"யும், "சீ"யும் பெறலாம். அது மாத்திரமன்றி நிரம்ப புரதச் சத்தும் சேரும். தாவரபட்சணிகளுக்கு சுலபமாக இம்மூன்று சத்துக்களையும் பெற இது ஒரு நல்ல வழியன்றோ? கோவில் என்றால் கடலையும் கூடவே நினைவில் வரும்! பிள்ளைகள் வேண்டவும் தவறமாட்டார்கள். பெற்றோரும் வேண்டிக் கொடுப்பார்கள். கோவிலிலிருந்து திரும்பும் பொழுது தாங்களும் கொறிப்பார்கள். அது மாத்திரமன்றி வீட்டில் விட்டுவாங்குவர்களுக்கும் கடுதாசிச் சரைகளில் கடலை நிறைய இருக்கும். இது ஒருநல்ல வழக்கமும், பயன்தரு பழக்கமும்கூட. நம் முன்னோர்கள் நல்ல வழிகாட்டிகள். ஒரு சிறங்கை நிலக்கடலையில் ஒரு நாளுக்குத் தேவையான புரதச் சத்து முழுவதும் ஒரு மனிதனுக்குக் கிடைக்கும்.

முட்டை, ஈரல், போன்ற விலை கூடிய பொருட்களைக் கீழ்மட்டத்திலுள்ளோர் அறியார். மத்திய வகுப்பினர் இயற்கை இலகுவாய் அளிக்கும் உணவு முறைகளை உணராது, அறியாது, சேர்க்கைச் சிவசத்துக் மாத்திரைகளைக் கடன்பட்டும் வேண்டி விழுங்கி அவதிக்குள்ளாகின்றனர். செல்வர் பணத்தை இறைத்து இந்த விலைகளை வாங்கி கணக்கேயில்லாது விழுங்குகின்றனர்.

இரத்த அழுத்தம் கூடியோர், முதியோர் வயதுக்குச் சிறிது பார்வை குறைவதைத் தடுக்க "ஏ" சத்து மாத்திரைகளைத் தாங்களே வேண்டி ஏராளமாய் விழுங்குகிறார்கள். மூளை நாளங்களின் அமுக்



ஏப்பம் விட்டால் வரும் எழுத்து "A"
தேன் தரும் எழுத்து "B"
தண்ணீர் உள்ள எழுத்து "C"
பறக்கும் எழுத்து "E"
தும்மினால் வரும் எழுத்து "H"
எண்ணெய் தரும் எழுத்து "L"
அழும் போது வரும் எழுத்து "O"
ஆமாம் போடும் எழுத்து "S"
எல்லோரும் குடிக்கும் எழுத்து "T"
உன்னை என்று குறிக்கும் எழுத்து "U"
கேள்வி கேட்கும் எழுத்து "Y"

தொகுப்பு: டி. வி. பாலு
சென்னை

தத்தை (Intracranial Pressure) இது கூட்டும். சடுதி மரணத்தைக் கொண்டு வரக்கூடும் என்பதை அறியார். ஈரலும் செயலற்றுப் போகிறது. எனக்குத்தெரிய சில மாதங்களுக்குமுன் ஒரு டாக்டரின் தாயார் தன் கண்கள் பார்வை குறைவதைத் தடுக்க மீன் எண்ணெய் மாத்திரைகளை விழுங்கிவந்தார்; தாங்கொணாத் தலையிடிக்காளாகினார். இந்த மாத்திரைகளைக் கைவிட இடியும் பறந்தது. இப்படிக் கஷ்டப்பட்ட கணக்கற்றவர்களை நாம் அறிவோம். சிவசத்து மாத்திரைகள் எதுவும் டாக்டரின் ஆலோசனைப்படியே விழுங்குதல் வேண்டும்.

சிவசத்து "பி" -அரிசி, கோதுமை பயறு இவைகளைத் தவிடுபறக்கத் தீட்டுவதானால் இயற்கை மூலம் இலகுவாய்ப் பெறக்கூடிய, மதிக்க முடியாத உயர்ரக உயிர்ச்சத்துக்களை வீசிவிடுகிறோம். அதே டாக்டர் அதே சஞ்சிகையில் எழுதுகிறார்: "புழுங்கல் அரிசி புளிப்படைதலால் "பி" சத்து சேருகிறது. புளிக்க வைத்து ஆக்கப்படும் தோசையும், இட்லியும், தென்இந்தியர் உண்ணும் நீர் ஊற்றிப் பவுத்திரப்படுத்தப்பட்ட பழைய சாதமும், அந்த நீரும் சுகத்துக்கு உகந்தவை. "பி" சத்து இயற்கையாகவே அவைகளில் உண்டாகின்றது. பழைய சோற்றையும் பழம் நீரையும் பணம்படைத்தவரும், மத்திய வகுப்பினரும் இப்போது அறியார். அந்த அளவில் இவ்விரு பாலாரும் வறியவர்களே! இந்த இலகுவாய்ப் பெறும் இயற்கை வழிகளை மறந்து, அறியாது "பி" மாத்திரைகளைத் தேடி அலைவது ஒரு கேலிக்கூத்தே. அரிசி அவிந்த நீரில் நிரம்ப சத்துக்களுண்டு. அதேபோல் இலை காய்கறி அவிந்த நீரும் அவைகளைவைத்திருக்கிறது. எனவே கஞ்சியைக் குடித்தல் வேண்டும். மற்ற நீரையும் உணவில் சேர்த்துக் கொள்ளவேண்டும்.

சிவசத்து "சி" தடிமனைப் போக்கும் என்று லையனஸ் போலிங் (Nobel Prize Winner) எழுதிய நாட்தொடங்கி, அதன் விற்பனை கட்டுக்கு அடங்கியதொன்று அன்று. அதை ஆக்கி மாத்திரைகளாய் அளிக்கும் கம்பெனிகளின் வங்கி மிச்சமும் பொங்கி வழிகின்றது. விழுங்குவோர் ஏமாற்றப்படுகின்றனர். வறியவருமாகின்றனர்.

வேறு வேறு ஆராய்ச்சியாளர் வேறு வேறு நாடுகளிலிருந்து போலிங்கின் முடிவுக்கு ஆதாரமில்லை என்று அடித்துக்கூறியும், "சி" விற்பனை கூடியே போகின்றது! கடைகளில் இடையிடையே வேண்டவுமே கிடையாது போகும். இலங்கைப் பேராதெனியா பேராசிரியர் S. W. பிபிலையும் ஆராய்ச்சியின் பின் மற்ற ஆராய்ச்சியாளர்களின் முடிவுக்கே வந்தார். இதைச் சுட்டிக் காட்டி இலங்கை வைத்திய சஞ்சிகையில் (Ceylon Medical Journal 1971) ஆசிரியர் எழுதினார். "மதிப்புரை எழுதிய ஒருவரை (போலிங் புத்தகத்துக்கு) இங்கே காணப்படுவது உண்மையைத் தேடும் ஒரு விஞ்ஞானியின் கவனமாய் எழுதப்பட்ட கருத்துரைகளல்ல. ஏதோ ஒன்றை விற்கும் நோக்கமாய் வரையப்பட்ட விளம்பரம் போன்றது"! வெட்கத்தின்மேல் வெட்கமான சம்பவமன்றோ? மருந்துகளை விளம்பரம் செய்ய டாக்டர்களின் பெயர்களின் பின் பல எழுத்துக்களைப் போட்டு அவர்களின் ஆராய்ச்சியின் பயன் என்றும், அளிக்கும் பலன்களும் பலப் பலவென்று தயவு தாட்சண்யமில்லாது விளம்பரம் இருக்கும். பொறுமையாய் இவர்களுக்குக் கடிதங்கள் எழுதினால் கடிதங்களே திரும்பிவரும்! அப்படிப் பெரியார் இருந்தாலன்றோ கடிதங்கள் கொடுக்கப்படும்? மருந்துகளின் கறுப்புச் சந்தை கணக்கிடக் கூடியதன்று. பால் மறவாத குழந்தைகளுக்குமே "சி" கொடுக்கிறோம் என்று பெற்றோர் வருவார்கள். சொற்களிலும் கண்களிலும் ஒரு பெருமை தவழும்; பரிதாபம்! தேவைக்கு மிஞ்சிய சிவசத்து "சி" எப்படியான தீங்குகளைக் கொண்டு வரும் பாருங்கள். "குண்டிக்காய்கள் பாதிக்கப்படலாம். இனத்தைப் பெருக்கும் சத்து, சக்தி குறையலாம். அபின் உண்ணப் பழகியவர் போல் பின் "சி" இல்லாமலே சீவிக்க முடியாத நிலை ஏற்படலாம். (Reader's Digest May 1975) இவை பொறுமையாய் ஆராய்ச்சியிலீடுபட்ட டாக்டர்மாரின் முடிவு.

மற்றைய சிவசத்துக்கள் போல் "சி"யும் உடல் பராமரிப்புக்குத் தேவையே. அதை நாம் நாளும் உணவுகளிலிருந்தே பெறவேண்டும். இந்த வழியைக் கடைப்பிடிக்கும்போது ஆபத்துக்கள் குறுக்கிட மாட்டா. தேவைக்கு அதிகம் உடம்பில் சேரவும் மாட்டாது. கூடியவைகளைக் கழிக்கும் வேலையில் குண்டிக்காய்கள் நோய்ப்படவும் மாட்டா.

செலவைக் கூட்டும் தோடம் பழங்களிலும், தேசிக்காய்களிலும் மாத்திரமன்று "சி" சத்துண்டு. ஓங்கி நிற்கும் கொய்யாக்காய் ஒன்றில் ஆறு தோடம் பழங்களிலுள்ள "சி"யைப் பெறலாம். மலிந்த நெல்லிக்காயில், கொய்யாக்காயிலும் இருமடங்கு "சி" கூடவுண்டு. எங்கும் வளரும் முருங்கையிலைப்பச்சடி தோசையுடன் சேர்த்துண்ண குடும்பத்துக்குத் தேவையான சிவசத்து "சி" அவ்வளவும் கிடைக்கும்" அதே இலஸ்டிரேடட் வீக்லி இதழில் அதே டாக்டர் தொடர்ந்து எழுதியிருக்கிறார்.

சிவசத்து "ஈ" -ஆண்மையைக் கூட்டும், பலத்தைப் பெருக்கும், கை கால் உளைவைப் போக்கும் புண்களை ஆற்றும், நீரிழிவை மாற்றும், சீவியத்தை நீட்டும், இருதய இரத்தநாள வியாதிகளை விரட்டும் என்று என்னென்னவோவெல்லாம் சொல்லுகிறார்கள்.

சில மாதங்களுக்கு முன் ஓர் ஓய்வுகாலச் சம்பளம் பெறுபவர் வங்கியில் வாங்கிலிருந்து கொண்டு பக்கத்திலிருந்தவருக்கு "ஈ"யின் குணங்களைப் போற்றிக்கொண்டிருந்தார்! இந்தப் போற்றுதலுக்கு ஓர் ஆதாரமுமே இல்லை. மற்றச் சத்துக்களைப் போன்று "ஈ"யும் உடம்பு நலத்துக்குத் தேவையே. அதை நாம் உணவிலிருந்து பெறவேண்டும்; பெறுகிறோம். பருப்பு வகைகளில், இலைக்கறிகளில், எண்ணெய் வகைகளில் இது போதியதுண்டு. செயற்கை "ஈ" மாத்திரைகளை அளவுக்குக் கூட உட்செலுத்தினால் நஞ்சாய் மாறும். ஈக்களை மொய்க்கும் நாளை ஈவு இரக்கமின்றி அண்மைப்படுத்தும்!

நோய்வாய்ப்படும்போது சில சிவசத்துக்கள் கூடிய அளவில் தேவையாகும். உணவிலிருந்து அதைப் பெறமுடியாதவர்கள், சீரண சக்தி குறைந்தவர்கள், செயற்கை சிவசத்து மாத்திரைகளை விழுங்கலாம். அதற்கு அளவு அறிய டாக்டரின் ஆலோசனை கட்டாயமாக வேண்டும். சிவசத்துக் குறைவுகளால் ஏற்படும் நோய்கள் அவ்வளவுமே இச்சத்துக்கள் கூட உண்பதாலும் ஏற்படுகின்றன. இந்தக் கூடிய சத்துக்களை வெளியாக்க முனைவதில் குண்டிக்காய்கள் (Kidneys) பாதிக்கப்படுகின்றன. குண்டிக்காய்கள் பாதிக்கப்பட இரத்த நாளங்கள் பாதிக்கப்படுகின்றன. இரத்தநாளங்கள் பாதிக்கப்பட இரத்த அழுத்தம் கூடுகின்றது. சுற்றியும் சுற்றியும் சுப்பருடைய கொல்லையிலேயே நிற்போம். வயதானபின் வளர்க்க ஒன்றுமேயில்லை, பராமரிப்பு மட்டுமே தேவை. நாமும் உணரவேண்டும். வைத்தியரும் சிறிது சிந்தித்தல் வேண்டும். பலவித மருந்துகளையும் கைநிறையத் தந்து பயன்தராத செலவை அப்பாவி மக்களுக்குக் கூட்டக் கூடாது.

இரத்த அழுத்தக் குறைவு

"முழங்காலில் படிந்து ஆண்டவனை இறைஞ்சும், உமது இரத்த அழுத்தம் கூடுதலாயிராது குறைவாயிருப்பதற்கு" என்று ஒருமுறை சொன்னார் ஒரு ஹார்லி ஸ்டிரீட் (Harley Street) வைத்திய நிபுணர் தன்னுடைய நோயாளிக்கு. எவ்வளவு உண்மை! வயது வந்தோருக்கு 110/70 mmக்குக் குறைவாயிருந்தால் அழுத்தம் குறைவென்று கணிக்கப்படுகிறது. இந்த வரையிலும் குறைந்த அழுத்தம் உள்ளோரை, பலரை எழுதுபவர் அறிவார். அவர்கள் ஒன்றுமே உணராது தங்கள் வேலைகளை வழமைபோல் செய்து வருகிறார்கள். "உமக்கு அழுத்தம் குறைவு" என்று அவர்களுக்கு எழுதுபவர் சொல்வதே கிடையாது. அவர்கள் தெரியவேண்டியதுமில்லை. அழுத்தக் குறைவு பரந்துகிடக்கும் இரத்த நாளங்கள், பெரும்பாலும் தும்புபோன்று சிறியவை, ஈந்து இரத்த ஓட்டத்துக்குத் தடையாகாது இருத்தலாலே ஏற்படுகின்றது. சாதாரண இரத்த அழுத்தம் உள்ளவரும், கூடிய அழுத்தம் உள்ளவரும் சடுதியாய் இரத்த அழுத்தக் குறைவால் பாதிக்கப்பட்டால் நிமிர்ந்து கவனத்துக்கு எடுக்க வேண்டியதே. இது நோய் காரணமாய் ஏற்படுவது. இது நேரும்போது உற்சாகக் குறைவு, கை கால் உளைவு, விறைப்பு, பலக்குறைவு, இளைப்பு, தலைக்கிறுதி, காதிரைச்சல், காது புடைத்தல், நித்திரையின்மை, ஒன்றோ இரண்டோ இவைகளில் பலவும் சேர்ந்தோ ஏற்படும். அவை பாதிக்கப்பட்டவரை வைத்தியரிடம் இழுத்தே செல்லும். வேறு வேறு நோய்கள் காரணமாயிருக்கலாம். பெரும்பாலும் இரத்தக் குறைவே ஏதுவாயிருக்கும். இவைகளைக் கண்டிக்க வைத்தியம் நடக்க, நோயாளி குணமடைவார்.

இயற்கையோடு ஒத்து வாழ்ந்தாலே நலமே வாழலாம், இன்பமாய் வாழலாம்; நீடிய காலம் வாழலாம். அத்துடன் அயலாரை நேசிக்கும் பண்பும், எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டும் என்ற நினைவும் சேரின் சொல்லவும் வேண்டுமோ? சாந்தமே உருவாகலாம். கடுகதி இன்றி மெதுவாய்ப் பேசவும், மென்று மெல்ல உண்ணவும், ஆழ்ந்த அமைதியான மூச்சுவிடவும் பழகி, இனியவை பேசவும், கேட்கவும், வாசிக்கவும் வாய்த்தால், அத்துடன் தேவையின்மையும் சேர்ந்தால் இருதயத்துக்கு மருந்தென வேறொன்றும் வேண்டாம்.

இன்னும் ஒன்று மிகவும் தேவையே. இது இறை வணக்கமாகும். இது மரண பயத்தைப் போக்கும். இறைவன் நாமத்தை இடையறாது ஓதுவார் இதை அறிவார்!

வேலியம், லிபிரியம், நொபிரியம் செரிப்பாக்ச் மொகொடோன் ஓயாது விழுங்குகிறீர்களா? அவை அபின், கஞ்சா போன்றவை! அவைகளை வேலிக்கு மேலால் வீசி, இறைவன் நாமத்தை ஓயாது ஒருமனதாய் ஓதுங்கள். மருந்துகள் தரும் மயக்கம் இல்லாதே மனச்சாந்தி ஏற்படும். இகபர பலனும் நிரம்பக் கிடைக்கும்.

வாழ்க வையகம்

[இலங்கை அரசினர் மருத்துவச் சேவையிலிருந்து ஓய்வுபெற்ற டாக்டர் ச. இராசரத்தினம் அவர்களின் "இருதய நோய்களும் தடுக்கும் முறைகளும்" என்னும் நூலின் சுருக்கமே இக்கட்டுரை. நூலாசிரியருக்கும் பதிப்பகத்தாருக்கும் நன்றி]

மாலினிக்கு அன்று எதிலுமே நாட்டம் செல்லவில்லை. கவலை அவள் உள்ளத்தைக் கப்பியிருந்தது. அவள் மதிமுகத்தில் துயர ரேகைகள் படர்ந்து நிழலிட்டுக் கொண்டிருந்தன. கொஞ்சி மகிழும் தனது ஒன்றரை வயது குழந்தை கோமளம்கூட அவள் உள்ளத்தில் மகிழ்ச்சிப் பெருக்கை யூட்டவில்லை.

அது தனது பிஞ்சுக் கரத்தை யசைத்து மழலையாடுவதை அமுதமென அள்ளி உண்டு இன்பப் பொய்கையில் நீச்சலடித்தவள்தான் அவள். அதன் அதரத்தில் ஆயிரமாயிரம் முத்தாரங்களைப் பதித்த மாலினிதானா அவள்! என்ன வந்தது அவளுக்கு?

கதவு தட்டும் ஒலி கேட்டு வேண்டா வெறுப்புடன் கதவைத் திறந்தாள் மாலினி.

அங்கே சிரித்த முகத்துடன் நின்று கொண்டிருந்தான் மணி—அவளது அன்புத் துணைவன்.

"வெடுக்" கென்று முகத்தைத் திருப்பிக் கொண்ட அவளது செயல் அவனுக்கு விநோதமாக இருப்பினும் அதனைக் காட்டிக் கொள்ளாமல், "கங்கைக்குப் பிடித்த கனி கொண்டு வந்திருக்கேனே!" என்றான், அவன் அவளிடம் கற்றிருந்த அரைகுறை சீனத்தில்!

அவள் பேசவில்லை!

"தேவிக்குத் திடீரென்று என்ன வந்ததாம்?" இம்முறை மலாயில் கேட்டான் அவன்.

மணிக்கு எப்போதாவது மகிழ்ச்சி பிறந்தால் இப்படித்தான் பன்மொழியில் தனது சகதர்மிணியிடம் "சண்டப்ரசண்டம்"செய்வது வழக்கம்!

அவள் அப்போதும் பேசவில்லை.

மணிக்கு ஒன்றுமே புரியவில்லை.

"அப்பா... அம்மா... ஊஊ..." என்று தனது மழலை மொழியில் கூறியவாறு அவனருகில் ஓடி வந்தது குழந்தை கோமளம்.

னின்றும் எழுந்த "மணம்" அவ்விடு முழுதும் பரவியது!

"அப்பா, ஆ...ஊ...டூரி... டூரி...!" என்று குழந்தை அபிநயம் பிடித்த காட்சி கண் நிறைந்ததாக இருந்தது!

"ஆமாம் ஆமாம்! டூரி டூரி! இதோ பார் உனக்கு!" என்று குழந்தைக்கென வாங்கிவந்த "பிஸ்கெட்" பொட்டலத்தை அதன் கையில் தந்தான்.

கோமளத்திற்கு ஒரே கொண்டாட்டம்!

"பிஸ்கெட்" பொட்டலத்தை ஒரே "லாவாக" லாவிக்கொண்டு குதித்தோடியது அக்குழவி!


"யாருக்கும் டொரியான் வேண்டுமானால் சாப்பிடலாமாம்!" என்று ஏக வசனத்தில் சொல்லியவாறு பிட்டு வைத்திருந்த டொரியான் பழத்தை "ஒரு கை" பார்த்தான் மணி!

மாலினி மெள்ள அடி மேல் அடி வைத்து அவன் அறையினுள் நுழைந்தாள். கையில் அன்றைய ஆங்கில தினசரி காட்சி தந்தது. அவனருகில் நெருங்கிய அவள் விம்மினாள்; விசும்பல் ஒலி எல்லை மீறியது.

தோளில் விழுந்து சூடேற்றிய அவளது கண்ணீர் முத்துக்கள் அவனைக் கதிகலங்க வைத்தன. நிமிர்ந்து அவளைப் பார்த்தான். அவனுக்குச் சொல்லொணா வேதனை பிறிட்டது. இதுகாறும் சும்மா தமாஷுக்காக ஊடல் நடத்துகிறாள் அவள் என்றுதான் எண்ணினான். அதனால்தான் அவளை இத்தனை கேலியும் கிண்டலும் செய்தான். ஆனால் அவள் உண்மையாகவல்லவா துயரமடைந்திருக்கிறாள்.

காரணத்தை அறிய அவன் உள்ளம் துடித்தது. செவ்விதழ்களில் பனித்திருந்த நீர்த் திவலைகளைத் தனது கைக் குட்டையால் துடைத்தவாறு, "மாலினி, நிஜமாய்ச் சொல்லுறேன் நீ இவ்வளவு நேரமாய்ச்

பாசம்



"அம்மா, டேவா" இருக்கட்டும் எத்தனை நேரத்திற்கென்று பார்ப்போம்! வாம்மா நாம இந்த டொரியான் பழங்களை உடைத்துச் சாப்பிடுவோம்!" என்று மாலினியின் செவியில் விழும்படி ஆங்கிலத்தில் சொல்லிவிட்டு மள மளவென்று தனது அறையினுள் நுழைந்தான். குழந்தையும் அவனைத் தொடர்ந்தது.

உடையை மாற்றிக் கொண்ட மணி குழந்தை கோமளத்தை அருகில் அமர்த்தியவாறு, தான் வாங்கி வந்த டொரியான் பழங்களைப் பிட்டு வைத்தான். அவற்றி

சும்மா விளையாட்டுக்குத்தான் என்னோடு பரிகாசம் புரிகிறாய் என்று நினைச்சிருந்தேன். ஆனால் இப்ப உண்மையாகவே நீ படுகிற மனக் கஷ்டத்தைப் பார்த்தா, ஏதோ நடந்திருக்குன்னுத் தோணுது! ஒண்ணையும் ஒளிக்காமல் என்கிட்டே சொல்லு மாலினி"பரிவாய்க் கேட்டான் மணி.

மீண்டும் விசும்பிய அவள் அவனது பரந்த மார்பில் முகம் புதைத்தாள்".

"மாலினி, இனி என்னாலே பொறுக்கவே முடியாது! இனி நீ சொல்லலேன்னா நானும் உன்னோடச் சேர்ந்து அழுதுடுவேன்!'' அவளது கருங் கூந்தலைக் கோதியவாறு சின்னக் குழந்தையைப் போன்று கூறினான் மணி!

அவளது மலர்க்கரங்கள் அவன் வாயைப் பொத்தின.

"இந்த இரண்டரை வருசமா இல்லாத துயரம் இப்ப எப்படி மாலினி உன்னைப் பிடிச்சுது?"—அவளது கருவண்டையொத்த விழிகளை உறுத்துப் பார்த்துக் கேட்டான் மணி.



மு. அப்துல் லத்தீப்

அத்தான், உங்களை ரொம்பச் சோதிச்சிட்டேன்? இன்னைக்குச் சிங்கப்பூரிலே இருந்து வெளியாகிற இந்தப் பத்திரிகையைப் பார்த்தீங்களா? கரத்தில் மடித்து வைத்திருந்த அந்த ஏட்டை அவனிடம் நீட்டினாள்.

"பார்த்தேன் மாலினி. இப்ப எங்க பார்த்தாலும் "எலக்ஷன்" பேச்சா இருக்கிறதனாலே அந்த விஷயங்களைத்தான் பார்த்தேன். வேற விஷயங்களை ஊன்றிப் பார்க்கல்லே மாலினி! என்ன மாலினி போட்டிருக்கு? கொஞ்சம் விவரமாச் சொல்லேன்!

ஒரே மூச்சில் பொரிந்து தள்ளிய மணி சிறிது நிறுத்தினான்.


"இந்த ஐந்தாம் பக்கத்தைப் பாருங்க அத்தான். இதிலேதான் நம்ம வாழ்க்கையோடு சம்பந்தப்பட்ட அந்தச் செய்தி போட்டிருக்கு!" சேலை முந்தானையால் தனது கண்ணைத் துடைத்துக் கொண்டே கூறினாள் மாலினி.

அந்த ஏட்டைப் பிரித்த மணியின் விழிகள் ஐந்தாம் பக்கத்தை ஊடுருவின.

அதனை மீண்டும் மடித்து வைத்த மணியின் இதழோரத்தில் புன்னகைக் கீற்றொன்று மின்னி மறைந்தது.

"எல்லாம் என் நண்பன் சுவீகியுனுடைய திருப்பணிதான் இது!" என்றான் மணி.

"யார் அத்தான் அந்தச் சுவீகீ? என்ன அத்தான் அத் திருப்பணி?" என்றாள் மாலினி இப்பொழுது அவள் சிறிது உற்சாகத்துடன் காணப்பட்டாள்.



"அவன் எனது பள்ளித் தோழன். அவனுக்குப் பத்திரிகைத் துறையிலே நாட்டம் சென்றதாலே இந்தப் பத்திரிகையின் துணையாசிரியர்களில் ஒருவனாய்த் திகழ்கிறான். என்னை நீ வலை விசியதினாலே இந்தப் பள்ளியாசிரியனாகவே காலமெல்லாம் கழிக்க நேர்ந்தது!

"க்கும்! போங்க!" சென்ற மகிழ்ச்சி இப்போதுதான் திரும்பியது; அவளது அதரங்களில் செம்மை படர்ந்தது!

"என்ன போங்க? உண்மையைத்தானே சொன்னேன்!"

"ஆமாம்! ரொம்ப உண்மைதான்! நீங்க மேலே தொடருங்கள்." - முத்துப் பற்கள் தெரிய சிரித்தாள்.

"நீண்ட நாளைக்குப் பிறகு அவனை விருந்தொன்றில் சந்தித்தேன். எத்தனையோ விஷயங்களைப் பற்றி அளவளாவினோம். இறுதியில் நமது காதல் நாடகத்தைப் பற்றியும் சொல்லி வைத்தேன். அதை அவன் பத்திரிகையில் செய்தியாய்ப் பிரசுரித்ததால் வந்த வினைதான் இது!" மணி விளக்கினான்

"வினையா இது? நல்லா சொன்னீர்கள் ஒரு வார்த்தை போனாலும் போகிறதென்று? எங்கம்மாவின் கல் மனம் கரைந்ததே! எங்கப்பாவின் இரும்பு மனம் இளகிற்றே?" சுடச் சுட பதிலிறுத்தாள் மாலினி.

அழகாய்த் தமிழ் பேசக் கற்றுக் கொண்டாயே; அப்ப நான் உனக்கு வைத்த தமிழ்ப் பெயரைக் காப்பாற்றி விட்டாய் என்று சொல்லு!" அவளை நெருங்கினான் அவன்.

அவள் இதழடைத்துக்கொண்டாள்.

"சும்மா விடுங்களேன்! குழந்தை ஓடிவாரான்!" அவளை நாணம் பிய்த்துத் தின்றது.

அவனை மகிழ்ச்சி கொள்ளை கொண்டது.

குழந்தை கோமளம் ஓடோடி வந்து அவ்விருவரின் மகிழ்ச்சியையும் இமயமென உயர்த்திற்று!

"எல்லாம் ரெடியாயிட்டுதா" மணி பிரயாண பேக்கைக் கையில் பிடித்தவாறு கேட்டான்.

ஆரஞ்சு நிற நைலான் புடவையும் இரத்தச் சிவப்புச் சோளியும் தரித்திருந்த மாலினி அசல் தமிழ்ப் பெண் போலவே தோற்றம் தந்தாள்.

"அப்பா, நா முன்னாலே ஏறுவேன்!" என்ற மழலைச் சொல்லை உதிர்த்தவண்ணம் குழந்தை கோமளம் திறந்திருந்த காரின் முன் ஸீட்டில் ஏறி அமர்ந்துகொண்டது.

"ஓ ரெடி!" இதழ்கள் உதிர்த்த சொற்களுடன் அன்ன நடை நடந்து வந்தாள் மாலினி.

"அப்பா, எத்தனை அழகு!" உள்ளூர மகிழ்ந்தான் மணி. அவளும் அவனும் காரில் ஏறினர்.

கார் புழுதி மண்ணைக் கிளப்பாமலே பாரிட் புந்தாரை விட்டுச் சிங்கையை நோக்கிப் பறக்கத் தொடங்கிற்று.

"அந்தக் 'கட்டிங்ஸை'க் கொடு இப்படி" மணி கேட்டான்.

கத்தரித்து வைத்திருந்த அந்த ஏட்டின் செய்தியை அவனிடம் நீட்டினாள் மாலினி.

அவன் அச்செய்தியின் மீது விழி பதித்தான். அதில் "நேற்று இப்பகுதியில் பிரசுரமாகியிருந்த மணி என்ற ஆங்கிலப் பள்ளி ஆசிரியரின் வாழ்க்கைச் செய்தி சிங்கையில் வாழும் ஒரு குடும்பத்தைப் பரபரப்பிலாழ்த்திற்று. மணியினுடைய சீனத் துணைவியின் பெற்றோர் மிகவும் மனங்கலங்கினர். நடந்தவற்றை மறந்து மீண்டும் தனது துணைவருடன் தங்களை வந்து ஒருமுறை கண்டு போகுமாறு நமது நிருபரிடம் கூறினர்.

மணி சிங்கைப் பள்ளியொன்றில் ஆங்கில ஆசிரியராகப் பணி புரியும் போது மாணவியாக இருந்த தற்போதைய அவரது துணைவியார் அவர் மீது காதல் கொண்டாராம். இனப் பாகுபாட்டால் அப்பெண்ணின் சீனப் பெற்றோர் காதலுக்குக் குறுக்கே நின்றனராம். ஒருநாள் நேரங்கழித்து வீட்டிற்கு வந்த அப்பெண்ணை அவரது தாயார் கடிந்து கொண்டாராம், அதன் விளைவு அப்பெண் வீட்டைவிட்டு வெளியேறினாளாம். கடந்த இரண்டரை வருடங்களாய் அவர்களைப் பற்றி யாதொன்றும் தெரியாதிருந்த அவர்களுக்கு நேற்று நமது பத்திரிகையில் பிரசுரமாகியிருந்த செய்தி பேருதவி புரிந்ததாம்.

மேலும் அப்பெண்ணின் தந்தை கண்ணீருக்கிடையே இப்படிக் கூறினார்: "அவள் செய்தவை அனைத்தையும் மறந்து அவளை மன்னிப்போம். இழந்த அந்தச் செல்வம் தான் எங்களுக்கு இப்போது வேண்டுவதெல்லாம்."

பிரிந்தவர் கூடினால் பிறந்திடும் தனி மகிழ்ச்சியல்லவா...

செய்தியைப் படித்த மணி, மாலினியின் முகத்தை ஏறிட்டுப் பார்த்தான். அவள் எதனையோ கூற வாயெடுத்தாள். அதற்குள் அவனே சொன்னான்: "இந்தப் புத்தி முன்பே அல்லவா வந்திருக்க வேண்டும்! இந்தப் பெற்றோர்களே இப்படித் தான்! ஏதோ தாங்கள் பெரிய காரியத்தைச் செய்வதைப் போன்று மனப்பால் குடிப்பார்கள். தம்மை விட்டுப் பிரிந்த மக்களை நினைந்து பின்னர் வதைபடுவார்கள். இது தான் வழக்கம்."

"என்னவோ அத்தான், என் நடையுடை பாவனையனைத்தும் மாறின. சீனத்தியான நான் தங்களால் தமிழச்சியாகவும் தோற்றம் தருகிறேன்! என்றாலும் என் உள்ளம் மட்டும் எனது பெற்றோரை மறக்கவில்லை!"

மாலினி இவ்வாறு கூறி முடிப்பதற்கும் அந்தக் கார் சிங்கையில் அவளது பெற்றோர் வசித்த வீதியை அடைவதற்கும் சரியாக இருந்தது. அந்த வீடு அல்லோலகல்லோலப் பட்டுக் கொண்டிருந்தது. ஒரு திருமண வீட்டைப் போலவே சகல சம்பத்தோடும் திகழ்ந்தது. மங்கள வாழ்த்தென்ன, ஆரத்தியென்ன... அப்பப்பா, ஒரே குதூகல வரவேற்பு.

மாலினியைத் தமிழர் உடையில் கண்ட அவள் பெற்றோர் சிறிது மலைத்துப் போயினர். எனினும் அவளது அந்த முகத்தைப் பார்த்ததும் ஆவல் ததும்ப அவளை வரவேற்றனர். அவளது பால்ய சிநேகிதிகளெல்லாம் அவளைச் சூழ்ந்து கொண்டு "திக்குமுக்"காடச் செய்தனர்.

மணிக்கு ஒரே சங்கோஜம். பின்னர் இருக்காதா, என்ன? இத்தனை பெரிய சீனர் கூட்டத்தில் தனித்த தமிழனொருவன் அகப்பட்டுக் கொண்டால்...

ஒருவாறு சம்பிரதாயமெல்லாம் முடிவுற்றதும் தனது அன்புக் கணவன் மணியைத் தனது பெற்றோர்க்கு முதலில் அறிமுகம் செய்வித்தாள். கரங்குவித்த மணிக்கு மாமனாரும் மாமியாரும் அதே போன்று கரங்குவித்த காட்சி அவளது உள்ளத்தில் நிலைத்து நின்றது. பின்னர் குழந்தை கோமளத்தை அறிமுகப் படுத்தினாள். அப்பப்பா, அந்தக் குழந்தையைத்தான் பாட்டனாரும் பாட்டியாரும் எப்படியெல்லாம் கொஞ்சினர்!

இறுதியில் விடைபெறும் பொழுது, மணவீட்டிலிருந்து பிரியும் புதுப் பெண்ணின் நிலைதான் மாலினிக்கு ஏற்பட்டதென்பதைச் சொல்ல வேண்டுவதில்லை.

"அம்மா, எங்களை அடிக்கடி வந்து பார்த்துப் போம்மா!"- மாலினியின் தாயார் இப்படிச் சீனத்தில் சொல்லும்போது ஏனோ அவள் கண் கலங்கிவிட்டது.

"என்னமோம்மா, அந்திம காலத்திலே என்னத்தை அள்ளிக் கட்டிக் கொண்டு போகப் போகிறோம்? எங்களை மறந்திடாதே! கோமளத்தை மூன்று மாதத்துக்கு ஒரு முறையாவது எங்கக் கண்ணிலே கொண்டு வந்து காட்டிவிட்டுப் போ!"-மாலினியின் தந்தை இதனைக் கூறும்போது துக்கம் அவரது தொண்டையை அடைத்துக் கொள்ளத்தான் செய்தது!

"மாப்பிள்ளை, நாங்கள் செய்ததையெல்லாம் மறந்திடுங்க! இனி நீங்க எப்பவுமே எங்க வீட்டு மாப்பிள்ளைதான்! மாலினியை அனுப்புவதோடு நின்று விடாதீர்கள். நீங்களும் அடிக்கடி வந்துபோகணும்!"- மணியின் முகத்தைக் கூர்ந்து பார்த்தவாறு மலாய் மொழியில் மீண்டும் இவ்வாறு மொழிந்தார் மாலினியின் தந்தை.

"ஆகட்டும் மாமா! வருகிறோம்!" என்று விடைபெற்றுக் கொண்டான் மணி.

பெற்றோரிடம் விடை பெற்றுக் கொண்ட மாலினியும் குழந்தை கோமளமும் அவனைப் பின் தொடர்ந்தனர். வீட்டு வாசலில் நின்ற அச்சீனக் குடும்பத்தினர் அக்காட்சியை இமைகொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தனர்.

வசூல்



இரா. ஆறுமுகம். ஈப்போ

ஒரு கோவில் கட்டட நிதிக்கு வசூலிக்க அக்கோவிலின் தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகிய மூவரும் சென்றனர். கணிசமான வசூலும் கிடைத்தது. அந்த வசூலில் தாங்கள் எவ்வளவு எடுத்துக்கொள்வது என்பதைப் பற்றி மூவரும் யோசித்தனர். செயலாளர் சொன்னார்:-

"தரையில் ஒரு கோட்டைக் கிழித்துவிட்டு எல்லாப் பணத்தையும் மேலே வீசவேண்டும். கோட்டின் இடப்பக்கம் விழும் பணம் எனக்கு! வலப்பக்கம் விழும் பணம் கோவிலுக்கு"

பொருளாளர் வேறொரு யோசனை சொன்னார்." ஒரு வட்டத்தைப் போடுவோம். வட்டத்திற்குள்ளே விழும் பணத்தை நான் எடுத்துக்கொள்கிறேன். வட்டத்திற்கு வெளியே விழும் பணத்தை கோவிலுக்கு ஒதுக்கலாம்"

தலைவர் இறுதியாகத் தனது யோசனையைத் தெரிவித்தார். "நான் பணத்தையெல்லாம் மேலே வீசுகிறேன். தெய்வம் பிடித்துக் கொள்வதெல்லாம் கோவிலைச் சேரட்டும். கீழே விழுவதெல்லாம் என்னைச் சேரட்டும். என்ன, சரிதானே?

தலைவரின் யோசனையைக் கேட்டு இருவரும் "என்ன இருந்தாலும் தலைவர் தலைவர்தான்" என்று நினைத்துக்கொண்டனர்.

இசை நாடகம்

பி. யூ. சின்னப்பா, எம். கே. தியாகராஜ பாகவதர் முதலியோர் அந்தக் காலத்தில் மேடைகளில் சொந்தக் குரலில் பாடி நடித்ததாக நாம் கேள்விப்பட்டிருக்கிறோம் அல்லவா? அவர்களைப் போலவே இன்று சொந்தக் குரலில் பாடி நடித்து ரசிகர்களைப் பரவசமூட்டும் பிரபல நாடக நடிகர் உடையப்பா தமது குழுவோடு தமிழகத்திலிருந்து மலேசியாவுக்கு வருகை தரவுள்ளார்.

அண்மையில் மனோகர் நாடகக் குழுவை ஏற்பாடு செய்து நம்மை மகிழ்வித்த ராஜலிங்கம் புரொடக்ஷன்சார் அதற்குப் பிறகு உடையப்பா நாடகக் குழுவினரை அழைக்கின்றனர்.

உடையப்பாவின் நாடகங்கள் முதன்முதலில் கோலாலம்பூர் சின்லூ அரங்கில் செப்டம்பர் 18-ஆம் தேதி முதல் 22-ஆம் தேதி வரை நடைபெறும்.

அபிப்பிராயம்

புதிய சமுதாயம் இது வரை 10 இதழ்கள் வெளி வந்துள்ளன. அந்தப் பத்து இதழ்களைப் பற்றிய, சமுதாயத்தின் பல்வேறு தரப் பட்ட பிரிவினரின் கருத்துக் களைத் தெரிந்துகொள்ள விரும்பினோம்.

மலாயாப் பல்கலைக்கழக விரிவுரையாளர் திருமதி லோகநாயகி சிவசுப்பிரமணியம், தமிழ் நேசன் பவுன் பரிசு நீதிபதிகளில் ஒருவராக இருந்த டாக்டர் பிரமீளா கணேசன், மலேசிய வானொலியைச் சேர்ந்தவரும், திறனாய்வாளருமான திரு. வி. பூபாலன், பழம் பெரும் எழுத்தாளர்களில் ஒருவரும் மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் முன்னாள் பொருளாளருமான திரு. எஸ். வி. சுப்பிரமணியம், சிறந்த நடிகரும், பழைய எழுத்தாளருமான மேஜர் வி. ஐ. ஜோசப் ஆகிய ஐவரும் புதிய சமுதாயத்தின் 10 இதழ்களையும் பல கோணங்களிலிருந்து ஆய்ந்து, அவற்றின் குறை நிறைகளை மனந்திறந்து கூறியுள்ளனர். அவர்களின் கருத்துக்களைக் கீழே தொகுத்தளித்துள்ளோம்.

திருமதி லோகநாயகி

"இந்த ஆண்டு மார்ச்சு திங்கள் முதல் இதுவரை புதிய சமுதாயம் 10 இதழ்கள் வெற்றிகரமாக வெளி வந்துள்ளன. இந்தப் பத்து இதழ்களின் குறைநிறைகளைக் காய்தல் உவத்தலின்றி நடுநிலையோடு நாம் ஆய்வுசெய்யலாம். அவற்றிலே வெளியிடப்பட்டிருக்கும் செய்திகள், கதைகள், கட்டுரைகள் ஆகியவை முதலான அம்சங்களைத் தனித்தனியாக எடுத்துக்கொண்டு அவற்றின் குறைகளையும் கூறலாம்.

அப்படி நாம் எண்ணி, "புதிய சமுதாயத்"தின் குறிக்கோள் என்ன என்பதைப் பார்ப்போமானால் ஒரு புதிய சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்று கருதி, பல கோணங்களிலிருந்து கட்டுரைகளையும் கவிதை, கதைகளையும் வெளியிட்டு வருகின்றார்கள்.

இந்த மலேசிய நாட்டில் தமிழ்ப் பத்திரிகை உலகிலே வார, மாத இதழ்களின் பற்றாக்குறையை நிறைவு செய்வதற்குப் "புதிய சமுதாயம்" தோன்றியிருக்கிறது."

டாக்டர் பிரமீளா கணேசன்

"ஒருமாதத்திற்கு இரண்டுமுறை இப்படியொரு தமிழ்ப் பத்திரிகை வெளிவருவது நமது சமுதாயத்திற்குப் பெருமை என்று நான் நினைக்கிறேன். இதே பத்திரிகை என்னைப் பொறுத்தவரை வாரம் ஒருமுறை வரவேண்டும் என்று விரும்புகிறேன். அத்தோடு பக்கங்களையும் கூட்ட வேண்டும் என்பதும் எனது விருப்பம்.

பத்திரிகையின் தரம், ஆரம்ப நிலையிலேயே நன்றாக இருக்கிறது. தமிழகத்தில் வெளிவரும் பத்திரிகைகளோடு ஒப்பிட்டுப் பார்க்காமல் மலேசிய ரீதியில் பார்த்தால் இந்தப் பத்திரிகையின் தரம் மிகச் சிறப்பாக இருக்கிறது. தமிழகப் பத்திரிகைகளோடு நாம் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டிய அவசியமும் இல்லை. அது முற்றிலும் வேறு பிரச்சனை.

தலையங்கம்

தலையங்கங்களை எடுத்துக் கொண்டால் தமிழர்களுடைய பிரச்சனைகளை உதாரணமாக, அரசியலிலிருந்து நமது சமுதாயத்தில் உள்ள குறைகளைப் பலவாறாக அலசி ஆராய்ந்து எழுதப்பட்டுள்ளன. இருந்தாலும் கூட நமது சமுதாயத்தில் மலிந்து கிடக்கிற பிரச்சனைகளை இன்னும் தீவிரமாக எழுதவேண்டும்.

பல பத்திரிகைகளில் தலையங்கங்களில் சில விஷயங்களை விட்டு விடுகிறார்கள். இதை நான் ஆணித்தரமாக இங்குச் சொல்ல விரும்புகிறேன்.

நமது கையில் ஒரு புண் இருந்தால் மருந்து போடுகிறோம். வெட்டிக் குணப்படுத்த வேண்டியிருந்தால் அதையும் டாக்டர்கள் செய்கிறார்கள். வெட்டக் கூடாது என்று டாக்டர்கள் விட்டுவிட்டால் கை அழுகிப் பிறகு கையையே எடுக்க வேண்டி வரும். அதைப் போல் நமது சமுதாயத்தில் காணப்படும் குறைகள் களையப்பட வேண்டுமானால் தலையங்கங்கள் பாரபட்சமற்ற முறையில் ஆணித்தரமாக எழுதப்பட வேண்டும். அந்த வகையிலே அரசியலைப் பற்றிச் சில தலையங்கங்கள் வருகின்றன. சமூகத்தின் மற்றத் துறைகளைப் பற்றியும் அவ்வாறு புதிய சமுதாயத்தில் தலையங்கங்கள் வரவேண்டும்."

மேஜர் வி. ஐ. ஜோசப்

"டாக்டர் பிரமீளா கணேசன் சொன்னதை நான் ஆதரிக்கிறேன். எந்தப்பத்திரிகைகளிலுமே பத்திரிகா தர்மம் என்பது ஒரு சாராரைச் சேர்ந்ததாகவும் ஒரு பக்கமாவும் இருக்கக் கூடாது எனக் கேள்விப் பட்டிருக்கிறோம். அதனைப் புதிய சமுதாயம் நல்ல முறையில் பின்பற்றி வருகிறது. உதாரணமாகச் சமீபத்தில் கடந்த ம.இ.கா. தேசியத் தலைவர் தேர்தலின் போதும் துணைத் தலைவர் தேர்தலில் வேட்பாளர்களின் கருத்துக்களை வெளியிட்ட போதும் பாகுபாடில்லாமல் நடுநிலையாகத் தலையங்கமும் செய்திகளும் எழுதப்பட்டிருந்தன.

நம்முடைய பிரச்சனைகளில் முக்கியமான பிரச்சனை கல்விப் பிரச்சனை. அதைப் பற்றிய தலையங்கம் புதிய சமுதாயத்தில் இன்னும் அதிகம் வெளிவரவேண்டும். பத்திரிகைகளில் வரும் செய்திகளைப் படித்து விட்டுத்தான் அரசியல்வாதிகளும் அரசாங்க அதிகாரிகளும் பெரும்பாலும் மக்களின் கருத்துக்களைத் தெரிந்து கொள்கிறார்கள். ஆகவே, பத்திரிகைகளில் நாம் பிரச்சனைகளை எழுதாவிட்டால் தாங்கள் சம்பந்தப்பட்ட துறைகளில் மக்கள் திருப்தி அடைந்திருப்பதாக அவர்கள் கருத இடமுண்டு.

அதனால் நமது மனக்குறைகளை பத்திரிகைகள்தாம் வெளியிட வேண்டும். பத்திரிகைகளுக்கு இந்த உரிமையை அரசாங்கமும் கொடுத்திருக்கிறது. ஆகவே கல்விப் பிரச்சனையை அழுத்தமாகவும், விரிவாகவும் தலையங்கத்தில் எழுதவேண்டும் என்பது என் அபிப்பிராயம்."

வி. பூபாலன்

"மலேசியாவைப்பொறுத்தவரையில் தமிழ் நூல் வெளியீடும்சரி, பத்திரிகை வெளியீடும்சரி, பொதுவாக வேதனை தரும் நிகழ்ச்சியாகவே இருந்து வந்திருக்கிறது. இது நமது கடந்தகால அனுபவம். கடந்த காலத்தில் பல பத்திரிகைகள் வெளியாகின. ஆனால் அவற்றில் எத்தனைப் பத்திரிகைகள் நமது அபிமானத்தைப் பெற்று வெற்றிகரமாக ஓடியுள்ளன என்று கேட்டால்

பதில் ஏமாற்றமாகத்தான் இருக்கும். ஒருவேளை அவை தரத்தில் குறைந்தனவா, வாசகர்களின் மனோநிலையைக் கவரத் தவறிவிட்டனவா என்ற கேள்விகூட எழும்.

இந்தச் சூழ்நிலையில் புதிய சமுதாயம் வெளியாகி இருப்பது நமக்கு ஒரு நம்பிக்கையை ஊட்டுகிறது. காரணம் இதன் ஆசிரியர் திரு. முருகு சுப்பிரமணியன் பத்திரிகைத் துறையில் பிரபலம் பெற்ற ஒருவர். கடந்த காலத்தில் 'பொன்னி' பத்திரிகை நடத்தி இன்றைய புகழ் பெற்ற எழுத்தாளர்கள் பலரை உருவாக்கிய ஒரு மேதை என்னும் முறையில் அவர் வெளியிடும் இப் பத்திரிகை ஆஞ்ஞாட்டுத் தமிழ்ப் பத்திரிகை உலகில் ஒரு புதிய ஒளியையும் நம்பிக்கையையும் கொடுக்கும் என்று வாசகர்கள் நம்புகின்றனர்.

முதலில் மாதம் இரு முறையாக வெளியிட்டாலும் காலப்போக்கில் வாரம் ஒரு முறை வெளியிடப் போவதாக ஆசிரியர் முதல் இதழிலேயே குறிப்பிட்டிருப்பது நிச்சயமாக நல்ல வரவேற்பை ஏற்படுத்தித் தரும் என்று கருதுகிறேன்.

கடந்த காலங்களில் திரு முருகு, தமிழ்நேசனில் பணியாற்றியபோது அவர் எழுதிய தலையங்கங்கள் இந்தியச் சமுதாயத்தின் மத்தியில் புத்துணர்ச்சியையும் விழிப்புணர்ச்சியையும் ஏற்படுத்தியதை நாம் மறந்துவிட முடியாது. அவர் அப்போது எழுதிய தலையங்கங்களின் பல வரிகள் இன்னமும் கூட என் காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கின்றன. 'தன்முயற்சி இல்லாத சமூகத்தைக் கடவுளால்கூடக் காப்பாற்ற முடியாது' என்று அவர் எழுதியிருந்த வரிகள் சமுதாயத்தின் பால் அவருக்கு இருக்கும் சமுதாய உணர்ச்சி, பிடிப்பு, ஆழம், பற்று ஆகியவற்றைப் பிரதிபலிக்கின்றன. அதேபோல் கடந்த இதழ்களில் அவர் எழுதியுள்ள தலையங்கங்கள் இத்தகைய உணர்வுகளைப் புலப்படுத்துகின்றன; எதிர்காலத்திலும் புலப்படுத்தும் என்று கருதுகிறேன்.

எஸ். வி. சுப்பிரமணியம்

"வெறும் நம்பிக்கையுடன் மட்டும் ஒரு பத்திரிகை மலேசியாவில் வெளிவருவதால் எவ்விதப் பயனும் இல்லை. ஆரம்பத்தில் இரண்டு மூன்று ஆண்டுகளுக்குத் தொடர்ந்து வரும் பத்திரிகைகள் பிறகு தொடராமல் நின்று போகும் சூழ்நிலை வந்துவிடுகிறது. அதற்குக் காரணம் வாசகர்களின் ஆதரவு தொடர்ந்து இல்லாமல் போவதுதான்.

வாசகர்கள் வேண்டும்

நம்பிக்கையோடு ஆரம்பித்தது ஒருபுறமிருக்க புதிய சமுதாயத்தின் நீடித்த வளர்ச்சிக்கு அதன் ஒவ்வொரு வாசகரும் தோட்டங்கள், நகரங்கள்தோறும் சென்று ஒவ்வொரு தமிழரையும் புதிய சமுதாயம் இதழை வாங்கும்படித் தூண்ட வேண்டும்.

இந்த நாட்டில் எழுத்தாளர்கள் பலர் துவக்கிய பத்திரிகைகள் ஓரிரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு மறைந்துவிட்டன. மிகச் சில தொடர்ந்து வெளிவராமல் சில மாதங்களுக்கு ஒன்றாக வெளிவருகின்றன.

அவ்வாறு அல்லாமல், பத்திரிகைத் துறையில் நல்ல அனுபவம் பெற்ற திரு. முருகு ஆரம்பித்திருக்கும் இப்பத்திரிகை, தொடர்ந்து வெளிவந்து வெற்றிபெறும் என்று நம்புகிறேன். பத்திரிகை நீடிக்க முதலில் வியாபார நோக்கம் வேண்டும். பிறகுதான் லட்சியம், அரசியல், இலக்கியம் போன்ற நோக்கங்கள் இருக்கவேண்டும் என்பது எனது கருத்து. பத்திரிகை எப்படி நடத்த வேண்டும் என்று நான் முருகு அவர்களுக்குச் சொல்லவேண்டும் என்பதில்லை. தமிழ் நேசனை இந்த அளவுக்கு வளர்த்தவர் அவர்-சிங்கப்பூரிலும் தமிழகத்திலும் பத்திரிகைத் துறையை வளர்த்தவர். ஆகவே புதிய சமுதாயம் தொடர்ந்து வெளிவர வியாபார ரீதியாகவும், லட்சிய ரீதியாகவும் அவர் முனைவார் என நம்புகிறேன்.

வாரம் ஒருமுறை வரவேண்டும் என்பதைவிட இப்பொழுதுள்ளதைப் போலவே மாதமிருமுறை வந்தாலே போதும். இன்னும் சொல்லப் போனால் மாதம் ஒரு முறை வந்தால்கூடப் போதும் என்று கருதுகிறேன். எப்படி வந்தாலும் புதிய சமுதாயம் நிரந்தரமாக வெளிவரவேண்டும் என்பதுதான் எனது விருப்பம்."

திருமதி லோகநாயகி

"இதுவரை பத்திரிகையைப் பற்றிப் பொதுவாகக் கருத்துரைத்தீர்கள். பெரும்பாலும் தலையங்கங்கள் அரசியலைப் பற்றி இருப்பதாகக் கூறினீர்கள். ஆசிரியர், தன் ஆழ்ந்த அனுபவத்தின் வாயிலாகபிறநாட்டுப் பிரச்சனைகளைப் பற்றியும் எழுதி வருவது குறிப்பிடத்தக்கது. அவற்றோடு நம் நாட்டிலே காலத்திற்குக் காலம் ஏற்படும் பிரச்சனைகளை எடுத்துக் கூறினால் நல்லது. இனி மற்றப் பகுதியைப் பற்றிப் பேசலாம். படைப்பிலக்கியம் என்னும் வகையிலே கதை, கவிதைகளைப் பற்றிப் பேசலாமே!"



வலமிருந்து: ஐம்பேராயத்திற்குத் தலைமைவகித்த திருமதி லோகநாயகி சிவசுப்பிரமணியம், திரு. எஸ். வி. சுப்பிரமணியம், திரு. வி. பூபாலன், ஆசிரியர் திரு. முருகு சுப்பிரமணியம், மேஜர் வி. ஐ. ஜோசப், டாக்டர் பிரமீளா கணேசன்.

டாக்டர்

"எந்த வெளியீடும் வேதனைக்குரியதாக அமைந்திருக்கிறது என்றுர் திரு. பூபாலன். பத்திரிகை நடத்தி நொடித்துப் போகக்கூடாது என்று திரு. எஸ். வி. சுப்பிரமணியம் கூறினுர்.

எழுத்தாளர் சங்கம், முத்தமிழ்ப் படிப்பகம் போன்ற படிப்போடு-இலக்கியத்தோடு சம்பந்தப்பட்ட இயக்கங்கள் புதிய சமுதாயம் பற்றிப் பிரச்சாரம் செய்து விற்பனையைப் பெருக்குவதைக் கடமையாகக் கொள்ள வேண்டும்.

கதைகளைப் பற்றிச் சொல்ல வேண்டுமானுல் திரு. எம். ஏ. இளஞ்செல்வன் எழுதிய 'டுக்காச் சித்தா' போன்று நல்ல கதைகள் வருகின்றன. கனவுகள் பலகோடி என்னும் தொடர் கதையை 'மாங்கனி' மிக நன்முக எழுதி வருகிறுர்.

இன்னும் ஓரிரண்டு கதைகளையும், கவிதைகளையும் வெளியிடலாம் என்பது எனது கருத்து. எழுத்தாளர்களுக்கு உற்சாகமளிக்க பரிசு கொடுக்க வேண்டும். கொடுக்க முடிந்த பத்திரிகைகள் மறந்த இந்த விஷயத்தைப் புதிதாக விறுநடைபோடும் புதிய சமுதாயம் ஆரம்பிக்க வேண்டும். ஆண்டுக்கு, 24 நபர்களில் நான் வேண்டுமானுல் பத்துப் பேர் பட்டியல் தருகிறேன். அவர்களிடம் பணமும் வாங்கித் தருகிறேன். எங்கள் பெயர் வரவேண்டாம். புதிய சமுதாயமே அதை வழங்கட்டும். தமிழ் வளர்ச்சிக்கு நாங்கள் செய்யும் கடமையாக அது இருக்கட்டும்."

மேஜர் ஜோசப்

"இந்தப் பத்து இதழ்களிலிருந்து பார்க்கும்போது இளம் எழுத்தாளர்களுக்கு இவற்றில் இடம் கொடுக்கப்பட்டுள்ளது.

கூடியமட்டும் புதிய எழுத்தாளர்களின் படைப்புக்களைத் திருத்தி வெளியிடுகிறுர்கள். பெயர் பெற்ற எழுத்தாளர்களும் எழுதுகின்றுர்கள். சிறுவர்களுக்கு விளங்கக்கூடிய வகையில் 'பெயர் பதிப்பாய்' போன்ற கவிதைகள் உள்ளன. அந்தக் கவிதையைத் தமிழ்ப்பித்தன் எழுதியிருந்தார்.

அடுத்து என்னைக் கவர்ந்தது 'நையாண்டி மேளம்'. அந்தப் பகுதி சில சமயங்களில் மிகையாகத் தோன்றிடினும் சிந்திக்க வைக்கக் கூடியதாக இருக்கிறது. வைத்தியக் கட்டுரை தேவையான ஒன்று. இருதய நோய்கள் பற்றிய கட்டுரை மிக நன்முக இருக்கிறது.

இப்பொழுதெல்லாம் எதற்கெடுத்தாலும் டாக்டரிடம் ஓடிக்கொண்டிருக்கிறேம். (டாக்டர் பிரமீளா கணேசன் என்னை மன்னிக்க வேண்டும்) டாக்டரிடம் போவதற்குத் தேவைப்படும் முன்ஞல் சில வைத்தியக் குறிப்புக்கள் பயன்படும்.

'மலேசிய மொழியில்வெற்றிபெற' என்னும் கட்டுரை மாணவர்களுக்குப் பெரிதும் பயன்படக்கூடியது. முருகுவைக் கேளுங்கள்பகுதி எல்லாருக்கும் பிடித்தமான பகுதி. துணுக்குச் · செய்திகள், ராசிபலன் போன்றவையும் பிடித்தமானவை.

என்னுடைய ஆலோசனையைக் கூறவேண்டும் என்ருல் மாணவர்களுக்குத்தங்கள்எதிர்கால வாழ்க்கையைத் திட்டமிட்டுக்கொள்ளும் சில வழி முறைகளைக் கூறலாம். விளையாட்டுப் பகுதி, நமது மலேசிய இந்தியர்கள் வரலாறு, செயிண்ட் ஜான்ஸ், செம்பிறைச் சங்கம், பிரதேச ராணுவம் (டெரிடோரியல் ஆர்மி) போன்றவற்றில் நமது இளைஞர்கள் கலந்துகொள்ளத் தூண்டும் கட்டுரைகள் வரவேண்டும். இது இளைஞர்களைத் தீய பழக்கவழக்கங்களிலிருந்து தடுக்கும்."

பூபாலன்

"நிலக் குடியேற்றத் திட்டத்தில் பங்கேற்றிருப்பவர்களைப் பேட்டி கண்டு வெளியிடுவதும், அத்திட்டத்தில் ஈடுபடுமாறு நம்மவர்களை உற்சாகப்படுத்துவதும் புதிய சமுதாயம் என்னும் பெயருக்கேற்ப பொருத்தமாக இருக்கும்.

ஒரு பத்திரிகை வெற்றிகரமாக நடப்பதற்குக் கலையம்சங்கள் இடம் பெற வேண்டும் என்பது நமக்கு நாமே விதித்துக் கொண்ட விதியா என்பத் தெரியவில்லை. அதிலும் சினிமாப் பகுதியைப்பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. அதற்காகச் சினிமாவை அதிகம் போட வேண்டும் என்பதில்லை.

10ஆவது இதழ் சினிமா விளம்பரத்தைக் கடைசி அட்டையில் தாங்கி வந்திருப்பதைக் காணும் போது அது ஒரு சினிமா இதழ் மாதிரி தோற்றமளிக்கிறது. விளம்பரம் என்று பார்த்தாலும் இது இதழின் தரத்தைச் சிறிது குறைத்து விட்டதாகவே கருதுகிறேன்.

படைப்பிலக்கியம் என்று எடுத்துக்கொண்டால், அந்தக் காலத்தில் எழுதியவர்களை இப்போது எழுதச் செய்வது புதிய எழுத்தாளர்களுக்குப் பயன்படும்.

பழைய இலக்கியங்களை அறிஞர்களைக் கொண்டு எளிமையான முறையில் வெளியிட்டால் நல்லது. மருத்துவக் கட்டுரைகளை உள்நாட்டு மருத்துவர்களைக் கொண்டு எழுதச் செய்வது நல்லது. பத்திரிகையின் உயிர் நாடியான விளம்பரங்கள் கையெழுத்துக்களில் வருவதை விட அச்செழுத்துக்களில் அமைத்தால் மேலும் கவர்ச்சியாக இருக்கும்."

எஸ். வி. எஸ்.

"டாக்டர் பிரமீளா கணேசன் கூறியதுபோல் பணம் கொடுத்து எழுத்தாளர்களை எழுதத் தூண்டுவதில் எனக்கு உடன்பாடில்லை. பணத்துக்காக எழுதுவது எழுத்தாளர்கள் லட்சியமல்ல!"

டாக்டர்

"எழுத்தாளர்களை உற்சாகப்படுத்தத்தான் பரிசு வழங்கலாம் என்றேனே தவிர, அவர்கள் பணத்துக்குத்தான் எழுத வேண்டும் என்று நான் கூறவில்லை.

டாக்டர் இரா. தண்டாயுதம் எழுதும் 'இலக்கிய அரங்கம்' நல்ல பயனுள்ள அம்சம். இப்படிப் பல அம்சங்களை ஒரே இதழில் தர முடியாது. ஓரிரண்டு இதழ்களுக்கு இடையிடையே இத்தகைய அம்சங்களை வெளியிடலாம். அப்பொழுதுதான் ஒவ்வோர் இதழும் புதிய புதிய அம்சங்களைத் தாங்கி வருவதாக அமையும். மருத்துவக் கட்டுரைகள் கேள்வி-பதிலாக அமைந்தால் இன்னும் நல்லது."

திருமதி லோகநாயகி

"வாசகர்களின் பண்பைவளர்க்க வேண்டும் என்று கருதி, கதைகளைத் தேர்ந்தெடுப்பதாகத் தெரிகிறது. தமிழகத்துப் பத்திரிகைகளைப்போல வாசகர்களுக்கு உகந்ததாக இருக்க வேண்டும் என்பதற்காகக் கவர்ச்சிக் கதைகளைப் புதிய சமுதாயம் தேர்ந்தெடுக்காதது பாராட்டுக்குரியது. இது தொடர வேண்டும்.

புதிய எழுத்தாளர்களை அறிமுகப்படுத்தும்போது அவர்களைப் பற்றிக் குறிப்பும் இருக்கவேண்டும். இது எதிர்காலத்தில் ஆராய்ச்சியாளர்களுக்குப் பயன்படும்.

கதைகள், கவிதை, பண்டைய இலக்கியம் ஆகியவை பற்றிய திறனாய்வுக் கட்டுரைகள் வெளியிடுவது நல்லது. டாக்டர் கூறியது போல எல்லா அம்சங்களையும் தொடர்ச்சியாக வெளியிடாமல் ஓரிரு இதழ்களுக்கிடையில் அவ்வப்போது வெளியிட்டால்நல்லது என்று கருதுகிறேன்.

முடிவாக சமுதாயத்திற்குத் தேவைப்படும் நல்ல அம்சங்கள் எல்லாவற்றையும் வெளியிட்டுப் புதிய சமுதாயம் மென்மேலும் வளர்ச்சி கண்டு, நின்று நிலைபெற நமது வாழ்த்துக்கள்."

தொகுப்பு: மஞ்சரி

நன்மை

மனுஷர் உங்களுக்கு எப்படிச் செய்ய வேண்டுமென்று விரும்புகிறீர்களோ, அப்படியே நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்.

உங்களைச் சிநேகிக்கிறவர்களையே நீங்கள் சிநேகித்தால், உங்களுக்குப் பலன் என்ன? பாவிகளும் தங்களைச் சிநேகிக்கிறவர்களைச் சிநேகிக்கிறுர்களே.

உங்களுக்கு நன்மை செய்கிறவர்களுக்கே நீங்கள் நன்மை செய்தால் உங்களுக்குப் பலன் என்ன? பாவிகளும் அப்படிச் செய்கிறுர்களே.

லூக்கா 6: 31–33

கலையுலக வினா-விடை

பரிதாமணாளன்

எஸ். ராஜேஸ்வரன், நோர்த் ஹாமக் தோட்டம், கிள்ளான்

கே: எம். ஜி. ஆர். படங்களில் நடிப்பதை நிறுத்தி விட்டார், சிவாஜி கணேசன் படங்களில் நடிப்பதை எப்போது நிறுத்தப்போகிறார்?

ப: தமிழ்நாட்டின் முதலமைச்சரானதும் நிறுத்தி விடுவார்.

எஸ். எஸ். வேலன்கோபால், கம்போங் ரம்புத்தான், கிள்ளான்

கே: கே. ஆர். விஜயா, பத்மினி, சாவித்திரி, சௌகார் ஜானகி இவர்களில் தாய் பாகத்தில் சிறப்பாக நடிப்பவர் யார்?

ப: கே. ஆர். விஜயாவின் நடிப்பு நன்கு ரசிக்கும் படி இருக்கிறது.

குமாரி கி. சரஸ்வதி, பீடோர்

கே: வெளிநாட்டுக் கலைஞர்களின் நிகழ்ச்சிகள் எப்படி இருந்தன?

ப: தமிழகக் கலைஞர்களின் நிகழ்ச்சிகள் உள்நாட்டுக் கலைஞர்களின் நிகழ்ச்சிகளைத் தரமான தாக்கி விட்டன.

முருகையா, பாரிட்புந்தார்

கே: தேங்காய் சீனிவாசன் சிவாஜியுடன் இணைந்து நடிக்கமாட்டார் என்கிறார்களே, ஆனால் இப்போது 'அந்தமான் காதலி'யில் நடித்துள்ளாரே எப்படி?

ப: நடிகர்களின் பேச்சு என்ன வேதவாக்கா? படத்திற்குப்படம் மாறுபட்ட வசனங்கள் பேசுவதில்லையா? அதைப்போல்தான் அவர்கள் பேச்சையும் நினைத்துக்கொள்ளவேண்டும்.

அ. மனோகரன் சுஜாதா, சிலாங்கூர் ரிவர் தோட்டம்

கே: தற்போது வெளியாகும் புதிய படங்களின் தரம் குறைந்துகொண்டே போகக் காரணம் என்ன?

ப: எப்படிப்பட்ட படங்கள் வந்தாலும் நாம் பார்க்கத் தயாராக இருக்கும்போது, இன்னும் மோசமான படங்கள் வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

எஸ். தேவி, பூலோ காசாப், சிகாமட்

கே: 'கவிக்குயில்', 'அன்னக்கிளி'யைப்போல் வெற்றி பெறுமா?

ப: 'அன்னக்கிளி' வெற்றி கண்டது என்பதால் அதேபாணியில் மற்றொரு படத்தை எடுத்தால் எப்படி வெற்றிபெறும்?

எம். பி. குணாளன், மிட்லண்ட்ஸ் தோட்டம், கிள்ளான்

கே. எம். ஜி. ஆருக்குப் புகைபிடிக்கும் பழக்கம் உண்டா?

ப: இல்லை. அத்துடன் புகைபிடிக்கும் பாத்திரத்தில் கூட அவர் நடிப்பதில்லை.

குமாரி அலி மஜீட், லதாவாணி, சுங்கை

கே: கமலஹாசனுக்கு இப்போது வயது என்ன? அவர் திருமணம் ஆனவரா?

ப: கமலஹாசனுக்கு 24 வயதுதான் ஆகிறது. அடுத்த கேள்விக்கான பதில் — அந்த இடம் காலியாகத்தான் இருக்கிறது.

பி. இராமன், ஈப்போ

கே: கமலஹாசன் மலேசியாவுக்கு வந்திருந்தபோ அவரைப் பார்க்கப் பெண்கள் கூட்டம் கூட்டமாக போய்க் காத்திருந்தார்களாமே!

ப: ஆகா, என்ன அருமையான செய்தி! தமிழர்க இனிமேல் தலைநிமிர்ந்து நடக்கலாமே!

ஏ. எஸ். சிவன், பாமோல், குளுவாங்

கே: நம்நாட்டில் தமிழ்த்திரைப்பட இறக்குமதியை குறைப்பதற்கு ஏதேனும் வழிகள் உண்டா? நம் நா டில் சினிமாப் பைத்தியம் அதிகரிக்கக்கூடாது என் தான் இதைக் கூறுகிறேன். உங்கள் கருத்தென்ன?

ப: எல்லாரும் சேர்ந்து சினிமாவை நசுக்கிவிட்ட களானால் என்னிடம் கேள்வி கேட்க ஆ வேண்டாமா?

ஏஸ். விஜய் விஜிடாஸ், புக்கிட்சீடிங் தோட்டம், பந்திங்

கே: உங்களைக் கவர்ந்த பட இயக்குநர் யார்?

ப: இப்போதைக்குக் கே. பாலச்சந்தரின் இயக்கு முறை எனக்குப் பிடித்திருக்கிறது.

எஸ். கோவிந்தராஜு, பினாங்கு.

கே: நீங்கள் ஏன் சினிமாவுக்குப் பதில் சொல் வந்தீர்கள்?

ப: சினிமாவினால் நினைத்ததை முடிக்கமுடியு என்று சரித்திரம் படைத்திருக்கிறோமே, அ போதாதா!

ஐயாசாமி ஜமுனா, சுங்கை, பேரா

கே: தங்களைக் கவர்ந்த நடிகர் யார்?

ப: திரையில் தோன்றினால் மட்டும்தான் நடிகரா அன்றாட வாழ்க்கையில் நம்முன்னே எத்தனையே பேர் திறமையாக நடித்துக்கொண்டிருக்கிறார்களே தெரியாவிட்டால் பத்து வெள்ளி கடன் கேட்டு பாருங்களேன்!

வி. சுலோசனா, சிரம்பான்

கே: யாருடைய இசையமைப்புக்கு இப்போது கிராக் ஏற்பட்டிருக்கிறது?

ப: இளையராஜாவின் இசையமைப்பே இப்போ எல்லோரையும் கவர்ந்து நிற்கிறது. விரைவி இளையராஜா குழுவினர் மலேசியா வரவிருக்கின் னர்.

எல். முனிபாண்டி, பத்தாங் பெர்சுந்தை


கே: சினிமாவில் நடிப்பதற்கென்று அரசு சார்பி பயிற்சி அளிக்கப்படும் நிலையம் இந்தியாவில் புனாவை தவிர வேறு எங்காவது உண்டா?

ப: சென்னையில் ஒன்று உள்ளது.

என். சுகுமாரன், பத்தாங்காலி

கே: ஹேமமாலினியுடன் சிவாஜி கணேசன் நடித்து ளாரா?

ப: இந்திப் படமொன்றில் ஹேமமாலினியுட சிவாஜி நடித்துக்கொண்டிருக்கிறார். இது வண்ண படமும் கூட.



பணம் பெருக்கி

'சிறுகக் கட்டிப் பெருக வாழ்' என்னும் பழமொழியைத் தெரியாதவர்கள் நம்மில் மிகச் சிலர் தான் இருப்போம். ஆனால் அதன்படி நடக்காதவர்களோ நாற்றுக்குத் தொண்ணூற்றென்பதே முக்காலே அரைக்கால் பேர் இருப்போம்.

சிறுகச் சிறுகச் சேமித்து "சிறு துளி பெருவெள்ளம்" என்பதுபோல நாம் நாளுக்குநாள் கையில் கொஞ்சம் பசையுள்ளவர்களாக மாற வேண்டும் என்னும் பொருளைத் தான் "சிறுகக் கட்டிப்பெருக்வாழ்" என்னும் பழமொழி குறிப்பிடுகிறது.

இந்தப் பழமொழியைக் கூறியவன் பரம்பரையில் வந்த நாம் அந்தப் பழமொழியை ஏட்டளவில் வைத்துக்கொண்டும், மேற்கோள் காட்டிக்கொண்டும் காலத்தைக் கழித்துக்கொண்டிருக்கிறோம். அதனால் நம்மை "இவன் வக்கில்லாதவன்" என்று காலமும் கழித்துக் கொண்டிருக்கிறது.

கொஞ்சமும் சேமிக்காமல் இப்படிக் காலத்தைக் கழித்துக்கொண்டிருக்கும் நமக்கு, "சிறுகக் கட்டிப் பெருகவாழ்" என்னும் பழமொழியையே தாரக மந்திரமாகக் கொண்டு எதிர்காலத்தில் நமது வளமான வாழ்வுக்கு வழிவகுக்க "யூனிட் டிரஸ்ட்" என்னும் "சிறு முதலீட்டுக் கழகம்" ஒன்று துவக்கப்பட்டிருப்பது நம்மில் எல்லோருக்கும் தெரியுமோ, என்னவோ! நிச்சயம் ம.இ.கா. உறுப்பினர்கள் அனைவருக்கும் தெரிந்திருக்கும். ஏனென்றால் ம.இ.கா. தானே இந்தச் சிறு முதலீட்டுக் கழகத்தை அண்மையில் நடைபெற்ற அதன் தேசியப் பேராளர் மாநாட்டில் துவக்கியது.

இந்தச் சிறுமுதலீட்டுக் கழகத்தின் வழியாக நாம் எந்த எந்த வகையில் முன்னேற முடியும்? மற்றச் சேமிப்பு வகைகளுக்கும் இதற்கும் என்ன வேறுபாடு? என்பனவற்றைப் பற்றியெல்லாம் தெரிந்து கொள்ள அதன் தலைவர் டான்ஸ்ரீ எஸ்.ஓ.கே. உபைதுல்லா அவர்களைச் சந்தித்தோம்.

கே: ம.இ.கா. துவக்கியிருக்கும் "யூனிட் டிரஸ்ட்" அதாவது சிறு முதலீட்டுக் கழகத்தின் நோக்கம் என்ன?

ப: சாதாரண மனிதன் ஒருவனுக்கு அவனது பணத்தை லாபகரமாகச் சேமிக்க முதலீடு செய்யும் வழிகளைக் காட்டித் தருவதுதான் நோக்கம்.

கே: யூனிட் டிரஸ்ட் மூலமாகத்தான் ஒருவன் முதலீடு செய்யவேண்டுமா? பிக்சட் டிபாசிட்டில் போட்டாலும் வட்டிமூலம் லாபம்தானே?

ப: ஒருவன் தனது பணத்தை முதலீடு செய்ய கீழ்க்காணும் ஐந்து வழிகள் உண்டு. 1. நிர்ணய வைப்பு (பிக்சட் டிபாசிட்) 2. சேவிங்ஸ் (சேமிப்புக் கணக்கு) 3. டிபென்சர்ஸ் (கடன் பத்திரங்கள்) 4. அரசாங்க செக்யூரிட்டிஸ் 5. பொது நிறுவனங்களின் பங்குகள்.

கே: இந்தச் சேமிப்பு வகைகளுக்கும் யூனிட் டிரஸ்ட் சேமிப்புக்கும் லாபத்தில் வேறுபாடு உண்டா?

ப: நிச்சயம் உண்டு. நான் சொன்ன ஐந்து முறைகளும் லாபம் தருவனவே. ஆனால் அவை தரும் லாபத்தைக் காட்டிலும் யூனிட் டிரஸ்ட் அதிக லாபத்தையும் உத்தரவாதமான லாபத்தையும் தரும்?

கே: எப்படி?

ப: பிக்சட் டிபாசிட், சேவிங்ஸ், கடன் பத்திர முதலீடு, அரசு கடன் பத்திர முதலீடு, ஆகிய நான்கு சேமிப்பு வகைகளையும் முதலில் எடுத்துக்கொள்வோம். ஒருவன் 3 ஆண்டுகளுக்கு முன்பு வெ. 3,000 அதில் முதலீடு செய்திருப்பான். இப்போது அது அவனது கைக்கு வந்தால் வட்டியும் முதலுமாக வெ 5,000 வரும் என்று வைத்துக் கொள்வோம். மேலோட்டமாகப் பார்த்தால் வெ. 3,000க்கு வெ. 5,000ஆகக் கிடைத்திருப்பது லாபந்தான். ஆனால் நன்கு ஆராய்ந்தால் இன்றையப் பொருளாதார வளர்ச்சியோடு ஒப்பிட்டால் அது ஒன்றும் அதிகமான லாபம் அல்ல என்பது தெரியவரும்.

கே: எப்படி?

ப: மூன்று ஆண்டுகளுக்கு முன்பு அவன் வைத்திருந்த வெ. 3,000க்கு அன்றைய நிலையில் 50,000 முட்டைகள் வாங்கலாம் என்றால் இன்று அதே வெ.3,000க்கு 50,000 முட்டைகள் வாங்க முடியுமா? இன்று அவனுக்குக் கிடைத்திருக்கிற வெ. 5,000த்தில் வெ. 4,000 அல்லது வெ. 4,500 கொடுத்தால்தான் 50,000 முட்டைகள் கிடைக்கும். இதிலிருந்து அவனு-டைய அன்றைய வெ. 3,000க்கு இருந்த வாங்கும் சக்தி, இன்றையப் பண வீக்கத்தினாலும், உலகளாவிலான பொருளியில் மாற்றங்களினாலும் குறைந்துவிட்டது. மேலே சொன்ன கணக்கின்படி பார்த்தால் வெ. 13,000க்கு வெ. 5,000ஆகக் கிடைத்தாலும் வாங்கும் சக்தி குறைந்ததால் அவனுக்கு லாபமாகக் கிடைத்த வெ. 2,000த்தில் ஆயிரமோ ஐந்நூறோதான் லாபமாகக் கிடைக்கிறது.

கே: பொதுப் பங்குகளை எடுப்பவர்களுக்கும் லாபம் இப்படித்தான் குறையுமா?



ப: நான் முன்பு சொன்னபடி நான்கு வகை சேமிப்புகளிலும் போட்ட பணம் லாபம் குறைந்தாலும் நிச்சயம் திரும்பக் கிடைத்துவிடும். ஆனால் பொது நிறுவனப் பங்குகளில் போட்ட பணம் அப்படியல்ல. அதிலிருந்து கிடைக்கும் லாபம் அதிகமாகவும் இருக்கலாம்; குறைவாகவும் இருக்கலாம். இரண்டும் இல்லாமல் முதலுக்கு நட்டம் ஏற்படும் சாத்தியமும் உண்டு!

கே: என்ன, நட்டமா? கொஞ்சம் விரிவாகச் சொல்லுங்களேன்!

ப: நாம் பங்கு போட்டுள்ள நிறுவனம் செழிப்பாக இருந்தால் நம்முடைய பங்கு அதிக லாபம் தருவதாக இருக்கும். நிறுவனம் லாபகரமாக இயங்காவிட்டால் நமது பங்கிலும் லாபம் குறைந்துவிடும். இது தவிர நிறுவனம் நட்டக் கணக்கில் ஓடி இறுதியில் இழுத்து மூடப்பட்டுவிட்டால் அதிலுள்ள நமது பங்குப் பணமும்......?

கே. ...மேற்கொண்டு சொல்லாதீர்கள்! கேட்கச் சங்கடமாக இருக்கிறது

ப. கொஞ்சம் பொறுங்கள். முழுவதையும் சொல்லிவிடுகிறேன். பங்குப் பணம் மோசம் போவதைத் தவிர்க்க தினந்தோறும் பங்கு மார்க்கெட் நிலவரத்தைக் கண்ணும் கருத்துமாகக் கவனித்து வரவேண்டும். தனது நிறுவனப் பங்குகளின் விலை வீழ்ச்சியடைவதுபோல் தெரிந்தால் உடனடியாக பங்குகளை விற்றுவிட்டு லாபகரமாக இருக்கும் மற்ற நிறுவனங்களின் பங்குகளை வாங்கலாம். தினந்தோறும் பங்குமார்க்

வளம் பெருக்குவோம்

கெட் நிலவரத்தைக் கண்ணில் விளக்கெண்ணெய்யை ஊற்றிக் கொண்டு கவனித்து வருபவர்கள்தாம் இதில் லாபம் காணமுடியும்?

கே. நீங்கள் முன்பு குறித்த சேமிப்பு வகைகளைக் காட்டிலும் யுனிட் டிரஸ்ட் எந்த வகையில் அதிக லாபம் தரும்?

ப: யுனிட் டிரஸ்ட்டில் ஒருவர் செலுத்தும் பணம் நாட்டின் அன்றன்றைக்குரிய பொருளாதார வளர்ச்சியோடு சேர்ந்து வளருகிறது. எப்படி என்று கேட்கிறீர்களா? ஒருவர் இன்று $10,000 யுனிட் டிரஸ்ட்டில் செலுத்துகிறார் என்று வைத்துக் கொள்வோம். அந்தப் பணத்தை யுனிட் டிரஸ்ட் அப்படியே வைத்திராது. நிலம், கட்டடம், போன்ற அசையாச் சொத்துக்களிலும், தொழில்களிலும். பங்குகளிலும் முதலீடு செய்யும். இன்று ஒரு ஏக்கர் $10,000 என்றிருக்கும் நிலத்தை நாம் வாங்கினால் பத்து ஆண்டுகளுக்குப் பிறகு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு ஏற்ப அது $20,000 ஆகவோ, $30,000 ஆகவோ கூடும். நாம் இப்போது செலுத்திய $10,000 முதலீடு அப்போது இரண்டு மடங்கு லாபத்தைத் தரக்கூடியதாக இருக்கும். அவ்வளவு லாபமும் முதலீடு செய்த யுனிட் டிரஸ்ட்டுக்குக் கிடைக்கிறது. அது லாபத்தை டிவிடெண்டாகத் தனது பங்குதாரர்களுக்குச் செலுத்துகிறது.

கே: பொது நிறுவனப் பங்குகளில் யுனிட் டிரஸ்ட் முதலீடு செய்யுமெனச் சொன்னீர்களே. அது மதில்மேல் பூனை மாதிரி அப்படியும் இப்படியும் இருக்கும்போது...?

ப: யுனிட் டிரஸ்ட் அதிகாரிகள் தினந்தோறும் பங்குமார்க்கெட் நிலவரத்தை மிக உன்னிப்பாகக் கவனித்து வருவார்கள். இருபக்கமும் ஆளிருந்தால் பூனை எந்தப் பக்கம் சாய்ந்தாலும் பிடித்துக்கொள்ளலாம் அல்லவா? பங்குமார்க்கெட்டில் நிபுணத்துவம் பெற்றவர்கள் அதைக் கவனிப்பதால் பணத்திற்கு ஆபத்து வர வழியில்லை.

கே: பணமுள்ளவர்கள் நேரடியாகவே இப்போது குறைந்த விலையில் வரும் நிலத்தை வாங்கி வைத்துக்கொண்டு எதிர்காலத்தில் விற்றால் லாபம் அதிகம் கிடைக்கலாமல்லவா?

ப: இதற்குரிய பதிலில் தான் யுனிட் டிரஸ்ட்டின் உண்மையான பயன் விளங்கும் என நம்புகிறேன். $100 வைத்துக்கொண்டிருப்பவர் $10,000 மதிப்புள்ள நிலத்தை வாங்க முடியுமா? $10,000 வைத்துக்கொண்டிருப்பவர் $1 லட்சம் முதலீடு தேவைப்படும் தொழிலைத் துவக்க முடியுமா? முடியாது. ஆனால் யுனிட் டிரஸ்ட் மூலம் அவர்கள் வாங்க முடியும். அவரது நூறு வெள்ளியோடு மற்றும் 99 பேரின் தனித்தனி நூறு வெள்ளியையும் சேர்த்து யுனிட் டிரஸ்ட் அந்த நிலத்தை வாங்குகிறது. ஆக தலா நூறு வெள்ளியை வைத்திருந்த 100 பேர் வெ. 10,000 மதிப்புள்ள நிலத்தை வாங்குகின்றார்கள். இதே போல்தான் வெ. 1 லட்சம் மூலதனம் தேவைப்படும் தொழிலும்.

கே: அப்படியென்றால் அந்த நிலத்தை 100 பேர் பேரிலும் எழுதி வைத்துவிடுவீர்களா?

ப: அல்ல! அல்ல, அப்படி யார் பேரிலும் எந்தச் சொத்தையும் எழுதி வைக்க முடியாது. அது மட்டுமல்ல, ஒருவர் செலுத்திய பணம் நிலமாக இருக்கிறதா, கட்டடமாக இருக்கிறதா, தொழிலாக மாறியிருக்கிறதா என்பதைக் கண்டு பிடிக்கவும் முடியாது.

கே: கொஞ்சம் குழப்பமாக இருக்கிறது. விரிவாக விளக்குங்கள்?

ப: வெ. 100, 500, 1000, 10,000, 1 லட்சம் என்று ஐவர் மொத்தம் 1 லட்சத்து 11 ஆயிரத்து அறுநூறு வெள்ளியை யுனிட் டிரஸ்டுக்கு இன்று தருவதாக வைத்துக் கொள்வோம். இதில் வெ. 50,000ஐ, நிலத்திலும் வெ. 40,000ஐ கட்டடத்திலும், மீதியை ஒரு தொழிலிலும் யூனிட டிரஸ்ட் முதலீடு செய்திருப்பதாகவும் வைத்துக் கொள்வோம். இதில் யார் பணம் எதில் இருக்கிறது எனப் பிரிக்க முடியும்? அது ஒருபுறமிருக்க இப்படிப் பிரிப்பதும் நமது நோக்கமல்ல. அதற்கு மாறாக வெ. 100 செலுத்திய ஒருவர் வெ. 1,11,500 செலுத்தப்பட்ட மூன்று சொத்துக்களின் லாபத்திலிருந்தும் தனது பங்குக்கு ஏற்ற லாபத்தைப் பெற வைப்பதுதான நோக்கம். அவர் இந்த லாபத்தைப் பெற வெ. 100 தருவதைத் தவிர நேரடியாக, வேறெதையும் செய்யத் தேவையில்லை.

கே: அப்படியானால் கையிலுள்ள சிறுதொகையை ஒருவர் யுனிட் டிரஸ்டில் செலுத்திவிட்டு வீட்டில் இருந்து கொண்டே ஆண்டு முடிவில் அதற்குரிய லாபத்தைப் பெறலாம் என்று சொல்லுங்கள்!

ப: ஆமாம், அவர்களுக்காகத் தான் தினமும் யுனிட் டிரஸ்ட் நிர்வாகிகள் உழைத்துக்கொண்டிருக்கிறார்களே.

கே: இதுவரை யுனிட் டிரஸ்ட்டுக்கு எவ்வளவு நிதி சேர்ந்திருக்கிறது.

ப: இந்த ஆண்டு ஜூலை முதல் தேதி யுனிட் டிரஸ்ட் துவக்கப்பட்ட அன்றே வெ. 1 லட்சம் சேர்ந்தது. அடுத்த மாத மத்திக்குள் மேலும் வெ. 10 லட்சம் சேரும் என் எதிர்பார்க்கப்படுகிறது.

கே: யுனிட் டிரஸ்ட் பற்றி மேலும் ஏதும் சொல்ல நினைக்கிறீர்களா?

ப: ஆம்! இந்தியர்களில் பெரும்பாலோர் பெரிய முதலீடுகளைச் செலுத்த இயலாதவர்கள். இவர்கள் நூறு, இருநூறு என்று சேமித்து வைத்திருப்பதைக் கொண்டு நேரடியாக எதிலும் முதலீடு செய்ய முடியாது. கையில் சிறிய தொகையை வைத்துக்கொண்டு ஏதாவது முதலீடு செய்தால் முன்னேறலாமே என்று எண்ணுபவர்களுக்கு யுனிட் டிரஸ்ட் ஒரு கலங்கரை விளக்கம் என்றால் மிகையல்ல. நாம் சிறுபான்மையினர் தான். அதற்காகச் சோறில்லாத வெறும் பானையாக இருக்க வேண்டுமா என்ன? குறைந்த வருமானம் உடையவர்கள் என்பதற்காக என்றுமே பொருளாதாரத்தில் குறைந்த மதிப்புடையவர்களாக இருக்கத் தான் வேண்டுமா? இப்படி அமைச்சர் டான்ஸ்ரீ மாணிக்கவாசகம் தலைமையில் இயங்கும் ம. இ. கா. சிந்தித்ததன்பலனாக முதலில் உருவானது, நேசா. இரண்டாவதாக விளைந்திருப்பது யுனிட் டிரஸ்ட். டிரஸ்ட் என்னும் ஆங்கிலச் சொல்லுக்கு நம்பிக்கை என்றும் ஒரு பொருளுண்டு. யுனிட் டிரஸ்ட்டின் வளர்ச்சிக்கு ம. இ. கா., இந்தியர்களை குறிப்பாகத் தோட்டப் பாட்டாளிகளைப் பெரிதும் நம்புகிறது. அந்த நம்பிக்கை வீணாகாது என்று நம்புகிறேன். ஏனெனில் 'சிறகைக் கட்டிப்பெருக வாழ்' என்று கூறிய வனின் வழித் தோன்றல்கள் அல்லவா நாம்?

-பேட்டி: வணிகன்

விருது

மலாயாவின் முதலாவது பேரரசர், முதலாவது மெர்தேகா விழாவன்று [31.8.1958] வழங்கிய கௌரவ விருது பெற்ற பிரமுகர்களில் நமது ம. இ. கா. தேசியத் தலைவர் டான்ஸ்ரீ வெ.மாணிக்கவாசகமும் ஒருவர். அவருக்கு ஜே. எம். என். விருது வழங்கப்பட்டது. எங்கை சிப்புட் திரு. வி. மீனாட்சி சுந்தரம், டாக்டர் கே. எஸ். சோதி ஆகியோரும் அன்றைய தினம் ஜே. எம். என். விருது பெற்றனர்.

மலேசியமொழித் தேர்வில் வெற்றிபெற...(௪)

கைகொடுக்கும் இலக்கணம்

வை. ஆறுமுகம்

சொல்லின் முன்னும் பின்னும் சேரும் Imbuhan-களுள் ஒன்றைக்(Ber...an)கடந்த இதழில் கண்டோம். இவ்வாறான Imbuhan-கள் இன்னும் பல உள்ளன.

Per...an, Pe...an

பொதுவாக வினைச் சொற்களைப் பெயர்ச்சொற்களாக மாற்றுவதே இவற்றின் வேலை. ஆனால் எந்தச் சொற்களோடு Per...an சேரும், எந்தச் சொற்களோடு Pe...an சேரும் என்பதற்கு வரையறுத்த விளக்கம் தருவது இயலாது. இயல்பாக அவை எப்படிப் பயன்படுத்தப் படுகின்றன என்பதை மிகுதியாகப் படிப்பதன்வழி மட்டுமே அறிந்து கொள்ள இயலும்.

Permainan, perjanjian, perkataan, pemberian, pendapatan, pengenalan.

வினைச்சொல் என்ன பொருளைக் கொடுத்ததோ அதே பொருளின் இயல்பையே புதிதாகத் தோன்றும் பெயர்ச்சொல்லும் கொண்டிருக்கும்.

Main-விளையாடு. permainan-விளையாட்டு

பொதுவாக Per...an, Pe...an இரண்டுக்கும் வேறுபாடு இல்லையாயினும், மலேசியமொழி கால ஓட்டத்தில் பெற்றுள்ள மிகுந்த வளர்ச்சியின் காரணமாகச் சில நுண்ணிய வேறுபாடுகள் தோன்றியுள்ளன. எத்தகைய சொற்களில் இப்படிப்பட்ட வேறுபாடுகள் விளைந்துள்ளன என்பதையும் முழுமையாக விளக்கமுடியாது; நீங்களே கண்டு கொள்வதைத் தவிர்த்து வேறு வழி ஏதும் இல்லை. எடுத்துக்காட்டாக ஓரிரண்டு சொற்களைப் பாருங்கள்.

Pertubuhan- அமைப்பு, நிறுவனம் (Organization), Pertubuhan Bangsa-bangsa Bersatu, ஐக்கிய நாடுகளின் நிறுவனம்.

Penubuhan-அமைத்தல், நிறுவுதல் (பெயர்ச்சொல்)

Penubuhan syarikat kerjasama baru itu telah ditangguhkan-புதிய கூட்டுறவுக் கழகத்தை நிறுவுதல் (நிறுவும் வேலை, அமைக்கும் வேலை) தள்ளிவைக்கப்பட்டுள்ளது.

Persatuan-கழகம், மன்றம் (Association), Persatuan Bahasa Tamil, தமிழ்மொழிக் கழகம்.

Penyatuan-இணைப்பு, இணைத்தல் (பெயர்ச்சொல்). Penyatuan semua persatuan belia sangat diperlukan. எல்லா இளைஞர் மன்றங்களின் இணைப்பு(ஒன்றிணைத்தல்) மிகவும் தேவைப்படுகிறது.

சில வேளைகளில் pe...an ஒரே சொல்லில் இருவேறு பொருள்பட இயங்குவது உண்டு.

Peperiksaan-தேர்வு, பரீட்சை (Examination)

Pemeriksaan- சோதனை, ஆய்வு, புலனாய்வு (Check, Inspection, Investigation)

எது எப்படியாயினும் per...an, pe...an இரண்டும் பொதுவாக ஒரே தன்மையுடையன என்பதை மறவாதீர்கள்.

Ke...an

மேலோட்டமாகப் பார்த்தால் இந்த ke...an-உம், மேலே காட்டிய per...an, pe...an-உம் ஒரே இயல்பை உடையனபோல் தோன்றும். ஆனால் உண்மையில் இவை அடிப்படையிலேயே மாறுபட்டவை. Per...an, pe...an ஆகியவை katakerja-ஐப் பெயர்ச்சொற்களாக மாற்றும்; ஆனால் ke...an அவற்றுக்கு மாறாக, katasifat-ஐப் பெயர்ச் சொற்களாக மாற்றும். சில வேளைகளில் katasifat அல்லாத சில சொற்களையும் இது பெயர்ச் சொற்களாக மாற்றுமென்றாலும் புதிதாகத் தோன்றும் அந்தப் பெயர்ச்சொற்கள் katasifat-இன் இயல்பையே பெற்றிருக்கும். இது தான் அடிப்படை வேறுபாடு. இதை நன்கு புரிந்துகொள்ளுங்கள்; எந்தப் பிழையும் இல்லாமல் எழுதலாம்.

(i) பொதுவாக katasifat அனைத்துடனும் இந்த ke...an சேரும். Kelemahan, Keberanian, kekayaan முதலியவை எளிதான எடுத்துக்காட்டுகள். இவையெல்லாம் அடிச்சொல்லான katasifat-இன் பொருளை அழுத்தமாகக் காட்டும் பெயர்ச் சொற்கள்.

(ii) Kedengaran, kelihatan, kecurian-இச்சொற்களின் அடிச்சொற்கள்(katadasar) வினைச் சொற்கள்(katakerja). Dengar, lihat, curi ஆகிய வினைச் சொற்களோடு ke.. an சேர்ந்ததனால் உண்டாகிய பெயர்ச்சொற்கள் katasifat-இன் இயல்பைப் கொண்டுள்ளன. இவற்றோடு pe.. an சேர்ந்தால், உருவாகும் பெயர்ச்சொற்கள், வினைச்சொற்களின் இயல்பையே பெற்றிருக்கும்.

Kedengaran—கேட்கப்படுதல் (audible)

Pendengaran-கேட்கும் திறன் (sense of hearing)

Kelihatan—காணப்படுதல் (visible)

Penglihatan—பார்வை (sense of sight)

Kecurian—திருடப்படுதல் (stolen)

Pencurian—திருட்டு (theft)

இதுவரை Imbuhan-களைப் பற்றிச் சுருக்கமாக ஓரளவு கண்டோம். முன்பே குறிப்பிட்டுள்ளாற் போல் மலேசியமொழியில் பிழையற எழுதுவதற்கும், எஸ். பி. எம்./எம். சி. இ. மலேசியமொழித் தேர்வின் எல்லா வினாக்களையும் முறையாகச் செய்வதற்கும் Imbuhan-களைப் புரிந்துகொள்வது மிகவும் தேவை. எனினும் இரண்டாவது தாளின் மூன்றாவது கேள்வியில் அவ்வப்போது Imbuhan-களைப் பற்றிய தனிக் கேள்விகள் தரப்படுவது உண்டாதலால் இந்தக் கேள்விகளைச் செய்வதற்கும் Imbuhan பற்றிய அறிவு கைகொடுக்கும்.

தோற்றம் இல்லான்

போற்றிஇப் புவனம் நீர்தீக்
    காலொடு வான மானாய்
போற்றியெவ் வுயிர்க்குந் தோற்றம்
    ஆகிநீ தோற்ற மில்லாய்
போற்றியெல் லாவு யிர்க்கும்
    ஈறாயீ றின்மை யானாய்
போற்றியைம் புலன்கள் நின்னைப்
    புணர்கிலாப் புணர்க்கை யானே!

இந்தப் புவனமும், நீரும், தீயும், காற்றும், வானமும் ஆகியவனே. நின்னைப் போற்றுகின்றேன்!

எவ்வகை உயிர்கட்கும் பிறப்பிடமாகியும் தோற்றமின்றி இருப்பவனே, நின்னைப் போற்றுகின்றேன்!

எல்லா உயிர்கட்கும் முடிவிடமாகியும் நினக்கொரு முடிவில்லாத தன்மையனே, நின்னைப் போற்றுகின்றேன்!

ஐம்புல உணர்வுகளும் நின்னை இயல்பாகவே அடையாத மாயத்தை உடையவனே, நின்னைப் போற்றுகின்றேன்!



—திருவாசகம் 5:70

Imbuhan-க்ளை அடிப்படையாகக் கொண்ட கேள்விகள் எப்படி இருக்கும் என்பதற்குப் பழைய தேர்வுத்தாள்களிலிருந்து ஓரிரு எடுத்துக் காட்டுகளைப் பார்ப்போம்.

1969-ஆம் ஆண்டுக்குரிய தேர்வுத்தாளின் மூன்றும் கேள்வியின் ஒரு பகுதி:-

Banyak perkataan bila dibubuh penambahan, maknanya akan berubah. Berilah penambahan-penambahan kepada perkataan-perkataan yang berikut supaya tiap-tiap satunya membawa tiga makna yang berlainan serta buatkan contoh ayat memakainya sekali:

sedia, sedih, laku, tahan

1976-ஆம் ஆண்டு (Julai)

Bagi pasangan - pasangan perkataan di bawah, buatkan ayat untuk tiap-tiap petkataan supaya jelas perbedaan maknanya.

i. abadi—pengabadian
ii. pengecualian — kekecualian
iii. berlengkap — kelengkapan
iv. saranan—menyarani
v. peninggian— dipertinggikan

1976-ஆம் ஆண்டு (Nov./Dis.)

Terangkan erti perkataan yang bergaris di dalam ayat-ayat di bawah ini:

i. Penyanyi yang terkemuka itu telah diberi sambutan hangat dilapangan terbang.

ii. Persatuan sekerja telah mengemukakan cadangannya untuk membaiki taraf pekerja-pekerja.

iii. Pengintip rahsia itu terpaksa bermuka-muka dengan pihak keselamatan untuk mendapat maklumat.

iv. Kedua-dua pihak yang bertentangan itu telah bersemuka dimeja perundingan.

v. Encik Khalid telah terpaksa membayar wang muka sebelum ia pindah ke rumah itu. (இக்கேள்வி மட்டும் Imbuhan தொடர்பில்லாதது)

இங்கு எடுத்துக்காட்டுகளாகக் காட்டப்பட்ட மாதிரியிலான கேள்விகளோ, வேறு வகையிலான Imbuhan தொடர்புள்ள கேள்விகளோ இந்தஆண்டுத் தேர்வுத்தாளில் இடம்பெறலாம். அல்லது Imbuhan தொடர்புள்ள கேள்விகள் அறவே இடம்பெறாமலும் போகலாம். இத்தகைய கேள்விகள் இருந்தாலும் இல்லாவிட்டாலும் Imbuhan பற்றிய அறிவு உங்களுக்கு மிகவும் தேவை; ஆகவே காலம் தாழ்த்தாமல் உங்கள் இலக்கண அறிவைப் பெருக்கிக் கொள்ளுங்கள்.



தொலைக்காட்சி

25-8-77 வியாழன் மாலை 5.30க்கு தமிழ்ப்படம். கே. ஆர். விஜயா, ஜெய்சங்கர், முத்துராமன் நடித்துள்ள "நிலவே நீ சாட்சி".

28-8-77 ஞாயிறு மாலை 4.00க்கு மலையாளப்படம் "அடிமைகள்"


1-9-77 வியாழன் மாலை 5.30க்கு இந்திப்படம் KUTTY (குட்டி)

4-9-77 ஞாயிறு மாலை 4 மணிக்கு எம். கே. தியாகராஜ பாகவதர் நடித்துள்ள "அசோக்குமார்".

இதர நிகழ்ச்சிகள்

வியாழக்கிழமை தோறும் இரவு மணி 7.25க்கு ஜெமினி மேன் (மாய மனிதன்)

சனிக்கிழமைதோறும் மாலை 6.45-க்கு தும்புவான் மிங்கு (தமிழ் நிகழ்ச்சி)



சனிக்கிழமை தோறும் இரவு 7.20க்கு சிக்ஸ் மில்லியன் டாலர் மேன். (லீ மேஜர்ஸ் நாயகனாகத் தோன்றி நடிக்கும் ஆங்கிலப் படம்)

ஞாயிறுதோறும் இரவு மணி 10க்கு கோம்பெட்.

வானொலி

மனச்சுழல்

(ஞாயிறுதோறும் காலை 10.30க்கு ஒலிபரப்பாகிறது)

28-8-77 "அது முன்னாளில் உண்டான உறவு" எழுத்து: கண்மணி கிருஷ்ணன்.

4-9-77 "பாவத்தின் நிழல்" எழுத்து சந்திரா சண்முகம்

11-9-77 "பேய்க்கரம்" எழுத்து: கிருஷ்ணம்மா.

வானொலி

நாடகம்

[சனிக்கிழமைதோறும் பிற்பகல் மணி 2க்கு ஒலிபரப்பாகிறது]

27-8-77 "இதயங்கள்" எழுத்து: எஸ். வைரக்கண்ணு. (தயாரிப்பு: எல். ராமன்)

3-9-77 "ஆண்டவன் போட்ட முடிச்சு" ருக்குமணி முத்துக்கிருஷ்ணன் எழுதியது. (தயாரிப்பு: ஈஸ்பரன்)

10-9-77 "மனம் விழித்துக்கொண்ட போது" பாகான் ஆஜம் எம். ஜெயலட்சுமி எழுதியது.

இஸ்லாமிய நாடகம்

1-9-77 "மனமாற்றம்" (லாபு எஸ். ஓ. ஏ. சைட் ஜபார் பாஷா எழுதியது)

சிறுகதை

[ஞாயிறுதோறும் இரவு 8.45க்கு ஒலிபரப்பாகிறது]

28-8-77 "பாவக்கறை" எழுத்து: ஈஸ்வரி, சுங்கை பாக்காப்.

4-9-77 "அவள் என் மனைவி" எழுத்து: பினாங்கு கே. ஆர். காளிதாசன்.

11-9-77 "கவிதா" எழுத்து: பி. ஞானசௌந்தரி, தெலுக்கான்சன்.

சிரிப்புச் சித்திரம்

[சனிக்கிழமைதோறும் இரவு மணி 7.15க்கு ஒலிபரப்பாகிறது]

27-8-77 மலாக்கா முத்துக்கிருஷ்ணன் எழுதிய "நள்ளிரவில் வந்த நாய்"

3-9-77 கிள்ளான் இரா. வளர்மதி எழுதிய "ஏமாந்தது யார்?"

10-9-77 பத்தாங் பெர்ஜுந்தை சுப்பிரமணியம் சக்கரவர்த்தி எழுதிய "திட்டம் பலித்தது"

இதர நிகழ்ச்சிகள்

"வனிதையர் சோலை" (சனிக்கிழமை தோறும் காலை மணி 9க்கு)

ஞாயிறு தோறும் காலை மணி 9க்கு இளைஞர் உலகம்; காலை மணி 10க்குப் பூச்சரம். பிற்பகல் 3 மணிக்கு "நாடகம் பிறக்கிறது" (தயாரிப்பு அசன்கனி)

மலர்ந்திருக்கும் வேளையிலே...

"மலேசிய மண்ணில் கலை என்னும் விருட்சத்தில் உதித்துள்ள மற்றுமொரு புதுமலர் குமாரி மீராவின் பரதநாட்டிய அரங்கேற்றத்திற்கான அனைவரும் திரண்டு வருக!"

நல்ல தரமான தாளில் கண்ணைக் கவரும் வண்ண எழுத்துக்களும் படங்களும் அடங்கிய அந்த அழைப்பிதழை மேலும் ஒரு முறை பார்க்கிறேன். அழைப்பிதழின் தரத்திற்கேற்ப நாட்டிய அரங்கேற்றமும் தரமானதாக அமையவேண்டும் என்ற எண்ணம் மேலிட ஹாலில் நின்றவாறே "பூங்கொடி, பூங்கொடி" என்று குரல் கொடுக்கிறேன்.

"என்னம்மா" என்று குரல் கொடுத்தவாறு ஓடிவரும் அவளிடம் "கூடையிலுள்ள பூக்களைக் கட்டி முடிச்சாச்சா? நாட்டிய ஒப்பனைக்குத் தேவையான எல்லாவற்றையும் சரிபார்த்துப் பெட்டியில் எடுத்துவை. நீயும் சீக்கிரம் கிளம்பு" என்று துரிதப்படுத்திவிட்டு மேலும் ஒருமுறை அந்த அழைப்பிதழை உற்றுநோக்குகிறேன்.

அது சாதாரண அழைப்பிதழாக எனக்குப்படவில்லை. எனது ஆத்மாவின் உள்ளத்துடிப்பு. அதன் லட்சியக்கனவு அழைப்பிதழின் வழி பாதி நிறைவேறிவிட்டது. இன்னும் பாதி இருக்கிறதே! இதோ இன்னும் நான்கு மணி நேரம், நான்கே மணி நேரம். என் லட்சியக் கனவு நிறைவேறிவிடும். காலங்காலமாய் உள்ளத்தை வாட்டிப் பிழிந்தெடுத்த வேதனைகள், ஏக்கங்கள் யாவும் தீர்ந்துவிடும். ஓ! அதை நினைக்கையில் எவ்வளவு ஆனந்தமாக இருக்கிறது. வானவீதியில் பறப்பது போன்று என் மனம் இலேசாக மாறி, என்னுடைய வயதையும் மீறித்துள்ளுகிறது. நான் கனவுகளில் மிதக்கிறேன். கனவுகள்! அவைதாம் எத்துணை இன்பமயமானவை. அந்தக் கனவுகள் நனவாகும்போது...

அதை... அதை எண்ணிப் பார்க்கும்போது என்னுள்ளம் கட்டுக்கடங்காத மகிழ்ச்சியினால் பூரிப்படைகின்றது. அந்த மகிழ்ச்சியினால் இதயமே வெடித்துவிடும் போலிருக்கிறது. அப்படிச் சொல்ல முடியாத ஓர் இன்ப உணர்வு என்னை ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கிறது.

"எவ்வளவு நேரந்தான் அந்தக் கார்டையே கையில வச்சுப் பாத்துக்கிட்டு இருப்பே" என்ற குரல் என்னை கனவுலகிற்குத் திசை திருப்புகிறது.

"அடடே, நான் ரொம்பத்தான் கனவு காணறேன் போலிருக்கு" என்று எனக்கு நானே சொல்லிக்கொண்டு என் கணவரை ஏறிட்டு நோக்குகிறேன். அவர் இன்னும் கையில் பையுடன் ஹாலில்தான் நின்றுகொண்டிருக்கிறார்

"என்னங்க, மணி மூணாயிடிச்சு. இப்பத்தான் ஆபிசிலிருந்து வர்றீங்க. இன்னிக்குப் பரதநாட்டிய அரங்கேற்றம் என்பது கொஞ்சமாவது நினைவிருக்கா? ரெண்டு தடவை போன்லே கூப்பிட்டுச் சொல்லியும் இவ்வளவு லேட்டா வர்றீங்களே" என்றேன் சற்று உரத்த குரலில்.

"நாலு மணிக்குத்தானே அரங்கேற்றம். இதோ இன்னும் அரை மணி நேரத்தில் கிளம்பிவிடமாட்டேனா!" என்று சொல்லிக்கொண்டு சோபாவில் அமரப் போனவரைப் பிடித்திழுத்து "முதல்லே நீங்க போய்க் குளிச்சிட்டு நான் எடுத்து வைத்திருக்கிற டிரஸ்ஸை மாட்டிக்கிட்டு வாங்க. அதுக்குள்ள நான் மற்ற எல்லாவற்றையும் ரெடி பண்ணிடுறேன். நாம எப்படியும் அரை மணி நேரத்துக்கு முன்பே அங்க போயிடணும். அப்பத்தான் சீக்கிரமே சரியான நேரத்துக்கு அரங்கேற்றத்தை நடத்தமுடியும் பின்னும் நாட்டியத்துக்கான ஒப்பனையெல்லாம் அங்க போய்த்தான் செய்யணும். இம், சீக்கிரமே கிளம்புங்க" என்று அவசரப்படுத்தினேன்.

"என்ன ஜானு, நீ அவசரப்படுறதப் பார்த்தா, பரத நாட்டியம் ஆடப் போறது நீயா இல்லை மீராவான்னு எனக்கு இப்ப சந்தேகம் வந்துடுச்சு!"



எஸ். பானுமதி

"சும்மா கிண்டல் பண்ணாதிங்க. போயி குளிச்சிட்டு வாங்க" என்று அவரை அனுப்பிவிட்டு மகள் மீரா இருக்கும் அறைக்குச் சென்றேன்.

"என்னம்மா மீரா, அலங்காரமெல்லாம் முடிஞ்சுதா? எங்கே இப்படிக் கொஞ்சம் திரும்பு. இந்தப் பூவை நானே தலையில் வைத்துவிடறேன்" என்று கூறி அவளுடைய அலங்காரத்தில் மேலும் சில திருத்தங்கள் செய்ய முனைந்தேன்.

செம்பஞ்சுக்குழம்பினால் சிவந்து காணப்பட்ட அவளது மிருதுவான பூப்போன்ற பாதங்களில் சதங்கையும், மென்மையான மெல்லிய நீண்ட விரல்களையுடைய கரங்களில் கண்ணாடி வளையல்களும் கலகலவென ஒலித்துச் சுருதி நயம் சேர்த்தன. சிவந்த அதரங்களில் முல்லைப் பூப்போன்ற புன்சிரிப்பு, கவிதை கூறும் அழகிய நயனங்கள், மொத்தத்தில் பரதக் கலைக்கேற்ற அளவான அவயவங்களுடன் பருவத்தின் எழிலில் நின்றுகொண்டிருக்கும் என் மகளைக் காணும்போது என் கண்ணே பட்டுவிடும் போலிருந்தது. என்னுடைய கனவுகளை நிறைவேற்றப் போகிறாள் என்ற பெருமிதத்தோடு அவளுடைய அலங்காரம் கலையாமல் அவளுடைய நெற்றியில் அழுந்த முத்தமிட்டேன்.

"போகலாம்" என்று என்னவர் குரல் கொடுத்ததும் சமையற்கார அம்மாளிடம் வீட்டுப் பொறுப்பை ஒப்படைத்துவிட்டுக் கிளம்பினோம். டிரைவர் வண்டியை விரைந்து செலுத்தினாலும் என்னுடைய மனோ வேகத்திற்கு முன் அது மிக மிக மெதுவாகத் தோன்றியது. சாலை நெடுகிலும் உள்ள மரங்கள் யாவும் மனிதர்களாக மாறி என் மகளுடைய வெற்றிப் பாதைக்கு வாழ்த்துத் தெரிவிப்பது போன்று ஒரு பெருமிதம். காரின் முன்னே பொருத்தப்பட்டிருக்கும் கண்ணாடியைப் பார்க்கிறேன். அதில் நான் கடந்து வந்த பாதை தெரிகிறது.

அப்போது எனக்குப் பத்து வயது இருக்கும். ஆரம்பத் தமிழ்ப் பள்ளியில் பயின்றுகொண்டிருந்தேன். நடுத்தரத்திலுள்ள குடும்பத்தில் பிறந்த நான், என் தந்தை எனக்களித்த உற்சாகத்தினால் வகுப்பில் என்றும் முதன்மையாகவே திகழ்ந்தேன். "அப்பா, இந்தத் தவணைச் சோதனையில் நான்தான் முதலாவது மாணவி" என்று கூறினால் போதும். மறுநாள் எனக்கென்று ஏதாவது ஒரு பரிசு வீடு தேடிவரும்.

"அப்பா, அடுத்த மாதம் எங்க பள்ளியில் பெற்றோர் தினவிழா. பாட்டு, டான்ஸ், நாடகம் எல்லாம் இருக்குதப்பா. நானும் அதில் கலந்துக்கிட்டா?" என்று கேட்டால் "அதற்கென்னம்மா, படிப்பு, படிப்பு என்று மற்றத் துறையில் கவனம் செலுத்தாத இருந்திடக்கூடாது. இம். கலந்துக்க" என்பார்.

என்னுடைய ஒவ்வொரு வெற்றிக்கும் காரணமாய் இருந்தவர் தந்தைதான். நான் பெற்ற வெற்றிகளை அவரிடமே பகிர்ந்து கொள்வேன். அம்மாவிடம் மூச்! அம்மாவிற்கு இதெல்லாம் பிடிக்காது நான் இப்பொழுது படிப்பதே அதிகமாம். "பொம்பளைப் பிள்ளைக்கு எதுக்கு இவ்வளவு படிப்பு" என்பது அம்மா



வின் வாதம். மேலும் நான் 'நாடகத்தில் நடிக்கிறேன். மேடையில் பாடுகிறேன்' என்று கேட்டால் விடுவார்களா? எனவே பெறவேண்டிய அனுமதியை அப்பாவிடமே கேட்டுக்கொள்வேன்.

ஒருமுறை எங்கள் ஊரில் பரத நாட்டிய நிகழ்ச்சி அரங்கேறியது. அந்த நடனமணியின் விரலசைவில் தோன்றிய நளினம், கண்களில் காட்டிய பாவனை, பாதங்கள் தாளம் பிசகாமல் சுறுசுறுப்பாக ஆடிய விதம் இவற்றைக் காண நேர்ந்தபோது அந்தப் பெண் மட்டுமா ஆடினாள்? அவளோடு சேர்ந்து எனது உள்ளமும் ஆடியது; உணர்ச்சிகளும் ஆடின; உடலும் அசைந்து கொடுத்தது. இன்னும் சற்று ஆழ்ந்து ரசித்திருந்தால் நானே உணர்ச்சி வயப்பட்டு ஆடத் தொடங்கிவிடுவேனோ என்ற பயமும் வந்துவிட்டது.

ஏற்கனவே ஆடலில் சிறிது பித்து உண்டு. இந்தப் பரத நாட்டியத்தைப் பார்த்தபின் எனது ஆவல் கங்கு கரையில்லாத காட்டாற்று வெள்ளம்போல் பெருகியது. நாட்டியம் கற்றுக்கொள்ள வேண்டுமானால் சுமார் இருபது மைல்களுக்கப்பாலுள்ள நகருக்குக்குச் செல்ல வேண்டும். என்னுடைய ஆசையை மெல்லத் தந்தையிடம் வெளியிட்டேன். அந்த அளவிற்குப் பொருளாதார வசதியின்மையால் முடியாது எனக் கையை விரித்து விட்டார். அம்மாவோ எரிமலையாக வெடித்தார். "பொம்பளப் புள்ள லட்சணமா விட்டோடு இருக்கிறத உட்டுட்டு, டான்ஸ் ஆடப்போறாளாம் டான்சு! எல்லாம் இந்த மனுசன் கொடுக்கிற செல்லம். அதான் இவ இவ்வளவு துள்ளுறா!" என்றால் அப்பா, அம்மாவிடம் வாங்கிக் கட்டிக்கொள்ள வேண்டாம் என்ற எண்ணத்தில் என்னுடைய அந்த ஆசையை முளையிலேயே கிள்ளியெறியத் துணிந்துவிட்டேன்.

அம்மாவினுடைய பலத்த எதிர்ப்புகளுக்கிடையே நான் இடைநிலைப்பள்ளியில் காலடி எடுத்து வைத்தேன். கலைத்துறையில் இருந்த ஆர்வத்தை விளையாட்டுத் துறையில் திருப்பினேன். பள்ளி ஹாக்கி, வலைப்பந்து குழுவின் கேப்டனாக உயர்ந்தேன். 'நீண்டதூர ஓட்டமா, ஜானகி எங்கே?' என்று ஆசிரியர்கள் தேடுமளவுக்குப் பிரசித்தமானேன். வயது வளர வளரத் துணிச்சலும் வளருகிறதல்லவா?

அம்மாவினுடைய எதிர்ப்புகளைப் பொருட்படுத்தாது வெளி இடங்களுக்குச் சென்று பேச்சுப் போட்டி, விளையாட்டுப் போட்டி போன்றவற்றில் கலந்து பரிசுகளைக் குவித்தேன். பரிசுகள் அலமாரியை நிறைவு செய்தன. ஆனால் அம்மாவினுடைய மனதை நிறைவு செய்யவில்லையே! எத்தனை முறை, வெற்றி எனக்குத் தேடித்தந்த பரிசுகளை ஆசையோடு அம்மாவிடம் காட்டியிருப்பேன்! ஆனால் ஒரு வார்த்தைகூட இதுவரை பாராட்டிப் பேசியதில்லை. அம்மாவினுடைய பாராட்டு மொழிகளைக் காதாரக் கேட்டு மனங்குளிர வேண்டும் என்ற ஆசை இன்றுவரை நிறைவேறாதது ஒரு குறையாகவே தோன்றியது.

"அம்மா, ஓட்டப்பந்தபத்தில் நான் முதலாவதாக வந்தேன்" என்பேன் ஒரு நாள். "அம்மா, ஹாக்கி விளையாட்டில் எனக்கு இந்தக் கேடயம் கிடைத்தது" என்பேன் பிறிதொருநாள். "ஆமா, இது வந்துதான் சோறு போடப்போகிறதாக்கும்" என்று அம்மாவின் கடுமையான வார்த்தைகளைக் கேட்கும்போது என்னுடைய ஆவல், நீரைக் காணாத பயிர் போல் வாடிவிடும்.

ஒருமுறை நான்கு மைல் தூர பெருநடைப்போட்டியில் கலந்துகொண்டு முதலாவதாக வாகை சூடினேன். அந்த மகிழ்ச்சி வெகுநேரம் நீடிக்கவில்லை. நான் போட்டியிலிருந்து விலக்கப்பட்டுவிட்டதாக அறிவிப்பு வந்தபோது ஏற்பட்ட தோல்வியை ஏற்றுக்கொள்ளும் வலிமை என் இதயத்திற்கு இல்லாமல் போய்விட்டது. எப்படித்தான் வீடுவந்து சேர்ந்தேனோ தெரியாது. வெற்றிக்களிப்பின்போது உணராத கால்வலியை, தோல்வியின் அடித்தளத்தில் இருக்கும்போது உணர முடிந்தது. உள்ளத்து வேதனையோடு உடல் வேதனையும் சேர்ந்துகொண்டது. பாதங்களை அசைக்க முடியாத அளவிற்கு நரக வேதனை. வீடு வந்து சேர்ந்ததுமே அதுவரை தேக்கிவைத்திருந்த கண்ணீர் வெள்ளம்போல் பெருகியது. எனக்கு ஏற்பட்ட ஏமாற்றத்தினால் வாய்விட்டு விம்மி விம்மி அழுதேன். அப்படி அழுதால்தான் எனக்கேற்பட்ட தோல்வியின் சுமை குறையும்போல் தோன்றிற்று.

"ஒரு வயசு வந்த பொண்ணுக்கு வெளையாட்டு என்ன வேண்டிக் கெடக்கு? ஒரு கம்பத் தூக்கிக்கிட்டு, சிலுவார் சட்டையை மாட்டிக்கிட்டு

போறது. வந்தபின்னே காலெ வலிக்குது. கையை வலிக்குதுன்னு அழுவுறது. ஹூம், நான் சொல்லறது எங்கே இவ மண்டையிலே ஏறப் போகுது? எல்லாருக்கும் பட்டா தான் தெரியும்" தீப்பொறிகளாக வார்த்தைகள் வெளிப்பட்டன.

"அம்மா, நீ அன்பாகவே என்னைப் பற்றிப் பேசமாட்டாயா? ஒவ்வொருத்தரோட அம்மா, அவுங்க பிள்ளைங்களைப் பத்தி என்னமா புகழுறாங்க. என்னை மற்றவங்க புகழும்போது நீ மட்டும் ஏம்மா என்னைப் பாராட்ட மாட்டேங்கிறே? உன்னோட பாராட்டு மொழியை, ஆறுதலான வார்த்தைகளைக் கேட்க எவ்வளவு ஆசையாக இருக்கிறேன். உன்னால் என்னைப் பாராட்டத்தான் முடியல. புண்படுத்தும்படியா பேசாமல் இருக்க முடியாதா?" என வாய்விட்டுக் கேட்கத்தான் நினைக்கிறேன். ஆனால் அழுகை தொண்டையை அடைக்கிறது. மனதிலே ஓர் உறுதி பிறக்கிறது. நான் வளர்ந்து பெரியவளாகி, எனக்கும் கல்யாணமாகிப் பிள்ளைகள் இருந்தால் நிச்சயம் இந்த அம்மா வளர்ப்பதுபோல் வளர்க்கமாட்டேன். அவர்களுடைய நியாயமான ஆசைகள் எதுவோ அதை நிறைவேற்றி அவர்களோட வெற்றிக்கு உறுதுணையாக இருப்பேன். அவர்களுக்கிடையே மனக்கசப்பு ஏற்படும்படியா நடந்துகொள்ளவே மாட்டேன் என்று உறுதி எடுத்துக் கொண்டேன்

காலங்கள்தாம் எவ்வளவு விரைவாக ஓடுகின்றன. இப்பொழுது நான் அன்பின் திருவுருவாக விளங்கும் ஒருவருக்கு மனைவி மட்டுமல்ல, நிறைவான வாழ்க்கையில் மகிழ்ச்சியின் விளிம்பில் நிற்கும் என் மூன்று குழந்தைகளுக்குத் தாய். ஒவ்வொருவரையும் எனது கட்டுப்பாட்டின்கீழ் அவரவர்களின் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றுகிறேன். அவர்களுக்கு என்னதான் சுதந்திரம் கொடுத்து வளர்த்தாலும் அவரவர்களுக்கு வரையறுக்கப்பட்ட வட்டத்தைத் தாண்டிச் செல்லாமலிருக்க அன்பினால் ஆதிக்கம் செலுத்துகிறேன்.

முதலில் பிறந்தவளான பூங்கொடிக்கு எப்படியாகிலும் பரத நாட்டியம் கற்றுக்கொடுக்க வேண்டும் என்றெண்ணினேன். ஆனால் அவளுக்கோ அதில் மனம் நாடவில்லை. பிடிக்காத ஒன்றில் கட்டாயத்தின் பேரில் ஈடுபடுத்தினால் நிச்சயம் நற்பலனை காணமுடியாதல்லவா? எனவே அவள் விரும்பியபடியே இசைத்துறையில் ஈடுபட அனுமதித்தேன். எனது இளம் பிராயத்தில் தோன்றிய ஆவலை நான் முளையிலேயே கிள்ளி எறிந்தாலும் அதன் வேர் இன்னும் நிலைத்து நிற்கிறதே. நடன நிகழ்ச்சிகளைக் காணும்போது என்னால் உணர்ச்சிவசப்படாமல் இருக்க முடியவில்லையே. எதை நான் கற்றுக்கொள்ள விரும்பி அது கானல் நீராகப் போய்விட்டதோ அதை என் மகளுக்குக் கற்பித்து அவள் மூலம் என்னுடைய ஆவலைப் பூர்த்தி செய்து கொள்ளவேண்டும் என்ற எண்ணம் இலட்சிய வெறியாகவே என்னுள் உருவாகிவிட்டது. ஆனால் என்னுடைய மகள் விரும்பாதபோது என்னுடைய கனவுகள் வெறும் கனவுகள்தானா? பல வருடங்களாக என் நெஞ்சினுள் ஊறிக் கிடக்கும் ஆசைகள் என்னோடு அழியத்தான் வேண்டுமா எனப் பலமுறை தனிமையில் புலம்பினேன்.

என்னுடைய புலம்பலுக்கு விடிவெள்ளியாகப் பிறந்தாள் மீரா. சிறு வயதிலேயே பரதக்கலை பற்றி எடுத்துக்கூறி அவளது ஆர்வத்தை வளர்த்தேன். பள்ளி நேரம் போக மீதி நேரத்தில் நடனப்பள்ளிக்கு அனுப்பி அவளுடைய பயிற்சிகளை அணுகிக் கவனித்தேன். காசுக்காகக் கலை விற்கப்படுகிற இந்நாளில், கலையைக் கலையாக மதித்து அந்தக் கலை வளர என் மகள் சேவைசெய்ய வேண்டும் என விரும்பினேன். நான் செய்ய முடியாத கலைத்தொண்டை என் மகள் செய்யவேண்டும் என்று எண்ணினேன். இக்கலையைத் தொடர்ந்து வளரச் செய்வதும் செய்யாததும் அவளுடைய பொறுப்பு. ஆனால் கலைத்தாய்க்குச் சேவைசெய்ய மேலுமொரு புதிய வித்து ஒன்றை உருவாக்கிவிட்டதில் மிகவும் பெருமிதம் அடைகிறேன். இதோ இன்னும் சில மணி நேரங்களில் நான் கலைத்தாய்க்குச் செய்ய விரும்பிய தொண்டு பூர்த்தியடைந்துவிடும். புறக்கண்களை மூடி அகக்கண்களினால் அரங்கேற்றத்தைக் கண்டு மகிழ்கிறேன். என்னுடைய எண்ணச் சுழல். மேலும் தொடர்வதற்குள் இடையே ஒரு பலத்த ஓசை. கண்ணைத் திறந்து பார்க்க நினைத்தும் அது முடியாமல் செயலிழந்து போகிறேன்.

அமைதியான சுற்றுப்புறச் சூழ்நிலையையும் மனிதர்களுடைய காலடி ஓசையையும் என்னால் உணர முடிகிறது. கண்களைத் திறக்க மனமில்லாமல் அந்த அமைதியில் மூழ்குகிறேன். திடீரென எண்ணத்தில் ஒரு விழிப்பு. "நாம் அரங்கேற்றத்திற்காகக் காரில் அல்லவா சென்று கொண்டிருக்கிறோம்" சிரமப்பட்டுக் கண்களைத் திறந்து பார்க்கிறேன்.

தூய வெண்ணிற ஆடையில் ஓர் இளம் பெண் அருகில் நிற்பது தெரிகிறது. பார்வையைச் சுழலவிடுகிறேன்.

"என்ன இது. நான் மருத்துவமனைக்கு எப்படி வந்தேன். அரங்கேற்றம் என்னவாயிற்று"

பதறி அடித்துக்கொண்டு எழ முயன்ற என்னைப் படுக்கையிலேயே இருக்குமாறு பார்த்துக்கொள்கிறாள் அந்தப் பெண். "அதோ! என் கணவர் வருகிறாரே. ஆ...! அவருடைய கையிலும் முகத்திலும் பிளாஸ்டர் ஒட்டப்பட்டிருக்கிறதே." "என்னங்க, உங்களுக்கு என்னங்க ஆச்சு. ஏன்..." அப்போதுதான் என் கையை நீட்ட முடியாமல் கட்டுப்போடப்பட்டிருப்பதை உணருகிறேன். வாய்விட்டுக் கேட்கமுடியாமல் கண்களால் வினவுகிறேன்.

"ஜானகி, நம்ப கார் ஆக்ஸிடெண்ட் ஆயிடுச்சி. வேகமாக எதிரில் வந்த லாரி வளைவில் பிரேக் பிடிக்காததினால் நம்ப கார் மேலே வந்து மோதிடுச்சு. நம்ப கார் டிரைவருக்கும், கதவோரத்தில் உட்கார்ந்திருந்த மீராவுக்கும் தான் பலமான அடி. மீராவுக்கு இன்னும் நினைவு திரும்பல. அவள் அந்த அறையில்தான் இருக்கிறாள்" என்று எதிர்த்திசையைச் சுட்டிக்காட்டினார். சுட்டிக்காட்டிய திசைக்கு நேரேயிருந்த நாட்காட்டியைப் பார்க்கிறேன்.

விபத்து நடந்து ரெண்டு நாளாயிடுச்சா. அப்போ நான்... "என்னங்க, நான் மீராவைப் பார்க்கணும். அவகிட்ட என்னை அழைச்சிட்டுப் போங்க" என்று கூறிய என்னிடம் மீராவைத் தொந்தரவு செய்யக்கூடாது என்று எச்சரித்தாள் நர்ஸ். அருகிலிருந்து பார்த்துவிட்டு வருவதாகக் கூறி என் கணவருடைய கைத்தாங்கலுடன் மீராவின் அறையை நோக்கி நடக்கிறேன்.

என் மகள் அங்கு வெயிலில் தூக்கியெறியப்பட்ட கொடியாகக் கிடக்கிறாள்.

"என்னங்க நம்ப மீராவுக்கு ஒண்ணும் ஆகலையே, இந்தத் தடவை இல்லாவிட்டாலும் அடுத்தமுறை அரங்கேற்றத்தை நடத்திவிடலாம் இல்லிங்களா" என்று கட்டுக்கடங்காத ஆர்வத்தோடு வினவுகிறேன்.

"ஐயோ ஜானு. உங்கிட்ட அதை எப்படிச் சொல்லுவேன், உன்னோட ஆசை எல்லாத்தையும் அந்த ஆண்டவன் நிராசையாக்கிட்டானே......! நிராசையாக்கிட்டானே! அவர் தலையிலடித்துக்கொண்டு குமுறிக் குமுறி அழுகிறார்."

"என்னங்க, நீங்க என்ன சொல்றீங்க. கொஞ்சம் புரியும்படியாத்தான் சொல்லுங்களேன்,"

"ஜானகி, மீரா..."

"மீராவுக்கு என்னங்க, மீராவுக்கு என்ன?"

"மீராவுக்கு ஒண்ணுமில்லை, ஆனா கதவில் அவளுடைய கால் சிக்கிச் சிதைந்துபோனதால், அவளுடைய உயிரைக் காப்பாத்துறதுக்காக வலது காலை எடுத்திட்டாங்க."

ஆயிரமாயிரம் எரிமலைகள் வெடித்துச் சிதறின. "ஓ...! ஓ...! என்னால் இந்தப் பயங்கர அதிர்ச்சியைத் தாங்கிக்கொள்ள முடியவில்லையே!



"தேனிலவைக் கழிக்க எங்கு போகிறீர்கள் மாப்பிள்ளை?"

"நிலவுக்கே போகப்போகிறோம் மாமா!"

—இரா. இராமராவ், தலைகர்

பயனுரை

ஆசிரியர் எழுதிவரும் குறள் விளக்கக் கட்டுரைகளால் உண்மையிலேயே தமிழ்ச் சமுதாயம் பல வகையிலும் நன்மை அடையும். இத்தகைய விளக்கவுரைகள் மிகமிக அவசியம்

—கே. கருப்பையா, சுங்கைவே

இரண்டும் தரமே!

"இறைவன் அழுகிறான்", "முடிவு" இரண்டுமே தரமான படைப்புக்கள். இப்படி நல்ல முத்தான சிறுகதைகளைப் "புதிய சமுதாய"த்தில் படிப்பதில் பெருமை கொள்கிறோம்!

—ந. பாலகிருஷ்ணன்,
சுங்கை சோ தோட்டம், ரவாங்

யாருக்குத் திருவிழா?

"இறைவன் அழுகிறான்" உண்மைச் சம்பவத்தை உணர்த்துகிறது. திருவிழா இறைவனுக்கா அல்லது படத்திற்கா? "படம் இல்லையேல் திருவிழா இல்லை" என்னும் நிலையையில் நம் இனத்தவர்கள் இருக்கிறார்கள். இறைவன் அழுகையை நிறுத்தவே மாட்டான்.

—எம் பன்னீர்,
நிக்கல் கார்டனர் தோட்டம்,
சிலாங்கூர்

படமும் பணமும்

கோயிலுக்குப் பணம் கொடுக்க மறுக்கிறார்கள்; ஆனால் படம் என்றதும் பணத்தை நீட்டுகிறார்கள். இப்படிப்பட்டவர்களை நினைத்து மனம் புலம்பத்தான் செய்கிறது. "இறைவன் அழுகிறான்" கதை என்னை மிகவும் கவர்ந்தது.

—வே. கமலா, கோலக்கங்சார்

பாதிப்பு

"இறைவன் அழுகிறான்" கருத்துள்ள கதையாக இருந்தாலும் ஒரு புகழ்பெற்ற திரைப்பட நடிகரை மட்டம் தட்டுவது இச்சிறுகதையின் உயிரோட்டத்தைப் பாதித்துவிட்டது என்றே கருதுகிறேன்.

—ஆர். லோகநாதன்,
ஸ்கூடாய், ஜொகூர்

நன்றி நன்றி

"இறைவன் அழுகிறான்" என்னும் என்னுடைய முதல் சிறுகதை-யை வெளியிட்டு என் எழுத்துக்கு ஆதரவளித்தமைக்கு மனமார்ந்த நன்றி.

இச்சிறுகதை என்னை மேலும் வளர்க்குமேயானால் அந்தப் பெருமை, எனக்குச் சிறுகதை இலக்கணம் போதித்துச் சிறுகதை எழுதும் ஆர்வத்தைத் தூண்டிய டாக்டர் இரா. தண்டாயுதத்தையும், நான் சார்ந்திருக்கும் கெடா மாநில எழுத்தாளர் - வாசகர் இயக்கத்தையுமே சாரும்.

—வ. முனியன், குரூன், கெடா

இணையற்ற எழுச்சி

எழுத்து, சமுதாயம் ஆகிய துறைகளில் "புதிய சமுதாயம்" ஓர் எழுச்சியை ஏற்படுத்த முடியும். நம் சமுதாயத்தில் வீணடிக்கப்படும் சக்திகளை ஒன்றிணைக்க வழிகோல வேண்டும்.

—ரெ. கார்த்திகேசு, பினாங்கு

பதிலுதவி

மாணவர்களுக்கு என்று ஒரு கேள்வி-பதில் பகுதியை வெளியிட்டால் எவ்வளவோ உதவியாக இருக்கும்.

—வெ. பழனியம்மாள்,
மாச்சாப் பாரு, மலாக்கா

வெகுவாய்க் கவர்ந்தது!

புதிய சமுதாயத்தில் என்னை வெகுவாகக் கவர்ந்தது "முருகுவைக் கேளுங்கள்" பகுதியே!

—குமாரி தி. தமிழரசி, தம்பின்

வருமுன் காக்க...

டாக்டர் ச. இராசரத்தினம் அவர்களின் "இருதய நோய்கள்" மருத்துவக் கட்டுரை வரவேற்கப்பட வேண்டிய ஒன்று.

—சு. அ. வீரசிம்மன், ஜொகூர்பாரு

ஒரு கல்லில்...

சிரிக்கவும் சிந்திக்கவும் வைக்கிறது "நையாண்டி மேளம்".

—ஆர். நடேசன், கே. சண்முகம்,
மலாக்கா

தவிக்கவிட்டு...

தன் கழுத்தில் தாலி ஏறும்வரை பொறுத்திருந்து விட்டு, தாலி ஏறியதும் பாலனையும் வாசகர்களையும் தவிக்கவிட்டு விட்டுப் போய்விட்டாளே கண்ணம்மா!

—ஐயாசாமி ஜமுனா, சுங்கை

கலங்கின கண்கள்

அகிலனின் தொடர்கதையில் "கண்ணம்மா காலமாகிவிட்டாள்" என்று படித்தவுடன் கண்கள் கலங்கிவிட்டன.

—பி. எஸ். ஆறுமுகம், கிள்ளான்

முடிவு ?

"பால்மரக் காட்டினிலே" தொடர்கதையில் கண்ணம்மாவின் முடிவைக்கண்டு உண்மையிலேயே மனம் கலங்கியது. நாவலாசிரியர் அகிலன் ஒரு நல்ல திருப்பத்தைக் கொண்டுவருவார் என்று எதிர்பார்க்கின்றேன்.

—மு. மாறன்,
மவுண்ட் ஆஸ்டின் தோட்டம்,
ஜொகூர்பாரு.

மகிழ்ச்சி

தமிழறிவுப்போட்டியின் பரிசுத் தொகையைக் கூட்டியிருப்பது குறித்து மகிழ்ச்சியடைகிறேன்.

—மு. சுப்பிரமணியம், ஸ்கூடாய்,
ஜொகூர்

தடை

இரா. கலாராமு எழுதிய "என்று தணியும் இந்த சினிமா மோகம்" எனும் கட்டுரை மிகவும் அருமை. நம் சமுதாயத்தின் சினிமா மோகம், பல வழிகளில் நம்முடைய வளர்ச்சிக்குத் தடையாக இருக்கிறது.

—அ. பத்மாவதி,
ஜொகூர் லாபிஸ் தோட்டம்.

தாலாட்டு

நீண்ட நாட்களுக்குப்பின் கவிஞர் நகைச்சுவைப்பித்தன் இயற்றிய "சிவபெருமான் தாலாட்டு" எனும் கவிதை நல்ல படைப்பு.

—சுப. சுப்பையா, கோலாலம்பூர்.

மேலும் மேலும்

"புதிய சமுதாயம்" மேன்மேலும் பல்லாயிரக்கணக்கான வாசகர்களின் பாராட்டுதலைப் பெற்று வளர்ச்சி அடையும் என்று கூறினால் அது மிகையாகாது.

—கே. பீட்டர் இராஜன்,
கோலாலம்பூர்

மாற்றலாமே!

"மலேசியமொழித் தேர்வில் வெற்றிபெற" என்னும் பகுதி மிகவும் அருமை. ஆனால் அதை மலேசிய மொழியிலேயே வெளியிட்டால் மிகவும் பயனாக இருக்கும்.

—த.மு. மனோகரன், காப்பார்

சுவையங்கம்

நடப்பு நிகழ்ச்சிகளைப் பொருத்தமாகத் தேர்ந்தெடுத்துச் சுவையான தலையங்கம் தீட்டிவிடுகிறீர்களே! தலையங்கம் உண்மையில் தலையாய அங்கமாகத்தான் உள்ளது

—மா. கருணாகரன், ஜொகூர்பாரு

நடுநிலை

எங்களைப் போன்றவர்களை ஊக்குவிக்கும் பொருட்டு, "புதிய சமுதாயம்" மேற்கொண்டிருக்கும் முயற்சிகளைப் பெரிதும் பாராட்டுகிறேன். பெரிய எழுத்தாளர்-சிறிய எழுத்தாளர் என்ற பாகுபாடின்றி, எல்லோருக்கும் சரிசமமான வாய்ப்பை வழங்கும் நடுநிலைக் கொள்கையைக் கண்டு மனமார மெச்சுகிறேன். இந்நிலை எப்போதும் நீடிக்க வேண்டும்.

—என். ஜெயபாலன் (நிர்மல்),
சிரம்பான்

முருகுவைக் கேளுங்கள்

எல். காத்தவராயன், ஜோகூர் பாரு

கே: நட்பு வளரக் காரணம் என்ன?
ப: பயன் கருதாத உதவிகள்.

கே: மதுரைமான், சுங்கை பூலோ

கே: சிங்கப்பூரின் உள்துறை அமைச்சின் விலாசம் என்ன?
ப: Pearls Hill, Singapore - 2.

ஏ. கே. சண்முகம், பந்தாய் ரெமிஸ்

கே: தமிழறிவுப் போட்டியின் பரிசுத்தொகையை 100 வெள்ளியாக உயர்த்திஞல் என்ன?
ப: உங்கள் விருப்பம் ஏற்கனவே நிறைவேறி விட்டதே!

எம். சாமிக்கண்ணு, டென்னிஸ் டவுன் தோட்டம், பாரிட் புந்தார்

கே: ஆசை எப்படிப்பட்டது? பாசம் எப்படிப் பட்டது?
ப: ஆசைக்கு எல்லே இல்லே, பாசத்திற்கு அணே இல்லே.


தி. க. பாதன், கெல்பின் தோட்டம், பகாவ்

கே: "எனக்கு அவரைத் தெரியும், இவரைத் தெரியும், என்னிடம் அடங்கவில்லேயென்ருல், உன்னே .." என்று கூறுபவன் என்ன தன்மையுடையவன் அண்ணு?
ப: மற்றவர்களே நியாயத்தால் வெல்லமுடியாமல் உருட்டி மிரட்டிப் பணிய வைக்கப் பார்க்கும் ஆணவக்காரர்!

ஐயாசாமி ஐமுரு, சுங்கை, பேரா

கே: ஒரு மாதத்திற்கு இரண்டு இதழ்கள் வெளியிடுவது ஏன்?
ப: வாசகர்களேப் 15 நாளுக்கு ஒருமுறை சந்திக்க வேண்டும் என்றும் ஆவல்தான் காரணம்.

கே: நம்மவர்கள் கோயிலுக்காக ஆயிரமாயிரம் செலவு செய்கிருர்கள். ஆனல் ஏழைகளுக்கு 'உதவ மனம் வருவதில்லே, ஏன்?



ப: மக்கள் தொண்டே மகேசன் தொண்டு என்பதை அறியாமல் இப்படியும் ஒரு சிலர் இருக்கக்கூடும்.

கே. ஜி. ஜெயராமன், சுங்கைப் பட்டாணி

கே: உணர்ச்சியுள்ளவன்தான் மனிதனு?
ப: உணர்ச்சியற்ற மரக்கட்டையை மனிதன் என்று எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்?

எம். சிங்காரவேலு, ஊத்தான் மெலிந்தாங், பேராக்

கே: முத்தமிழ் வித்தகரே, இன்றைய தமிழர் சமுதாயம் எதை நாடிப் பீடுநடை போடுகிறது?
ப: நிலம், வீடு, கல்வி, பொருளாதாரம் ஆகிய துறைகளில் முன்னேற வேண்டுமென்னும் துடிப்பு தமிழர் சமுதாயத்துக்கு இன்று பரவலாக முகிழ்த்திருப்பது நல்ல அறிகுறியாகும்.

கே: எல்லாவற்றிலும் சிறந்து விளங்கும் புதிய சமுதாயத்தில், "பேனு நண்பர்" பகுதி இடம் பெறும் சாத்தியம் உண்டா?
ப: பொறுத்திருங்கள். எதிர்காலத்தில் உங்கள் விருப்பத்தை நிறைவேற்ற முயல்வோம்.

என். எஸ். அப்துல் ஜலில், தஞ்சோங் மாலிம்

கே: ஒருவர், டி. வி. - ரேடியோ லேசென்ஸ் வைத்திருக்கிருர். அந்த ஒரே லேசென்ஸில் அவர் எத்தனே ரேடியோ வைத்திருக்கலாம்?
ப: எத்தனே வேண்டுமானுலும் வைத்திருக்கலாம்.

எஸ். ராஜேஸ்வரன், நோர்த் ஹாமாக் தோட்டம், கிள்ளான்

கே: கிழவி மேல் காதல் கொள்ளலாமா?



ப: ஔவைக்கிழவி மீதும், நமது அன்புக்குரிய பாட்டிகள் மீதும் தாராளமாகக் காதல் கொள்ளலாம். அவர்களேக் கட்டித் தழுவிக் கும்மாளமும் போடலாம்.

கு. அர்ச்சுனன், சிகாமட்

கே: குடியரசு நாட்டிற்கும் ஜனநாயக நாட்டிற்கும் உள்ள அரசியல் வேறுபாட்டினேச் சற்று விளக்கிக் கூறுவீர்களா?
ப: இரண்டும் ஒன்றுதான். குடியரசு என்பது தமிழ்ச்சொல்; ஜனநாயகம், அதே பொருளே உணர்த்தும் வடசொல்.

ஏ. எஸ். சிவன், பாமோல், குளுவாங்

கே: அண்ணு, நாம் வாழ்க்கையில் முன்னேறும் நேரத்தில், சில இடையூறுகள் நமக்குத் தொந்தரவு கொடுக்கின்றன. அவற்றைத் தவிர்க்க என்ன வழி?
ப: அலே இல்லாத கடலில் குளிக்க முடியாது. தொந்தரவுகளுக்கு இடையில்தான் அவற்றைச் சமாளித்து முன்னேறிச் செல்லவேண்டும்.

பி. சதாசிவன், கோலாலம்பூர்

கே: மனிதன் எதற்கு அடிமையாக இருக்கக்கூடாது?
ப: "நாமார்க்கும் குடியல்லோம்" என்று பாடிய திருநாவுக்கரசரின் கருத்துப்படி பரிபூரணனை இறைவன் ஒருவனுக்கே மனிதன் அடிமையாக இருக்கலாம். பூமியில் மற்ற யாருக்கும், எந்தச் சக்திக்கும் மனிதன் அடிமையாக இருக்கக்கூடாது.

திருமதி ருக்குமணி வேலு, குயின் கொக்கோ தோட்டம், தாவாவ், சாபா

கே: முருகு அண்ணு, நாங்கள் சாபா வந்துபத்து ஆண்டு நெருங்கிக்கொண்டு இருக்கிறது. நான் பலதடவை நிலம் கேட்டும் இதுவரைக்கும் எந்த ஒரு பதிலும் கிடைக்க வில்லை. இதற்குத் தாங்கள் கூறும் பதில் என்ன?

ப: சாபா மாநிலத்திற்குத் தொழிலாளர் அமைச்சின் ஏற்பாட்டில் பணிபுரியச்சென்ற தொழிலாளர் பலருக்கு, உங்களைப்போல் நிலம் கிடைக்கவில்லை, மாநிலக் குடியுரிமை கிடைக்கவில்லை, போதிய வாழ்க்கை வசதிகள் கிட்டவில்லை என்பன போன்ற குறைகள் இருந்துவருவது வெளிப்படை. இவற்றுக்குப் பரிகாரம் காண்பதற்கு ம. இ. கா. ஒரு விசாரணைக் குழுவைச் சாபா மாநிலத்திற்கு அனுப்பி வைத்து, அதன்பிறகு ஒரு முழுமையான மகஜரை அங்குள்ள இந்தியத் தொழிலாளர்களின் சார்பில் மாநில அரசுக்கு வழங்குவது இக்குறைகளுக்குத் தீர்வு காண்பதற்கு உதவியாக இருக்கும். டத்தோ அரிஸ் சாலேயை முதலமைச்சராகக்கொண்டு நல்ல நிர்வாகத்தை நடத்தி வருகிற மாநில அரசாங்கம் அங்குக் குடியேறியிருக்கிற தீபகற்ப மலேசியத் தொழிலாளர்களின்பால் பரிவோடு நடக்குமென்று எதிர்பார்ப்பதில் தவறில்லை.

தி. செ. சுந்தரம், ரெங்கம் தோட்டம், ஜோகூர்

கே: அண்ணு! இந்து சமய மேன்மைகளை எடுத்துரைக்கும்போது இளைஞர்கள் சிலர் கேலி செய்கின்றனரே! இவர்களுக்குத் தங்களின் அறிவுரை யாது?



ப: பக்குவமடையாத இத்தகைய இளைஞர்களையும் ஈர்க்கும் விதத்தில் இந்து சமயப் பிரச்சாரமும் சமய நடைமுறைகளும் அமையும்படிச் சமயத் தலைவர்கள் கவனமாகப் பார்த்துக்கொண்டால் கேலி பேசுகின்ற இளைஞர்களையும் திருத்திவிடமுடியும்.

எம். தங்கம், புக்கிட் சீடிம் தோட்டம், பந்திங்

கே: ஒருவர் கல்வியில் முன்னேறவோ பரீட்சையில் தேறவோ அவருக்குச் சொந்த அறிவு தேவையா, தெய்வத்தின் அருள் தேவையா?

ப: எல்லாவற்றுக்குமே தெய்வத்தின் துணை மனிதனுக்குத் தேவைப்படுகிறது. அதுபோலவே கல்வி முன்னேற்றத்துக்கும் மாணவரின் புத்திக் கூர்மை, உழைப்பு, கவனமான படிப்பு ஆகியவற்றோடு தெய்வத்தின் துணையும் தேவையே.

மா. கார்த்தியாயினி நாயர், கோப்பெங்

கே: அண்ணு! சில அமைப்புக்களில் உள்ள தலைவர்கள் மேடையில் நின்று 'சம்சுவை ஒழிக்கவேண்டும், அனைவரும் ஒத்துழைக்கவேண்டும்' என்ற முழக்கத்துடன் கூட்டத்தை முடிக்கிறார்கள். ஆனல் நடப்பது என்ன தெரியுமா? 'நாம் போகிற பாதையில்தான் சாராயக் கடை இருக்கிறது. இன்றைக்கு நல்ல ருசியாக இருக்கும். எனக்கு எப்படித் தெரியும் என்றால் நான் பக்கத்து வீட்டுப் பொடியனிடம் வாங்கிவரச் சொல்லிச் சாப்பிட்டுப் பார்த்தேன். அப்போது தெரிந்தது இன்றைய சாராயம் எவ்வளவு ருசியென்று; பரவாயில்லை, இன்று வேண்டுமானல் நான் எல்லோருக்கும் இலவசமாக விருந்தளிக்கிறேன்' என்று கூறும் தலைவர்களைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ப: இவர்களைத் தலைவர்கள் என்று எப்படிச் சொல்வது? தறுதலைகள் என்று சொல்வதே பொருந்தும்!

க. ஆறுமுகம், பெட்போர்ட் தோட்டம், சிலிம்ரிவர்

கே: உலகிலேயே அழியாதது எது?

ப: மனிதனின் போதை நாட்டம்.

க. அழகர்சாமி, கம்போங் திமியாங், ஈப்போ

கே: ஒருவன் எப்பொழுது உயர்ந்தவனுகிறான்?

ப: தன்னைக்காட்டிலும் பிறரைப்பற்றி அதிகமாக நினைக்கும்போது.

சந்திரசேகரன் பாலகுரு, அலோர்ஸ்டார்

கே: அண்ணு, மாறுத அன்புள்ளவரை எப்படிக் கண்டறிவது?

ப: உங்களுக்குத் துன்பம் வந்தபோதும் பக்கத்தில் அவர் நிச்சயம் இருப்பார்.

கே: தாங்கள் அடிக்கடி எதைப்பற்றிச் சிந்திப்பீர்கள்?

ப: ஊர் உலகம் பொருட்படுத்தக்கூடிய சமூகமாக மலேசிய இந்திய சமூகம் மாறுகிற நாள் விரைவில் வாராதா என்றே என் உள்ளம் சிந்தித்துக்கொண்டிருக்கிறது.

ஆர். லோகநாதன், ஸ்கூடாய்

கே: வானில் பறந்து திரியும் பறவைகளைப்போல் மனிதன் இன்பமாய் வாழ வழி உண்டா?


ப: மனச்சுமை ஏதுமின்றி கவலையற்று ராஜாக்களாகப் பலர் வாழ்வதைக் காண முடிகிறது. அத்தகைய மனப்பக்குவத்தைப் பெற்றுவிட்டால் எவரும் இன்பமாக வாழமுடியும்.

கே: எதிலும் ஏமாற்றம், எதிலும் மனக்குழப்பம், எதிலும் விரக்தி – இந்தச் சூழலில் சிக்குண்டு தவிக்கும் எனக்குத் தாங்கள் கூறும் அறிவுரை யாது அண்ணு?

ப: இம்மாதிரி சந்தர்ப்பத்தில் நீங்கள் பூமியைக் காட்டிலும் பொறுமைசாலியாக நடந்துகொள்ள வேண்டும். எல்லோரிடமும் பணிந்து அனைவரின் நட்பையும் பெறுவதற்குப் பாடுபடவேண்டும். இச்சமயத்தில் தெய்வத்தின் துணையை நாடி பிரார்த்தனை செய்வது நல்ல பயன் அளிக்கும்.

க. பலராமன், உலுபெர்ணம் தோட்டம், பேராக்

கே: எதிர்காலத்தில் நமது தாய்மொழியாகிய தமிழ் மொழியின் நிலை இம்மலேசிய நாட்டில் எவ்வாறு இருக்கும்?



ப: எதிர்காலத்திலும் நமது தாய்மொழி மலேசியத் திருநாட்டில் தழைத்தோங்கும் என்பதே என் திடமான நம்பிக்கை.

பரசுராமன், கோத்தாபாரு

கே: பெண் பிரதமர்கள் இப்படித் திடீர் திடீரென அரசியலில் படு வீழ்ச்சியடைந்துவருவது எதைக்காட்டுகிறது?

ப: அந்தப் பிரதமர்களின் ஆட்சி அந்தந்த நாட்டு மக்களுக்குப் பிடிக்கவில்லை என்பதையே காட்டுகிறது. எதிர்காலத்தில் அரசியலில் நீடித்து நிற்கக் கூடிய பெண் பிரதமர்கள் மேலும் பலர் தோன்றுவர் என்று எதிர்பார்ப்போமாக.

தாரா எழிலழகன், சுங்கைவே

கே: கவர்ச்சியில் மதிமயங்காத மனிதன் உலகில் இருப்பானு?

ப: அத்தகைய அபூர்வ மனிதர்களும் ஆங்காங்கு இருக்கத்தான் செய்கிறார்கள்.

எம். நாராயணசாமி, புக்கிட் பிரந்தம் தோட்டம், ரவாங்

கே: அண்ணு, MARA என்பதன் பொருள் என்ன?

ப: Majlis Amanah Rakyat. மக்கள் நல்வாழ்வுக் கழகம்.

கே. எஸ். எம். ஹாமீம் முகம்மது, சபாக் பெர்ணம்

கே: தங்களுக்குப் பிடித்தது எது? பிடிக்காதது எது?
ப: பிடித்தது வெற்றிலைபாக்கு. பிடிக்காதது பீடி, சிகரெட்.

என். கலைச்செல்வன், சிரம்பான்

கே: "அகந்தை," அறிஞர்க்கு அதிகமா அல்லது அறிவிலார்க்கு அதிகமா?
ப: அகந்தை. அறிஞர்க்கு மிகுந்திருந்தால் நியாயம் உண்டு; ஆனால் உலகத்தில் அறிவில்லாத மூடர்களே குறைகுடம் தளும்புவதுபோல் ஆணவம் மிகுந்து அதிகம் ஆடுகிறார்கள்.

ஏ. சுப்பிரமணியம், சுங்கை

கே: மனித வாழ்க்கையில் உள்ள பெரிய ஆச்சரியம் என்ன?



ப: ஒருவனுக்கு வாய்க்கின்ற இல்லக்கிழத்தி.

கே: அன்பும் பண்பும் நிறைந்தவர்கள் யார்?
ப: அறியாப் பருவத்திலுள்ள குழந்தைகள்.

கோ. மல்லிகாரெட்டி, சிம்பாங் அம்பாட், பி. வெ.

கே: மனச்சாட்சிக்கு அஞ்சி வாழும் ஒருத்தியின் எதிர்காலம் எப்படியிருக்கும்?
ப: ஊர் உலகம் மதிக்கத்தக்கதாக ஒளிவீசும்.

எம். மணிமோகன், கோல சிலாங்கூர்

கே: அண்ணா, என் நண்பர் ஒருவர் எல். சி. இ. சோதனைக்குத் தினந்தோறும் காலை முதல் இரவு வரை படிக்கிறார். சோதனையில் இவர் எவ்வளவு புள்ளிகள் எடுப்பார்?
ப: படிக்கும் நேரத்தை மட்டும் வைத்துத் தேர்வில் பெறப்போகும் புள்ளிகளைக் கணிக்க இயலாது. தேர்வில் வருகிற வெற்றி, கடுமையான படிப்பு, அதே சமயத்தில் புத்திக்கூர்மை, தேர்வில் கேட்கப்படுகிற வினாக்களின் நிலை மற்றும் மாணவரின் அன்றைய மனநிலை முதலான பல அம்சங்களையும் பொறுத்திருக்கிறது. எனினும் உங்கள் நண்பர் நிறையப் புள்ளிகள் பெற வாழ்த்துகிறேன்.

கே. பீட்டர் இராஜன், கோலாலம்பூர்

கே: போதைப் பொருளுக்கு மிக எளிதில் அடிமையாகி விடுபவர்கள் படித்தவர்களா, படிக்காதவர்களா?
ப: புள்ளி விவரங்களைப் பார்க்கும்போது படித்தவர்களே அதிகமென்று தோன்றுகிறது; இதில் மாணவ மாணவிகளும் அதிகமிருப்பது பரிதாபம்.

த. மு. மனோகரன், காப்பார்

கே: தமிழாசிரியர்கள் அரசியலில் ஈடுபடுவதைப் பற்றித் தங்களின் கருத்தென்ன?
ப: தமிழாசிரியர்கள் இந்திய சமூகத்தின் பொது வாழ்க்கையில் எல்லாத் துறைகளிலும் முன்னணியில் நிற்பதால் அரசியலிலும் அவர்களின் பங்கு தவிர்க்கமுடியாத ஒன்றாக அமைந்துவிட்டது. பிறமொழிப்பள்ளி ஆசிரியர்களும் அரசியலில் தீவிர பங்கு கொள்வதைக் காணமுடிகிறது. என்றாலும் தமிழ்ப்பள்ளி ஆசிரியர்கள் தங்களின் அரசியல் ஈடுபாட்டினால் தங்களின் வாழ்க்கைத் தொழிலான ஆசிரியர் பணி எவ்வகையாலும் பாதிப்படையாதபடி கவனமாக இருப்பது முக்கியமாகும்.

ந. உதயபாலன், சுங்கை சோ தோட்டம், ரவாங்

கே: தெரியாதவர்களுக்குத் தெரியாததைப் புரியவைத்து விடலாம்; தெரிந்தும் தெரியாமல் நடிப்பவர்களுக்கு எப்படிப் புரியவைப்பது?
ப: உண்மைகளை அவர்கள் அதிரும்படியாக எடுத்துப் போட்டு உடைத்தால்தான் அவர்களுக்குப் புரியும்.

குமாரி கி. சரஸ்வதி, பீடோர்

கே: புதிய சமுதாயத்தின் பக்கங்களைக் கூட்டினால் நன்றாய் இருக்குமே!



ப: எங்களுக்கும் ஆசைதான். சற்றுப் பொறுமையாக இருங்கள். படிப்படியாக வாசகர்களின் விருப்பங்களை நிறைவேற்ற முயலுவோம்.

கே: உண்மை ஏன் சில சமயங்களில் தூங்கிக் கொண்டிருக்கிறது?
ப: பொய்யின் வலுவான முற்றுகை காரணமாக இருக்கக்கூடும்.

கே: கெட்டதை மறக்க, நல்லதை நினைக்க ஒருவழி கூறுங்கள்?
ப: செவிக்கினிய இசையைக் கேட்கலாம், சிந்தைக்கு இனிய நூல்களைப் படிக்கலாம், நல்ல நட்பினரோடு கலந்து பழகலாம்.

குமாரி அமுதா, கூலாய், ஜோகூர்

கே: என் தோழி ஒருவரைக் காதலிக்கிறாள்; அவருக்கு வயது 28. என் தோழிக்கு வயது 19. தோழியின் தாயார் சம்பிரதாயப்படித் திருமணம் செய்யவேண்டும் என்கிறார். அவள் காதலரின் அம்மாவோ பதிவுத் திருமணம் செய்துகொள்ளும்படிக் கூறுகிறார். என் தோழியைக் காப்பாற்ற நீங்களே ஒரு நல்ல வழியைக் கூறுங்கள்.
ப: முதலில் பதிவுத்திருமணத்தையும் பிறகு சம்பிரதாயத்திருமண விருந்தையும் நடத்திவிட்டால் இரு தரப்புக்கும் மனம் நிறையுமே! இதில் பிடிவாதத்திற்கு எந்தக் காரணமும் இருக்க நியாயமில்லை.

பி. பெருமாள், புக்கிட் சீடிங் தோட்டம், பந்திங்

கே: ஒருவர் இறந்த பிறகு கிடைக்கும் புகழ் அவர் உயிரோடு இருக்கும்போது கிடைப்பதில்லையே ஏன்?
ப: எந்த மனிதரின் அருமையையும் அவர் மறைந்த பிறகுதான் உலகம் பூரணமாக மதிப்பிடத்தொடங்குகிறது. அத்துடன் வாழும் காலத்தில் பொறாமைக் கண்ணோடு பார்க்கின்றவர்கள்கூட அவர் மறைந்த பிறகு தமக்கு அவரால் போட்டி இல்லை என்று நிம்மதியடைந்து போற்றத் தொடங்குகிறார்கள்.

ந. முத்து, கிள்ளான்

கே: தெம்பை இழந்தவனுக்குக் கோல் துணை. அன்பை இழந்தவனுக்கு எது துணை?
ப: கண்ணீரே துணை.

என். நல்லதம்பி, ஜெரம் பாடாங் தோட்டம், பகோ

கே: உகாண்டா அதிபர் இடி அமினைப்பற்றித் தங்கள் கருத்து என்ன?
ப: இன்றைய உலக அரசியலில் பரபரப்பூட்டும் செய்தி மன்னராக, பழைய துள்ளக்கை நினைவூட்டிக் கொண்டிருப்பவர் இடி அமின்.

தக்க எழுத்துக்களைக் கொண்டு கட்டங்களை நிரப்ப வேண்டும்.

2. ஒரு கட்டத்தில் ஓரெழுத்து மட்டுமே எழுதப்படவேண்டும்.

3. அழித்தல், அடித்தல் திருத்தல், கூடாது. "பால் பாயிண்ட்"

கூடாது.

4. சரியான விடை எழுதியவர் வெ.100 பரிசு பெறுவார். ஒருவருக்கு மேற்பட்டோர் வெற்றி பெறுவார்களாயின் இத்தொகை பகிர்ந்து அளிக்கப்படும்.

5. எவரும் சரியான விடையை

வெ.10 வழங்கப்படும். ஓரே எண்ணிக்கையிலான மிகக் குறைந்த பிழைகளுடைய விடையைப் பலர் எழுதியிருப்பின் வெ.10 பகிர்ந்தளிக்கப்படும். எஞ்சியவெ.90 அடுத்த போட்டிக்கானபரிசுத்தொகையோடு சேர்க்கப்படும்.

படும் விடைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

7. "புதிய சமுதாயத்தில்" பணியாற்றுபவர்களும் அவர்தம் குடும்பத்தினரும் போட்டியில் கலந்துகொள்ள இயலாது.

9. இறுதிநாள் 10-9-1977

10. கூப்பன்களை அனுப்பவேண்டிய முகவரி:-

புதிய சமுதாயம்

131, Jalan Tuanku Abdul Rahman, [2nd Floor] Kuala Lumpur.

■	1	■	2		
3				■	■
■		■	4	5	
6	■	7	■		■
8	9			■	10
11			■	12	

தமிழறிவுப்போட்டி-6

இறுதிநாள் 10-9-77

பெயர்: ______________________

அடையாள அட்டை எண்: ______________________

முகவரி: ______________________

____

____

கையொப்பம்

பரிசு $100/=

இடமிருந்து வலம்:

2. இது இல்லாத பெண்களின் வாழ்க்கை ஒளிமயமாக இருக்கும் என உறுதி கூற முடியாது.
3. அரசாங்கம் இதைப் போட்டுத்தான் எதையும் செயற்படுத்தும்.
4. கோவலனின் நெஞ்சம் கவர்ந்தவள்.
8. ஒரு திசை, மாறிக் கிடக்கிறது.
11. (ஒழுங்கு படுத்தினால்) நடராசப் பெருமானின் திருத்தலம்.
12. மற்றவர்களுக்காக உழைத்துச் சொந்தத்தில் முன்னேறு இருப்பவர்களுக்கு உவமை.

மேலிருந்து கீழ்:

1. பெண்களில் சிலருக்குக் கூந்தல் இப்படியும் இருப்பதுண்டு.
2. பெண்களுக்குக் கிடைக்கும் பதவிகளில் மிக உயர்ந்த பதவி.
5. எண்சாண் உடம்புக்கு இது தானே பிரதானம்?
6. இராவணன் இதிலும் சிறந்த வனாக விளங்கினான்.
7. இது இல்லாமல் தமிழ்ப் படமா?
9. வாழைமரத்தில் இது ஒன்றுக்கு மேல் இருப்பது அதிசயம்!
10. அடிபடுவதே இதன் தலைவிதி!

தமிழறிவுப் போட்டி 5 முடிவு

1 மா	து	■	க	■	து
■	யி	■	ட்	டு	ம்
க	ல்	■	டு	ட்	ம
ரு	■	க	ப்	ப	ல்
மை	ஐ	■	பா	■	■
■	க	ற்	டு	க	ண்

தமிழறிவுப் போட்டி 5இல் நான்கு பேர் சரியாகக் கூப்பன்களைப் பூர்த்தி செய்துள்ளனர். "போதை தருவது இது" என்பதற்கு ஆண்களில் பெரும்பாலோர் "மது" என்று குறிப்பிட்டுள்ளனர். பெண்களில் பெரும்பாலோர் "மாது" எனக் குறிப்பிட்டுள்ளனர். எங்களின் விடையும் "மாது" என்பதுதான்.

பரிசுபெற்ற நால்வரின் விவரம்:

1. திருமதி வேலாயுதம், சிகாமட், ஜோகூர்.
2. மா. தேவசுந்தரி, புதுக்கிராமம், சுங்கை பிலேக், சிலாங்கூர்.
3. வி. பங்கஜம், யுனைடெட் ஆயர் பூத்தே தோட்டம், பகாவ்.
4. எஸ்.ஏ. வீரசிம்மன், ஜோகூர் பாரு.


பரிசு பெற்றவர்களுக்குப் பாராட்டு. இவர்களுக்குத் தலா $12.50 அனுப்பிவைக்கப்படும்.

தலைநகரின் தலைசிறந்த பயண ஏற்பாட்டாளர்கள்

ஐ. சி. சி. டிராவல்

மெர்தேகா நல்வாழ்த்துக்கள்!

பள்ளி ஆசிரியர்களின் வேண்டு
கோளுக்கிணங்க எதிர்வரும்
நவம்பர், டிசம்பர் விடுமுறையில்
மிக குறைந்த கட்டணத்தில்
தமிழ் நாட்டு சுற்றுப்பயண
ஏற்பாட்டு வாரியத்தின் கீழ், சிறப்பு
தென்னிந்திய சுற்றுலா ஏற்பாடு
செய்துள்ளோம்



இந்த ஆண்டின்
தென் இந்தியச் சுற்றுலா
தேதிகள் (22 நாட்கள்)
புறப்படும் தேதிகள்
12-11-77
19-11-77
3-12-77

இந்த ஆண்டின்
வட இந்தியச் சுற்றுலா
தேதிகள்
புறப்படும் தேதிகள்
1-10-77
12-11-77
7-12-77
கட்டணம் $2,150

உலகெங்கும் பயணம் செய்வதற்கான டிக்கெட்டுகள் பெற
எங்களை உடனே அணுகுங்கள்!

மேல் விவரங்களுக்கு:-

40, முதல் மாடி, ஜாலான் துவாங்கு அப்துல் ரஹ்மான், கோலாலம்பூர். போன்: 85032, 85026.

19, லோரோங் திங்காட் [ரெம்பாவ் ஸ்திரீட் அருகில்] கிள்ளான். போன்: 383022.

111, ஜாலான் சேம்பர்லின், ஈப்போ. போன்: 512270. சிங்கப்பூர்-02-70798, 70751